



அறைவு 03 இயம் 14 November 01-07, 2014

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்


# மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 16 விலை : 30.00



# கிழக்கில் தொடரும் போராட்டம்

## பொதுச்சுகாதாரம் கடும் பாதிப்பு

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்டுள்ள களப் பணிப்புறக்கணிப்புப் போராட்டமானது இரண்டு வாரங்களை எட்டியுள்ள நிலையில் பொதுச்சுகாதாரமானது கடும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஒருவருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள இடமாற்ற

### மாகாண சுகாதார அமைச்சும் மாகாண சுகாதார சேவைப் பணிமனையும் அமைதி !!!

நடவடிக்கையானது தாபன நிர்வாக முறைமைக்கு அமைவாக நடைபெறவில்லை என்பதைக் காரணம் காட்டி கிழக்கு மாகாணப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தொழிற்சங்க நடவடிக்கையை

13

## கங்குவேலி, தென்னைமரவாடியில் தமிழர்கள் தடுக்கப்படுகின்றனர்

### பாராளுமன்றில் சுமந்திரன்



திருகோணமலை மாவட்டத்தில் அண்மையில் நானே சென்று கண்டேன். கங்குவேலி மற்றும் தென்னமரவடி ஆகிய - இரண்டு பகுதிகளில் இக்காணிகளில் பயிர்ச்செய்து வாழ்ந்து, இடம்பெயர்ந்து, திரும்பிவந்து மீண்டும் பயிர்ச் செய்கையைத் தொடங்கிய மக்கள் தமது காணிகளில் பயிர்ச் செய்யவிடாது தடுக்கப்படுகின்றனர் என பாராளுமன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசியபோது தற்போது, அரசாங்க உத்தியோகத்தர்கள் அவர்களுக்கு முட்டுக் கட்டை இடுகின்றனர், ஏனையவர்களுக்குச் சார்பாக இருந்து கொண்டு காணி அனுமதிப் பத்திரங்கள் வைத்திருப்பவர்களைக் கூட அக் காணிகளில் பயிர்ச்செய்ய விடாது தடுக்கின்றனர்.

13

## இருளில் மூழ்குமா உலகம் ?...



இந்த வருடம் டிசம்பர் மாதம் 16ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை உலகம் முழுதும் இருளாக தொடர்ந்து இருக்குமென நாசா நிறுவன தலைவர் தெரிவித்துள்ளார் என சர்வதேசத் தமிழ் ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
இந்த இருள் சூழ்ந்த நாட்களில் ஓர் பயங்கர சூரிய

13

## சனாதிபதி திருமலையில்...

அரச அலுவலர்களுக்கான
மோட்டார் சைக்கிள் வினியோகம்



## மலைமுரசின் அனுசரணையில் "மக்கள் குறைகேள் அலுவலகம்"

திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அவற்றை உரிய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு சென்று தீர்வினைப் பெற்றுக்கொடுக்கும் முயற்சியை மேற்கொள்வதற்காக "மக்கள் குறைகேள் அலுவலகத்தை" மலைமுரசு ஆரம்பித்துள்ளது.

இவ் அலுவலகத்திற்குத் தமிழ் மக்கள் தொலைபேசியூடாகவோ அல்லது எழுத்து மூலமோ தமது குறைகளைத் தெரிவிக்க முடியும் என மலைமுரசின் பிரதம ஆசிரியர் தெரிவித்தார்.


மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சனைகள் ஊழல், லஞ்சம், போதைப்பொருள் பாவனை மற்றும் அனைத்துச்

13





Sugirtha Stationers



காகிதாதிகள் மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்கள்

378/380 Court Road, Trincomalee

026 4905921-026 4595374

அரச அங்கீகாரம் பெற்ற வினியோகத்தர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com 026 2227677

## அதிகாரமும் அலட்சியமும்

அதிகாரம் என்பது பற்றிய சிந்தனைகள் காலத்திற்குக் காலம் பல மாற்றங்களுக்கு உட்பட்டு வந்திருக்கின்றது.

அதிகாரத்தின் மிகப் பிந்திய வடிவத்தினை சரியாக வரைவிலக்கனப்படுத்திய பெருமை கார்ல்மார்க்ஸைச் சாரும். அவர் அரசு என்பதனை "வர்க்கங்களின் தோற்றத்துடன் உருவாகி ஆளும் வர்க்கத்தின் நலன்களுக்காக செயற்படுகின்ற கருவி" என வரைந்த போதே அதிகாரம் அக்கருவியை இயக்கும் வலு என்பதாக பரிணமித்து விட்டது.

ரூசோவினால் கூறப்பட்ட "மக்களினால் மக்களுக்காக உருவாக்கப்பட்ட நிறுவனம் அரசு" என்ற கருதுகோளைக் கடுமையாக மறுதலித்து மார்க்ஸ் உருவாக்கிய கடைசிக் கருதுகோள் தான் இன்றும் வலுவிலுள்ளது.

இன்று மார்க்ஸ்சின் கருதுகோள் மிகப் பிரமாண்டமாக உருவெடுத்து தாம் பிரதிநிதித்துவம் செய்கின்ற மக்களின் மீது தடையற்ற அதிகாரத்தை பிரயோகிக்கின்ற உரிமையை அரசு கொள்ளத் தொடங்கியுள்ளது என்பதை கிழக்கில் 11 நாளாகத் தொடர்கின்ற பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களின் களவேலைப் புறக்கணிப்பைச் சட்டைசெய்யாத கிழக்கு மாகாண அரசு வெளிப்படையாகக் காட்டிநிற்கின்றது.

இந்தப் பதினொரு நாட்களிலும் கிழக்கில் எவரும் அச்சமின்றி பழுதான உணவுவகைகளை மக்களுக்கு விற்பனை செய்திருக்க முடியும். இறந்து சில நாட்களான மிருகங்களை வெட்டி இறைச்சிக்காக விற்பனை செய்திருக்க முடியும். டெங்கு நுளம்புகளை யாரும் பெருகச் செய்திருக்கலாம். மரக்கறிகளுக்கும் பழங்களுக்கும் நஞ்சைக்கலந்து புதுப்பிக்கச் செய்திருக்கலாம்.

இன்னும் என்னென்னவோ நடந்திருக்கலாம். ஆனால் அதைப்பற்றிய சிந்தனைகள் எதுவுமின்றி கிழக்கு மாகாண அரசு, அரச தலைவரின் வருகையைப் பற்றியும், தமது அன்றாட நடவடிக்கைகள் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருக்கின்றது.

அதிகாரம் கிடைக்கும் வரைக்கும் ஆசைவார்த்தைகளை மக்களுக்கு இறைக்கும் ஆட்சிக் கட்டில் உள்ளவர்கள் அதிகாரம் கிடைத்தவுடன் கையில் ஏந்தும் அடுத்த தடி அலட்சியம் என்பதுதான்.

அந்த அலட்சியம் மக்களின் அல்லலுறும் வாழ்க்கைக்கு எதுவாகப் போவதைப்பற்றி யாரும் கருத்திற்கொள்வதில்லை.

தேசத்தின் மிக முக்கியமான பணியான பொதுச்சுகாதாரம் செயற்படாதிருக்கின்ற நிலையில் மக்கள் கூட அமைதியாயிருப்பது இந்த நாட்டின் மிகப் பெரிய சாபக்கேடு.

அலட்சியமாய் இருக்கின்ற அதிகாரம் மிக்கவர்களை மக்கள் தட்டிக் கேட்பதென்பது இலங்கையில் இனங்களுக்கிடையிலனெ ஒற்றுமை மலர்ந்த பின்னர் தான் சாத்தியமாகும்.

ஏனெனில் அலட்சியம் மிக்கவர்களைத் தட்டிக் கேட்க முன்வருபவர்கள் எந்த இனத்தவர் என்பதையும் அலட்சியம் செய்தவர் எந்த இனத்தவர் என்பதையும் தான் பொதுச்சமூகம் முதலில் பார்க்கின்றதேயொழிய அலட்சியம் செய்தவர்களால் தமது இனத்திற்கும் ஏற்பட்ட அழிவுகள் எவை என்பதைப் பற்றிக் கிஞ்சித்தேனும் சிந்திப்பதில்லை.


இனமுரண்பாடுகளை ஊட்டிவிட்டு அரசியல் செய்பவர்கள் அலட்சியம் செய்பவர்களாக இருப்பதுடன் அதிகாரத்திலும் இருக்கின்றார்கள் என்பதை நாம் புரிந்துகொள்வோமா?

## வீடுகளைக் கையளித்தார் விமல்



அரச உத்தியோகத்தர்களுக்கென பெரிய குளம் திருகோணமலையில் அமைக்கப்பட்ட வீடுகளை வீடமைப்பு நிர்மாண வசதித்துறை அமைச்சர் விமல் வீரவன்ச கடந்த சனிக்கிழமை பயணாளிகளிடம் கையளித்தார். இந்நிகழ்வில் கிழக்கின் முதலமைச்சரும். கலந்து கொண்டார்.

## செத்தொதுங்கும் மீன்கள் மீது ஆராய்ச்சி



திருகோணமலை, கட்டைப்- பறிச்சான் இறால் பாலக் களப்பில் கடந்த சில நாட்களாக நீர்வாழ் உயிரினங்கள் இறந்த நிலையில் கரையொதுங்கி வருகின்றன. இதனையடுத்து கரையொதுங்கிய மீன்கள் சில பரிசோதனைகளுக்காக கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கொழும்பிலுள்ள கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்திற்கு இவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, மூதூர் கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை, களப்பில் உயிருடன் பிடிக்கப்படும் மீன்களை உண்பதால் எந்தவித பாதிப்பும் இல்லை என மூதூர் தமிழ் பிரதேச மீனவர் சமாஜ தலைவர் என்.கிருஸ்ணபிள்ளை தெரிவித்தார்.

அத்துடன், இறந்ததன் பின்னர் பிடிக்கப்படும் மீன்களையோ மயங்கிய நிலையில் பிடிக்கப்படும் மீன்களையோ உண்பது பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## தாக்குதலுக்குள்ளாகும் மனைவிகள்

வாழைச்சேனையில் கணவன்மாரால் தாக்கப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு வரும் மனைவிமார்களின்தொகை வெகுவாக அதிகரித்து வருவதாக ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளன.

வாழைச்சேனையின் கிரான், வாழைச்சேனை-முஸ்லிம் மற்றும் தமிழ் பிரிவு, ஓட்டமாவடி ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளில் அடங்கும் எல்லைக் கிராமங்களான காவத்தமுனை, பாலைக்காட்டுவெட்டை, ரிதிதென்ன, ஜெயந்தியாய, மாஞ்சோலை, செம்மணோடை, பிறைந்துரைச்சேனை, கல்குடா, புதுக்குடியிருப்பு, சுங்காங்கேணி, கருவாக்கேணி, வாகனேரி, மினுமினுத்தவெளி போன்ற பகுதிகளிலேயே இச்சம்பவங்கள் நடந்தேறி வருவது கண்டறியப்பட்டுள்ளன.



## சுத்துமாகியது மூத்தனார் குளம்

மூதூர் நகரத்தில் அமைந்துள்ள மூத்தனார் குளம் பாரிய சிரமதானம் மூலம் 25.10.2014 சனிக்கிழமை சுத்தம் செய்யப்பட்டது.

மூதூர் பிரதேச செயலாளர் என். பிரதீபனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இச்சிரமதானப் பணியில் மூதூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்களோடு மூதூர் பஸார் பள்ளிவாசல் நிர்வாகிகள், ஜாயா நகர் மற்றும் மூதூர் வெளி கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், ஊர் மக்களென பெருந்தொகையானோர் ஒன்றிணைந்து ஈடுபட்டனர்.

இதன்போது குளத்தில் நிறைந்திருந்த குப்பை கூளங்கள் அகற்றப்பட்டதோடு மாசடைந்திருந்த நீரும் வெளியேற்றப்பட்டது

மூத்தனார் குளதில் சாக்கடை நீர் உட்புகுந்ததனாலும் குப்பை கூளங்கள் நிறைந்ததனாலும் துர்நாற்றம் வெளியானதைத் தொடர்ந்தே இச்சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.

இச்சரமதானப் பணி ஜாயா நகர் மற்றும் மூதூர் வெளி கிராம அபிவிருத்திச் சங்கங்களின் அனுசரணையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அச்சுதன்)

## தன்னைத் தானே கட்டியவர் வசமாக மாட்டினார்

காவல்துறைக்குத் தண்ணி காட்டுவதற்காகத் தன்னைத் தானே கட்டிக்கொண்டவரைக் காவல்துறை கைது செய்துள்ளது.

குச்சவெளிப் பிரதேசத்தில் நடைபெற்றுள்ள இந்தச் சம்பவத்தில் அப்துல் ரஹ்மான் அப்துல் சலாம் என்பவரே காவல்துறையால் கைது செய்யப்பட்டுள்ளார் என லங்கா சி நியூஸ் தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த நபரது மனைவியால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டையடுத்து அவர் மீது விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டதை அறிந்துகொண்ட மேற்படி நபர் மாணவன் ஒருவனையும் அழைத்துக்கொண்டு காட்டுப்பகுதிக்குச் சென்று தன்னை அம் மாணவனின் உதவியுடன் மரத்துடன் கட்டிக் கொண்டுள்ளார். ஆனால் அவர் மாணவனுடன் காட்டுக்குள் சென்றதைக் கண்டுகொண்ட ஒருவர் காவல்துறைக்கு வழங்கிய செய்தியை அடுத்து அம்மாணவனிடம் விசாரணைகளை மேற்கொண்ட காவல்துறை குறித்த நபரைக் கட்டுண்ட நிலையிலேயே கைதுசெய்துள்ளது.

## கோழைக்கொலை

வாழைச்சேனை கறுவாக்கேணியில் மனநலம் குன்றிய ஒருவர் தூக்கில் தொங்கிக் கோழைக்கொலை செய்து கொண்டுள்ளார். இச்சம்பவம் கடந்த 29ம் திகதி மாலை 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பாடசாலை வீதி, க்றுவாக்கேணியில் வசித்துவந்த 34வயது நிரம்பிய வைத்தியலிங்கம் தரணிதரன் என்ற ஒரு பெண் பிள்ளையின் தந்தையே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

## இந்துக்கல்லூரி மாணவன் ஆகாஷ் பாராட்டப்பட்டார்

அண்மையில் இந்தோனேசியா பார்லி நகரில் நடைபெற்ற சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டியில் கலந்து கொண்ட வெற்றி பெற்ற மாணவன் செல்வன் அருள்குமரன் ஆகாஸ் என்பவரை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை 30.10.2014 காலை தி. கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் நடத்தப்பட்டது. (கதிரவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தவார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதான பார்வை

## the Sunday Times

### 5000 மில்லியன் வருமானத்தை எதிர்பார்த்து வாகன விலைகள் குறைப்பு




2015 ஆம் ஆண்டின் பாதீடு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சில வாகனங்களின் விலைகள் 25 சதவீதத்தால் வீழ்ச்சி யடைந்துள்ளன. 100 சி.சி வாகனங்களின் வரி 202வீதத்திலிருந்து 173 வீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளதைப் போலவே ஏனைய வாகனங்களுக்கும் வரி குறைக்கப்பட்டுள்ளது.

13 தொடக்கம் 20 ஆசனங்களைக் கொண்ட வான்களின் வரி மீது 100வீத வீழ்ச்சி அறிவிக்கப்பட்டுள்ளது.

### மசகு எண்ணெய் விலை வீழ்ச்சியடைந்தாலும் நீண்டகால ஒப்பந்தங்களுக்கு இ.பெ.கூ முயற்சி

Ceylon Petroleum Corporation

சர்வதேசச் சந்தையில் மசகுஎண்ணை விலை வீழ்ச்சியடைந்து வருகின்ற போதிலும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நிரந்தர விலை கொண்ட நீண்டகால ஒப்பந்தங்களை சிங்கப்பூரை தளமாகக் கொண்ட கம்பனிகளுடன் மேற்கொள்ள முயற்சிக்கின்றது.

நிரந்தரமாக பெற்றோலியத்தைத் தடையின்றி பெற்றுக் கொள்ளுவதற்காகவே இவ் ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்படுகின்றனவாம். அதற்கமைய சமர்ப்பிக்கப்படவுள்ள அமைச்சரவைப் பத்திரத்தில் உலக சந்தைவிலை எவ்வாறு இருந்தாலும் தற்போதுள்ள நிபந்தனைகளுக்கு அமையவே பெற்றோலிய இறக்குமதி ஒப்பந்தத்தை மேலும் 15 மாதங்களுக்கு நீடிக்க விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இக்காலப் பகுதியில் விலைத் தளம்பல்களைக் கவனத்திற் கொள்ளாது நிலையான விலையிலேயே பெற்றோலியம் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

எனினும் அடுத்துவரும் ஆண்டில் மசகு

### வடக்கிற்கான பயணத்தடையால் சர்வதேச எச்சரிக்கைகளில் மாற்றம்




வடக்கிற்கான பயணத்தடை விடுக்கப்பட்டதை அடுத்து பல்வேறு நாடுகள் தமது நாட்டினருக்கான பயண எச்சரிக்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. அமெரிக்கா, கனடா, ஜெர்மன், பிரிட்டன், பிரான்ஸ், அவுஸ்திரேலியா, ஜப்பான் போன்றனவும் அந்நாடுகளுள் அடங்கியுள்ளன.

பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் தமது பயணிகளிடம் இலங்கையிலுள்ள போது மேலதிக அவதானமாக செயற்படுமாறு கோரியிருப்பதுடன் தேவையற்ற பயணங்களைத் தடுக்குமாறும் கோரியுள்ளன.

### சனாதிபதி வழங்கிய மோ.சைக்கிள் காப்புறுதியில் மோசடி

சனாதிபதியால் அண்மையில் யாழ்ப்பாணத்தில் வைத்து வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்கான காப்புறுதி வழங்குவதில் பண மோசடி நிகழ்ந்துள்ளது. அரச ஊழியருக்கு வழங்கப்பட்ட 4,653 மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்ட காப்புறுதி நிறுவனமொன்றின் முகவர்கள் அரச அலுவலர்களிடம் தற்காலிக காப்புறுதிப் பத்திரங்களை இரண்டு மாதங்களுக்கு வழங்கி ரூபா 1500ஐ அறவிட்டுள்ளனர். எனினும் அம் மோட்டார் சைக்கிள்கள் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடம் மட்டுமே காப்புறுத்தப்பட வேண்டியவை என்ற நிபந்தனை யைக் கொண்டிருப்பது தெரிய வந்தவுடன் தாம் ஏமாற்றப்பட்டுள்ளதை அலுவலர்கள் உணர்ந்து கொண்டுள்ளனர். தற்போது அந்தப் பணத்தை மீளப்பெற்றுக்கொள்ள கூட்டு முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது.



## Observer

### நியூசிலாந்து பாராட்டு

இலங்கையின் ஒற்றுமை முயற்சிகளை நியூசிலாந்து அரசு பாராட்டியுள்ளது.

நியூசிலாந்து வெளிவிவகார அமைச்சிக் கிழக்கு மற்றும் தென்கிழக்காசியப் பிரிவின் தலைவரே இவ்வாறு பாராட்டைத் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதம் முற்றாக அழிக்கப்பட்ட பின்னர் நாட்டில் நடைபெற்றுவரும் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான முயற்சிகள் பெறுமதி வாயந்தவை எ அவர் தெரிவித்துள்ளார்.

### புலி ஆதரவாளர் கனேடியத் தேர்தலில் போட்டி

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானணருவர் கனேடிய நாட்டின் ஒன்றாரியோ மாகாணத்தின் மேயர் தேர்தலில் களமிறங்கியுள்ளார்.

அடுத்த வாரம் நடைபெறவுள்ள இத் தேர்தலில் நாடு கடந்த தமிழீழ அரசின் கனேடியப் பிரதிநிதியான இவர் விடுதலைப்பபுலிகளின் ஆதரவாளராக இருப்பதுடன் கனேடிய மண்ணில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை முன்னெடுப்பவர்களில் ஒருவர் என்றும் புலிகளுக்காக நிதி சேகரிப்பவர் என்றும் அதிகாரபூர்வமான மூலங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

### இறந்தவர் 50 பேருக்குக் குறைவே தொண்டைமான்

பதுள்ளையில் மண்சரிவால் இறந்தவர்கள் ஐம்பது பேருக்குக் குறைவானவர்களே என ஆறுமுகம் தொண்டைமான் அறிவித்துள்ளார். மீரயபெத்த தோட்டத்தில் 50ற்கும் குறைவானவர்களே வாழ்ந்து வந்ததாக அவர் தெரிவித்துள்ளதுடன் காலநிலை அனுமதிக்காததால் மீட்புப் பணிகள் தாமதம் ஆகின்றன என்றும் தெரிவித்தார்.

எனினும் இறந்த 192 பெயர்களை மீரியபெத்த பிரதேசச் செயலாளர் வெளியிட்டுள்ளார்

### ஆடைத்தெழிற்சாலையினரை ஊக்குவிக்கும் பாதீடு

ஆடைத்தொழிற்துறையை ஊக்குவிக்கும் ஒன்றாக தற்போது 2015 பாதீட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஓய்வூதிய முறை காணப்படுவதாக முதலீட்டு விருத்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஆடைத் தொழிற்றுறையை ஊக்குவிக்கும் முகமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குப் பல சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஆங்கில இணையத் தளச் செய்திகள்

### போத்தல் குடிநீரில் மனித மலம்

போத்தலில் அடைக்கப்பட்ட தண்ணீரில் மனித மலம் கலந்துள்ளதாக வெளியான தகவல்களை அடுத்து இரண்டு கம்பனிகளின் குடிநீர்ப் போத்தல்கள் விற்பனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளன.

மாளிகாகந்த மஜிஸ்ட்ரேட் விடத்த இந்த உத்தரவை அடுத்து "கிறிஸ்டல்" மற்றும் கே சொய்ஸ்" என்ற இரண்டு கம்பனிகளினதும் தண்ணீர்ப் போத்தல்களை விற்பனை செய்ய வேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### மோவின் சில்வாவின் காசோலை திரும்பியுள்ளது

ஊவா மாகாணத் தேர்தலின் போது தாக்குதலுக்குள்ளான ஊடகவியலாளருக்கு அமைச்சர் மேர்வின் சில்வா ஒரு லட்சம் பெறுமதியான காசோலையொன்றை வழங்கியிருந்தார்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுத் திரும்பிய அந்த ஊடகவியலாளர் காசோலையைக் காசாக்க முற்பட்டபோது பல தடவைகள் அக்காசோலை திருப்பப்பட்டுள்ளது.

### வாசிப்பு மாதத்தையொட்டி விழிப்புணர்வுப் பேரணி

வாசிப்பு மாதத்தின் இறுதி நாளில் தி'ருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியினால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு வீதி நடைபவனி 31.10.2014 காலை 10.00 மணிகு நடைபெற்றது. பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், இதில் கலந்துகொண்டனர். நடைபவனியானது பாடசாலையிலிஇருந்து புறப்பட்டு உவர்மலை மத்தியவீதியூடாக தேந்தமிழ் வீதி, 4ம் ஒழுங்கை ஊடாக உற்துறைமுக வீதியை அடைந்து பின் பாடசாலையை வந்தடைந்தது. மாணவர்கள் விழிப்புனர்வூட்டும் பதாதைகளை கையில் ஏந்தியவாறு கோ'ங்களை எழுப்பியவாறு கலந்துகொண்டதை எம்மால் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. (நிக்கி தொம்சன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரப்போவது ஜனாதிபதித் தேர்தலா? யுத்தமா?

**அரசியல் ஆய்வு**

**நஜீப் பின் கபூர்**

கடந்த 19ஆம் திகதி ஹெல உறுமய அமைப்பின் மகா நாடு முடிந்ததும், அங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்களுடன் அந்த அமைப்பின் முக்கியஸ்தர்களான ஓமல்பே சோஹித்த தேரர், அதுருலியே ரத்னசாரதேரர், அமைச்சர் சம்பிக்க என் போர் ஜனாதிபதியைச் சந்திக்க அலரி மாளிகைக்கு சென்றிருந்தனர்.

சரியாக 5.30 மணிக்கு அங்கு அமைச்சர் பசில் ராஜபக்ஷ, சுசில் பிரேம்ஜயந், டலஸ் அழகப்பெரும ஆகியோர் கலந்துரையாடல் மேசைக்கு வந்தர்கள். ஜனாதிபதி ஒரு மணி நேரம் கழித்து அங்கு வந்தார். எமது கட்சி மகாநாட்டில் எடுத்த தீர்மானங்களுடன்தாம் இங்கு வந்திருப்பதாக ஹெல உறுமய தரப்பினர் குறிப்பிட்டு, சுதந்திரமான ஆணைக்குழுக்கள் அமைப்பது, மாகாண சபைகளுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் வழங்காமல் தடுப்பது போன்ற தீர்மானங்கள் உட்பட இன்னும் பல தீர்மானங்களை முன்வைத்தனர்.

இதனை அமுல் படுத்துவதற்கான உத்தரவாதத்தை அவர்கள் அங்கு எதிர்பார்ப்பது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்குப் புரியவே, இவற்றை எல்லாம் இப்போது யோசித்துக் கொண்டிருக்க தனக்கு நேரம் கிடையாது கொடுத்து விட்டுப் போங்கள் என்று முறுகிக் கொண்டு ஜனாதிபதி அந்த இடத்திலிருந்து எழுந்து சென்றிருக்கின்றார்.

எனவே, இந்தச் சந்திப்பு தோல்வியில் முடியவே அதுருலியே ரத்னசாரத்தேரர் நியாயமாக ஒரு சமுதாயத்தை நோக்கி என்ற அமைப்பை வைத்திருக்கின்ற சோபித தேரருடன் தற்போது போய் இணைந்து கொண்டிருக்கின்றார் என்று பிந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஹெல உறுமயக் கட்சியுடனான சந்திப்புக்கு தாமக்கும் கலந்துகொள்ள அழைப்பு வரும் என்றிருந்த சுதந்திரக் கட்சி அமைப்பாளர் மைத்திரிபால சிரி சேனாவும், நிமல் சிறிபாலாவும் அந்த அழைப்பு வராததால் அதிர்ச்சியடைந்திருக்கின்றார்கள். இது கட்சி முக்கியஸ்தர்களிடையே தற்போது ஒரு சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது.

நமது நாடு ஜனநாயக நாடு. ஜனநாயகத்துக்கு மக்களாட்சி என்றொரு பெயரும் இருக்கின்றது! இங்கு முறையாக மக்களாட்சி நடக்கின்றதோ இல்லையோ அடிக்கடி தேர்தல்கள் மட்டும் நடந்து கொண்டிருப்பதை நாம் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. தேர்தல்கள் ஒரு கால அட்டவணையில் நடப்பதுதான் சம்பிரதாயம். ஆனால், இலங்கையின் ஆட்சியாளர்கள் தமக்கேற்றவாறு தேர்தல் வரைபடத்தை மாற்றிக் கொள்ளவும் நமது அரசியல் யாப்பில் தாராளமாக இடம் வழங்கப்பட்டிருக்கின்றது.

தேர்தலைத் தீர்மானிக்கின்ற விடயத்தில் இலங்கையில் தற்போது ஜாதகக் காரர்களின் கரங்களே மேலோங்கி இருப்பதை அவதானிக்க முடிகின்றது. இந்தத் தேர்தலில் உள்ளூர் ஜாதகக்காரர்கள் மட்டுமன்றி இந்தியாவிலுள்ள ஜாதகக் காரர்களினதும் ஆதிக்கம் கணிசமாக இருப்பதை நாம் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

தமக்குப் பாராளுமன்றத்தில் உள்ள பெரும்பான்மையை பயன்படுத்தி ஆட்சியாளர்கள் தமக்கு தேவைப்படும் போதும் தேர்தல்களை நடத்தவும் அதிகாரங்களைக் கூட்டிக் கொள்ளவும் அரசியல் யாப்பில் அடிக்கடி திருத்தங்களைச் செய்வதும் நாம் இங்கு பார்க்கின்றோம். இவ்வாறான நடவடிக்கைகளுக்கு நாம் ஒருபோதும் தற்போதைய ஆட்சியாளர்களை குறைகூற முடியாது. இந்த அசிங்கமான சம்பிரதாயத்தை இந்த நாட்டுக்கு அறிமுகம் செய்து வைத்ததே ஐக்கிய தேசியக் கட்சி. எனவே, மகிந்த ராஜபக்ஷவுக்கு எந்தவகையிலும் இது விடயத்தில் கைநீட்டும் அருகதை ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடையாது. ஜே.ஆர்.ஜெயவர்தன காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி வடிவமைத்து இந்த நாட்டுக்கு அறிமுகப்படுத்திய யாப்பே தற்போது இந்த நாட்டுக்குச் சாபக்கேடாக மாறி இருக்கின்றது.

இன்று இந்த யாப்பை அறிமுகம் செய்த ஐக்கிய தேசியக் கட்சியே தற்போது அதனை விமர்சித்து, அதனை நீக்கவும் வேண்டும் என்றும் குரல் கொடுக்கவும் ஆரம்பித்திருக்கின்றது. இது அரசியல் நாகரிகம் இல்லாத விடயமாக இருந்தாலும் காலத்தின் தேவை என்ற வகையில் இந்தக் குத்துக்கரணத்தைப் பாராட்டவும் வேண்டி இருக்கின்றது. அதிகாரம் கையில் இல்லாத நிலையில் இப்படிப் பேசினாலும் அதிகாரம் கைகளுக்கு வந்தபின்னர் இவர்கள் எப்படி நடந்து கொள்வார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதங்களும் கிடையாது.

ஆனால், இந்த முறை 18ஆவது திருத்தத்துக்கு வாக்களித்ததன் மூலம் நாம் ஒரு சர்வாதிகாரியை உருவாக்கவழி சமைத்துக் கொடுத்திருக்கின்றோம் என்று ஆளும் தரப்பிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் இன்று பகிரங்கமாக பேசுவது ஒரு சிறப்பம்சமாக இருக்கின்றது.

மகிந்த ராஜபக்ஷவுக்கு எல்லை மீறிய அதிகாரத்தையும் ஆட்சிக்காலத்தை நீடிப்பதற்கு வாக்களித்து விட்டு இப்போது முதலைக் கண்ணீர் வடிக்கின்ற அரசியல்வாதி களைப்பற்றி மக்கள் பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. சமகால அரசியலில் இந்தச் சந்தர்ப்பத்தில் அப்படி பேசியும் நடந்தும் தான் அவர்களுக்கு தமது அரசியல் வியாபாரத்தைச் செய்ய வேண்டி இருக்கின்றது.

இது காலத்தின் தேவை. மேற்சொன்ன எமது விமர்சனம் பொதுவாக இந்த நாட்டில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அரசியல் நடைமுறைகள் தொடர்பான மக்கள் மனக்குறைகள். தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் கட்சி மாறினால் பதவி பறிபோகாது என்று, தான் கொடுத்த தீர்ப்புத் தொடர்பாக மக்களிடத்தில் மன்னிப்புக் கேட்டு தற்போது கூட்டங்களை நடத்திக் கொண்டிருக்கின்றார் முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வா.

நேற்றுவரை ராஜபக்ஷவுக்கு கூஜாத்தூக்கிக் கொண்டிருந்த ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர்களும் 18ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக கைதூக்கி நாம் ஒரு பாவச் செயலைப் புரிந்து விட்டதாகவும் இதற்குப் பின்னரும் ஆளும் தரப்பின் தவறான நடவடிக்கைகளுக்குத் தம்மால் ஒத்துழைப்பு வழங்க முடியாது என்று குறிப்பிடுவதுடன், மூன்றாம் தரப்பு வேட்பாளர் தொடர்பாகவும் தற்போது பேச ஆரம்பிதிருக்கின்றனர் ஹெல உறுமய கட்சியினர்.

ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் வசந்த சேனாநாயக்க 18ஆவது திருத்த மூலத்திற்குக் கைதூக்கியது தனக்குத் தற்போது பெரும் மனஅழுத்தத்தைக் கொடுத்துக் கொண்டிருப்பதாக பகிரங்கமாகக் கூறிவருகின்றார். சுகாதார அமைச்சரும் சுதந்திரக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிரிசேன தெரேச என்ற அதிகாரியை கடவுள் கட்டாயம் தண்டிக்க வேண்டும் என்று பகிரங்கமாக சபித்துப் பேசி வருகின்றார்.

சுகாதாரத் துறையில், தான் கொண்டுவர முனைந்த மாற்றங்களுக்கு அதிகாரிகள் குறுக்கே நிற்பதால் அமைச்சர் அப்படி சாபமிடுகின்றார். எனவே, மைத்திரிபால சிரி சேனவுக்கு தனது அமைச்சிலேயே எதுவும் செய்யமுடியாத நிலை. தான் ஜனாதிபதியாக வந்தால் தனது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எவரையும் அரசியல் ரீதியாகப் பதவிகளுக்குக் கொண்டு வரமாட்டேன் என்று வட மேல் மாகாண முதலமைச்சர் தயாசிரி ஜயசேக்கர ஊடகமொன்றில் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஜனக தென்னக்கோன் குடும்பம் பொதுமக்ககள் பணத்தில் 34 கோடி ரூபாவை கையாடி இருக்கின்றது என்று வசந்த தொடுக்கின்ற குற்றச்சாட்டு விடயத்தில் அந்தக் குடும்பம் மிகவும் மனம் நொந்து போய் இருக்கின்றது.

இந்த விவகாரத்தை வசந்த பெரேரா நிரூபித்தால் தான் அரசியலில் இருந்து முற்றாக விலகிவிடப் போவதாக மத்திய மாகாண அமைச்சர் பிரமித்த தென்னகோன் சவால் விடுத்திருக்கின்றார். தென்னக்கோன் குடும்பம் இப்படி நடத்தப்படுவது தொடர்பாக சுதந்திரக் கட்சி செயலாளர் மைத்திரிபால சிரி சேனாவும் தனது கவலையை வெளியிட்டிருக்கின்றார். வழக்கம் போல் விதுரு விக்ரமநாயக்க இந்த நாட்களில் தனது அரச எதிர்ப்புப் பிரசாரங்களை துரிதப்படுத்தி வருகின்றார்.

ராஜபக்ஷவுக்கு எதிரான பொது வேட்பாளர் என்று தன்னைத்தானே பிரகடனப்படுத்திக் கொண்டிருக்கின்ற ரணில் விடயத்தில் அந்தக் கட்சிக்காரர்கள் எவரும் இதுவரை பகிரங்கமாக வாய்திறக்க விட்டாலும், ரணிலை ஓரம் கட்டிவிட்டு பொது வேட்பாளர் ஒருவரைக் கொண்டுவருவது பாதுகாப்பானது என்றும் ஒரு யோசனை இருக்கின்றது.

அந்த யோசனைப்படி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுக்கின்ற ஒழுங்குகள் தொடர்பாகவும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருக்கின்ற ஒரு குழு பொது வேட்பாளருக்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. பிரதான எதிர்க்கட்சிகளும் புத்திஜீவிகளும் ரணிலை வேட்பாளராக நிறுத்தினால் ராஜபக்ஷவை வீழ்த்துகின்ற நல்லதொரு வாய்ப்பு இல்லாமல் போய்விடும் என்று கருதுகின்றார்கள்.

எமக்குக் கிடைக்கின்ற செய்திகளின்படி பொது வேட்பாளர் திட்டத்தை ரணில் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்று தெரிகின்றது. இப்படிப் பார்க்கின்ற போது ரணில் வேட்பாளர் என்ற விடயத்தில் அந்தக் கட்சி மத்தியில் ஒட்டு மொத்த உடன்பாடு இல்லை. ஆனால், இந்த முறை ரணிலுக்கு சந்தர்ப்பத்தை கொடுத்து அவருக்கு மற்றுமொரு தோல்வி வந்து சேர்வதிலிருந்து தனது பிடியைக் கட்சிக்குள் உறுதிப்படுத்திக் கொள்ளும் தன்னலப் போக்குடன் தற்போது சஜித் வேலை பார்க்கின்றார் என்று தற்போது குற்றச் சாட்டப்படுகின்றார்.

சஜித்தைப் பொறுத்து அடுத்து வருகின்ற தேர்தல் தான் அவரது இலக்கு. இதற்கிடையில் ஒரு முறை இங்கு வந்த போது கடத்தப்பட்டு பின்னர் நாடு கடத்தப்பட்ட முன்னிலை சோசலிசக் கட்சித் தலைவர் குமார் மாத்தியாவும் தேர்தலில் குதிப்பது உறுதியாகி இருக்கின்றது. இடதுசாரிகளின் பொது வேட்பாளராக இவர் களமிறங்க இருக்கின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பி.யும் இந்த தேர்தலில் ராஜபக்ஷ போட்டியிட முடியாது அவரை ஒரு ஜனாதிபதி வேட்பாளராக ஏற்றுக் கொள்ளக்கூடாது என்றும் தேர்தலை முன்கூட்டி நடத்த அனுமதிக்கக் கூடாது என்றும் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியாவிடம் முறைப்பாடு கொடுத்திருக்கின்றார்கள்.

இது இலங்கை வரலாற்றில் ஒருவரை வேட்பாளராக ஏற்கக்கூடாது என்று கொடுக்கப்படும் முதல் முறைப்பாடாக வரலாற்றில் பதியப்படுகின்றது. எமக்குத் தெரிந்த வரை இது விடயத்தில் ஆணையாளர் சட்டமா அதிபர் திணைக்களத்தில் விளக்கம் கேட்பார் அந்த விளக்கத்தின் அடிப்படையில் அவர் தீர்ப்பு அமையும். தேர்தல் நாட்களில் பாப்பரசர் இங்கு விஜயம் செய்வது சாத்தியமில்லை எனவே, எப்போது தேர்தலை நடத்தப்போகின்றீர்கள் என்று இலங்கையிலுள்ள அதிமேற்றுராணியர் ஆளும் தரப்புக்கு கடிதம் கொடுத்து விளக்கத்தை எதிர்பார்த்தாலும் இன்று வரை அவர்கள் கொடுத்த கடிதத்துக்கு ஆளும் தரப்பு பதில் கொடுக்காமல் இருந்து வருகின்றது.

2015 ஜனவரி 13,14,15இல் பாப்பாண்டவர் இங்கு விஜயம் செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. பெரும்பாலும் ஜனவரி 8ஆம் திகதி இங்கு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்று நம்பப்படுகின்து. தற்போது ஆளும்தரப்பு எதிர்க்கட்சியை இலக்குவைத்து போஸ்டர் போராட்டம் ஒன்றை நடத்திக் கொண்டிருக்கின்றது.

ரணில் வேட்பாளர் என்று கருதி இந்தப் போஸ்டர் தாக்குதல் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.




திடீரென்று பொது வேட்பாளர் களமிறக்கப்பட்டால் அவரை இலக்கு வைத்து நடத்தக்கூடிய போஸ்டர்களும் தற்போது வடிவமைக்கப் பட்டிருக்கின்றன. எப்படியும் வருகின்ற ஜனாதிபதித் தேர்தல் ஒரு பெரும் போராகவே அமைய இருக்கின்றது.

நன்றி

தமிழ்கிங்டொம் (www.tamilkingdom.org)

# பேருகலையின் சம்ஹாரம்

புதையுண்டதால் மனங்கள், ரணங்களாய்... இங்கே வதையுண்ட நாங்கள், நடை பிணங்களாய் ஆனோம். பல தடைகள் மீறியே பெத்த உயிர்கள் மீரியாபெத்த மண்ணுக்குள் சங்கமாகிவிட்டன. அந்த உறவுகளுக்கு, கண்ணீர காணிக்கைகள் என்ற கண்ணீரஞ்சலி பதாகைகளுக்கு வடுவாகிவிட்டது கொஸ்லாந்த, மீரியாபெத்த பேரழிவு.

2004ஆம் ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி முழுநாட்டின் கரையோரங்களையும் புரட்டி கவிழ்த்துபோட்ட கடற்கோள் இயற்கை சீரழிவு. அதற்கு பின்னர் 2009ஆம் ஆண்டு வடக்கில் முன்னெடுக்கப்பட்ட பயங்கரவாத செயற்பாடுகளுக்கு எதிரான மனிதாபிமான நடவடிக்கைகள் வரையும் கல்நெஞ்சான மனங்கள், கொஞ்சம் கொஞ்சம் இழகிக்கொண்டுவருகையில் பேருகலை மலையும் தாண்டவமாடிவிட்டது.

கொஸ்லாந்தை மீரியாபெத்த! ஊவா மாகாணம் பதுளை மாவட்டத்தில் உள்ள ஹல்துமுல்லை பிரதேச சபைக்கு உட்பட்ட பெருந்தோட்டமாகும். இந்த தோட்டத்துக்கு பதுளை, ஹப்புத்தலையிலிருந்து இருவழிகளில் செல்லலாம். இந்த தோட்டத்தை மஸ்கெலிய பிளான்டேசன் நிர்வாகமே நிர்வகிக்கின்றது. வழமையாகவே, தோட்டங்கள் காலை வேளையிலேயே சுறுசுறுப்பாகிவிடும். 29ஆம் திகதி புதன் கிழமையன்றும் அப்படிதான். கடும் குளிருக்கு மத்தியில் தட்டியெழுப்பப்பட்ட சின்னஞ்சிறுசுகள் 7 மணிக்கு முன்னதாகவே இருந்ததை சாப்பிட்டுவிட்டு முன்பள்ளி களுக்கும் பாடசாலைகளுக்கும் சென்றுவிட்டனர். அதிகாலை வேளையில், வேலைகளுக்கு செல்லவேண்டியவர்களும் சென்றுவிட்டனர்.

அடுத்த சங்குக்கு முன்னர் வேலைக்கு சென்று விடவேண்டும் என்று எண்ணி பெரட்டுதப்பை (ரொட்டி) வாயில் வைத்தவர் களின் காதுகளுக்கு என்றும் கேட்காத சத்தமொன்று கேட்டுள்ளது. அதற்கு பின்னர் பாரிய புகைகிளம்ப, மண்ணுடன் கலந்த தண்ணீர் ஓடையாய் பெருகக, மண்ணாறு, தோட்டத்தையே விழுங்கிகொண்டிருந்தது.

கையில் கிடைத்ததையல்லை, உயிரை காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்று ஓடிய பலரையும் மண்ணாறு இழுத்துபோர்த்தி படுத்துகொண்டது. அந்தளவுக்கு, சுமார் 30 - 50 அடி வரையிலான உயரத்துக்கு 3.5 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் மண்ணாறு குப்புறப் படுத்துகொண்டது. அந்த தோட்டத்தின் ஒருதிசையில், முருங்கை பள்ளத்தாக்கை அணிந்ததாக சுமார் 2,500 அல்லது 3,000 அடி உயரத்தில் கம்பீரமாக செங்குத்தாக நிமிர்ந்துநிற்கும் பேருகலை மலையின் ஒருபகுதியே வெடித்து சிதறி தண்ணீருடன் பெருக்கெடுத்து ஓடி, மீரியாபெத்த தோட்டத்தின் ஒரு எல்லையை அழித்துவிட்டுள்ளது.

இந்த மலை இன்று நேற்றல்ல 2005ஆம் ஆண்டுமுதல் அவ்வப்போது அனர்த்த எச்சரிக்கை விடும் வகையில் மண்சரிவை ஏற்படுத்தி எதிர்வும் கூறியிருக்கின்றது. அப்போதெல்லாம் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் எச்சரித்தது. அரசாங்கமும் அத்தோட்ட நிர்வாகத்துக்கு எச்சரிக்கை செய்தது. பெருந்தோட்ட மக்களின் உழைப்பை, அட்டை இரத்தத்தை உறிஞ்சுவதைப்போல உறிஞ்சும் பெருந்தோட்டங்களில், மீரியாபெத்தை தோட்டத்தை நிர்வகிக்கும் மஸ்கெலியா பிளாண்டேசன் மட்டும் [illegible] இந்த விடயத்தில் அசட்டையாகவே இருந்துவிட்டது.

மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தாலும் எங்கு செல்வதென்று தெரியாமல் அங்கே தங்கிவிட்டனர். அதன் விளைவாக 6 லயன் குடியிருப்புகள் மண்ணுக்குள் மண்ணாகிபோய்விட்டன. லயன்குடியிருப்புகளை மட்டுமன்றி, பால் சேகரிக்கும் நிலையங்கள் இரண்டு, வாகனங்கள் திருத்தும் இடம், இரண்டு கடைகள், மருத்துவமாது குடும்பம் தங்கியிருந்த விடுதி, சாரதியின் வீடு, சிகிச்சை நிலையம் மற்றும் கோவில் ஆகியனவும் மண்ணில் புதையுண்டுள்ளன. இரண்டு பால் சேகரிக்கும் நிலையங்கள் இருப்பதனால் அங்கு மாடுகளும் ஆடுகள் மற்றும் கோழிகளும் இருந்திருக்கலாம் அவற்றுக்கெல்லாம் என்ன நடந்தது என்பது தொடர்பிலான தகவல்கள் இதுவரையிலும் வெளியாகவில்லை.

ஏதோ ஒருவகையில் ஆதரவற்றவர்களாக்கப்பட்ட பிள்ளைகளின் எதிர்காலத்தை கவனத்திற்கொண்டு, அவர்களின் வாழ்கையாவது மண்ணில் புதையுண்டுவிடாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியது அரசாங்கம் மற்றும் மலையகம் சார்ந்த அரசியல்வாதிகளின் கடப்பாடாகும்.

இந்த தீபாவளிக் கொண்டாட்டத்தை அடுத்து, மீரியாபெத்தையில் இடம்பெற்ற சோகமான இந்தச் சம்பவம் அங்குள்ள மக்களின் அடுத்த தீபாவளியையும் இல்லாமல் செய்துவிட்டது. கந்தசஷ்டி விரதத்தின் இறுதி நாளான 29ஆம் திகதி புதன்கிழமை சூரசம்ஹாரத்துக்கு உலகளாவிய ரீதியில் இந்துக்கள் தயாராகிக்கொண்டிருந்த வேளையில், காலை வேளையிலேயே பேருகலை மலை பிளந்து சரிந்து தோட்டத்திலிருந்த ஆறு லயன் களையும் துவசம் செய்துள்ளமையானது இலங்கையில் மண்சரிவு வரலாற்றில் இதுவரையிலும் இடம்பெறாத ஒன்றாகும்!

www.tamilmirror.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏது எப்படியோ எல்லாம் நன்றாகவே முடிந்தது!!

...நாட்டு நடப்பு...

அவர்கள் இருவரினதும் இருப்பிடம் தம்புள்ள. வர்ஷா வர்த்தகப் பிரிவிலும், கஜேந்திரன் கலைப்பிரிவிலும் உயர்தரக் கல்வியை மேற்கொண்டு வந்தனர். க.பொ.த சா. தரம் வரை ஒரே வகுப்பில் இருந்தவர்களுக்கு பரீட்சையின் பின் க.பொ.த உ.த வகுப்பில் பின்பற்ற வேண்டிய அடிப்படையில் பிரிய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

அவர்கள் இருவரினதும் பெற்றோர்கள் தம்புள்ள பிரதேசத்தின் பர்மபரை விவசாயிகள். அந்த விவசாயத்தினூடாக சம்பாதித்த பணம், அனுபவம், நற்பெயர் ஆகியவற்றினால் தம்புள்ள பொருளாதாரம் மத்திய நிலையத்தில் தொகையாக மரக்கறி வகைகளை கொள்வனவு செய்யும் பெரும் வர்த்தகர்களாக திகழ்கின்றனர்.

மேலும் வர்ஷா, கஜேந்திரன் ஆகியோரின் காதல் விவகாரம் தெரிய வந்த விடயம். வர்ஷா வர்த்தகப் பிரிவை சார்ந்ததால் அவளை நிமிடத்திற்கு நிமிடம் நேரடியாக பார்க்க முடியாத அந்த துர்பாக்கிய நிலையை கலைப்பிரிவில் உள்ள கஜேந்திரனால் சகிக்க முடியவில்லை. அதனால் அவன் வர்ஷாவின் வர்த்தகப் பிரிவிற்கே மாறிவிட்டான்.

கலைப்பிரிவு கஜேந்திரன் திறமையான மாணவன் என்பதால் பிரிவை மாற்றிக் கொண்டதையிட்டு தம்புள்ள மகாவித்தியாலயத்தின் அதிபரோ, ஏனைய பாட ஆசிரியர்களோ அது குறித்து எந்த வித கருத்தும் கூற முன்வரவில்லை. ஆளுக்கால் பிரிந்திருந்தால் படிப்பில் கவனம் செலுத்த முடியாது என்ற கருத்தும் அங்கு நிலவி வந்தது. ஒன்றாக இருந்தால் அவர்களுக்கு வேறு யோசனைகள் வராது. அத்துடன் குழவாக ஏனைய மாணவர்களுடன் இணைந்து கற்கும் சந்தர்ப்பமும் அதிகம்.

அவர்களின் பெற்றோர் தமது பிள்ளைகள் கெட்டிக்காரர்கள். மேலும் படிப்பிலும் முன்நிலை வகிப்பவர்கள் என்பதை அறிந்து படிப்பு விடயத்தில் அவர்கள் என்றுமே அக்கறை கொள்வதில்லை. பிள்ளைகளின் விருப்பத்திற்கே விட்டுவிடுவார்கள்.

அப்பாடசாலையின் உயர்தரத்தில் விசேட சித்திகளை இருவரும் பெற்றாலும் அவர்களை பல்கலைக்கழகம் அனுப்பி படிப்பிக்க வேண்டுமென்ற எண்ணங்கள் இரு வீட்டாருக்கும் இருக்கவில்லை. பெரும் வர்த்தக குடும்பத்தை சார்ந்தவர்கள் என்பதால் தம் பிள்ளைகளுக்கு மிக தடபுடலாக திருமணத்தை வேளைக்கே செய்து வைத்தனர் பெற்றோர்.

அத்துடன் கஜேந்திரன் விவசாயக் குடும்பத்தில் பிறந்தாலும், விவசாயம், வியாபாரம் ஆகியவற்றில் எந்தவித நாட்டமும் இல்லாதவனாக காணப்பட்டான். தம்புள்ளை பொருளாதாரம் மத்திய நிலையத்தில் அவனது தகப்பனாருக்கும், வர்ஷாவின் தகப்பானருக்கும் உள்ள செல்வாக்கும், பணபலமும் அங்கு வேறொருவரிடமும் இருக்கவில்லை. அப்படியான வசதி வாய்ப்புக்கள் இருந்தும் களனியிலுள்ள ஓர் கூட்டுத்தாபனத்தில் வேலைக்குச் சேர்ந்தான் கஜேந்திரன்.



அங்கு அவன் தலைமை தரக்கட்டுப் பாட்டாளராக கடமையாற்றினான். மாதா மாதம் தம்புள்ளைக்கு வந்து போவதை அவன் விரும்பாததினால் தனது மனைவி வர்ஷாவுடன் களனிப் பகுதியிலே சகல வசதிகளைக் கொண்ட பெரிய வீடொன்றை வாடகைக்கு எடுத்து அதில் குடியமர்ந்து கொண்டான். பிறப்பு தொடக்கம் திருமணம் வரை தொடர்ச்சியாக தம்புள்ளையில் வாழ்ததாலும், வர்ஷாவும் ஒரு மாற்றத்தை விரும்பியிருந்ததாலும், வசிப்பிடத்தை மாற்றிக் கொண்டதில் எவ்வித சிக்கல்களும் ற்படவில்லை. இருப்பினும் கஜேந்திரன் அங்கு சம்பளத்திற்கு வேலை பார்ப்பதை இரு வீட்டாரும் விரும்பவில்லை. மேலும் அவன் ஒரு புதிய குடும்பத் தலைவன் என்பதால் அவனது முடிவுக்கு எவருமே மறுப்பு தெரிவிக்கவும் விரும்பவில்லை.

அவர்கள் தற்காலிகமாக வசிப்பிடத்தை மாற்றிக் கொண்டாலும் தம்புள்ளையிலுள்ள உறவுகளின் தொடர்புகள் தடையின்றி தொடர்ச்சியாகவே இருந்து வந்தன. சுமார் நான்கு வருடங்களுக்குள் வர்ஷாவுக்கு மூன்று பெண்குழந்தைகள் பிறந்தன. எத்தனை குழந்தைகள் பிறந்தாலும் அவர்களின் அன்றாடப் பொருளாதாரம் எதற்கும் ஈடு கொடுக்கும் அளவில் அமைந்திருந்தது.

முறைப்படி பெற்றோர்களால், அவர்களின் திருமணம் ஒருமித்த மனதுடன் நடாத்தி வைக்கப்பட்டாலும் அவர்கள் ஏற்கனவே ஒருவரை ஒருவர் மனமார நேசித்தவர்கள். அன்று பாடசாலை காலத்தில் ஏற்பட்ட அந்த நெருக்கம் இன்று நல்லதொரு இளம் தம்பதிகளாக அவர்களை மாற்றியுள்ளது.

சுமார் பதினைந்து வருடங்களுக்குப் பின் அவர்கள் இருவரும் தத்தமது பெற்றோர்களை இழந்து தம் பிள்ளைகள் சகிதம் தனித்து விட்டனர். அவர்கள் வசதியாக வாழ்ந்ததால் தம்புள்ளையிலுள்ள ஆதனங்கள் அனைத்தும் தம் இளைய சகோதரர்களுக்கு பகிர்ந்தளித்தனர்.

கஜேந்திரன் வாடகை வீட்டை விட்டு சொந்தமாக களனியில் காணியுடன் வீடொன்றை வேண்டி தனது குடும்பத்துடன் குடியமர்ந்து கொண்டான். அவனுக்குள்ள தற்போதைய முக்கிய பொறுப்பு என்னவெனில் மூன்று பெண் பிள்ளைகளையும் படிப்பித்து நல்ல இடத்தில் கரை சேர்ப்பதே.

கூட்டுத்தாபனம் கஜேந்திரனுக்கு வேண்டிய உதவிகளை அவ்வப்போது வழங்கிவந்தது. அவன் ஓய்வு பெறும் போது சுமார் நாற்பது இலட்சம் ரூபாவை ஊழியர் சேமலாப நிதியிலிருந்தும் சுமார் பதினைந்து இலட்சம் ரூபாவை ஊழியர் நம்பிக்கை நிதியத்திலிருந்தும் பெற்று இருந்தான். அதைவிட மேலதிகமான பணம் பல வங்கிகளிலும் நிதிக் கம்பனிகளிலும் தனது குடும்பத்தினருக்காக சேமித்து வைத்திருந்தான்.

சமூகத்தில் எப்படித்தான் உயர்ந்த அந்தஸ்த்தில் வாழ்ந்தாலும் பிரச்சினைகள், குளறுபடிகள் இல்லாத குடும்பம் என்று எதையும் உறுதியாக கூறமுடியாது. அரச குடும்பமான சார்ள்ஸ், டயானா குடும்பத்தில் கூட பல பிரச்சினைகள் இருந்தன. பிரச்சினை இல்லாத வாழ்க்கையும் இல்லை அவ்வாறே மனசும் இல்லை. கஜேந்திரன் தொழிலிலிருந்து ஓய்வு பெற்றாலும் அவனால் வீட்டில் நிம்மதியாக இருக்க முடியாதிருந்தது. அவன் மனைவி வர்ஷாவின் நாளாந்த நடவடிக்கைகளே அதற்கு காரணம். அவள் எதிலும் விரக்தியடைந்தவளாகவே காணப்பட்டாள்.

வீட்டில் தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கி அந்த வீட்டை 'வியட்நாம் வீடாக' மாற்றிவிட்டாள். அவளின் முன்னைய அமைதியான சுபாவம் முற்றிலும் மாறிவிட்டது. கணவனை அவள் மதிப்பதே இல்லை. எப்பொழுதும் நச்சரித்துக் கொண்டே இருப்பாள். மேலும் அந்த வீட்டில் அமைதிக்கே இடமிருக்கவில்லை. அவள் கணவனை மாத்திரமல்ல தனது பிள்ளைகளைக் கூட விட்டு வைப்பதில்லை. தேவையற்ற சச்சரவுகளை ஏற்படுத்துவதே அவளின் வேலையாக இருந்தது.

அவள் அவனை காதலித்த காலத்தில் இருந்த அந்த அளவற்ற அன்பு மீண்டும் தனக்கு கிடைக்குமா? என கஜேந்திரன் ஏங்கித் தவிக்க நாட்களே இல்லை. அவளுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறிய அவன் நாடாத சாஸ்திரகாரர்களும், மாந்திரீகர்களும் அங்கு இல்லை என்று தான் கூறவேண்டும்.

அவளின் விரும்பத்தகாத போக்கினால் மனமுடைந்த கஜேந்திரன் நீண்ட நேரம் வீட்டில் தங்குவதில்லை. வெளியில் உலாவிவிட்டு இரவு நேரத்தில் வீட்டுக்கு வந்துவிடுவான். பிள்ளைகள் தகப்பன் மேல் பாசமாக இருப்பதைக் கூட வர்ஷா விரும்பவில்லை. எப்படியும் பிள்ளைகளை அவனுக்கெதிராக தூண்டிவிட்டு பிரச்சினைகளை ஏற்படுத்தும் வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டு வந்தாள்.

ஊரார் கூட அவளின் முறையற்ற நடவடிக்கைகளை அனுமதிக்கவில்லை. ஒருநாள் கஜேந்திரன் காலையில் வழமைபோல் வீட்டைவிட்டு வெளியில் சென்றுவிட்டு மாலையில் வீட்டுக்கு வந்த பொழுது வீடு பூரண அமைதியாக வெறிச்சோடி போய் இருந்ததைக் கண்டு பிரமித்துப் போனான்.

அன்று வர்ஷா தனது கடைசி மகளுடன் வீட்டை விட்டு போய்விட்டதாக மூத்த மகள்மார்களிடம் இருந்து அவன் தெரிந்து கொண்டான். அவன் தன் மனைவியையும் கடைசி மகளையும் தேடி எங்கும் செல்லவில்லை. அவனுக்கு தெரியும் வர்ஷா ஒரு கெட்டிக்காரி எப்படியும் கஷ்டப்படாமல் சிறப்பாக வாழ்வாள் என்ற நம்பிக்கை அவனிடம் இருந்தது. அவன் அவர்களைப் பற்றி யோசிக்காவிட்டாலும் அவர்கள் வீட்டில் இல்லாதது அவனுக்கு ஒருவகை கவலையை அளித்திருந்தது.

ஓரிரு மாதங்களுக்குப் பின் அவன் அறிந்து கொண்டான். அதாவது தாயும் மகளும் கொழும்பில் வெளிநாட்டு கம்பனியொன்றில் வேலை செய்வதாகவும், குடியிருப்பது மட்டக்குளியிலுள்ள உறவினர் ஒருவரின் வீட்டில் என்றும் அதனால் அவன் மேலும் பதட்டம் அடையவில்லை.

கஜேந்திரன் தனது மனைவியைப் பற்றி கவலைப்படாது தன்னுடன் இருக்கும் இரு பிள்ளைகளின் எதிர்காலத்திற்கான நடவடிக்கையில் ஈடுபட்டான். இரண்டு பிள்ளைகளுக்குமான திருமணப் பேச்சுக்கள் ஆரம்பித்து திருமணத்திற்கான நாட்களும் குறிக்கப்பட்டன. இருப்பினும் வர்ஷாவுடன் சென்ற கடைசி மகளைப் பற்றி கவலைப்படாமலல்ல.

இரு பிள்ளைகளுக்கும் திருமணங்கள் ஒரே மேடையில் இடம்பெறுவதற்கான சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டு தடல்புடலாக வேலைகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் வர்ஷாவும், இளைய மகளும் திருமணத்திற்கு மூன்று நாட்களுக்கு முன் வீடு வந்து சேர்ந்தனர்.

எந்த கோபதாபத்திற்கும், கர்வத்திற்கும் ஆயள் மிகவும் குறைவானதே. வர்ஷா தனது கணவனிடமும் பிள்ளைகளிடமும் மன்னிப்பு கேட்டதையடுத்து இரு பிள்ளைகளினதும் திருமணங்கள் மிக சிறப்பாக ஒரே மேடையில் இடம்பெற்றன. புதிய மருமக்களால் நிறைந்த அந்த வீடு என்றுமே குதூகலத்திற்கு குறைவின்றி காணப்பட்டது.

கஜேந்திரன் ஒரு நாள் 'சேர் என்னுடைய விவாகரத்து வழக்கு விடயத்தை நிறுத்துங்கள்' என்று அலைபேசியினூடாக பேசியது வேறு யாருடனுமல்ல அவனது குடம் சட்டத்தரணியும், பிரத்தியேக ஆலோசகருமான திரு.வரதனுடனே.

**- பாலையூற்றான் -**

## விநோதங்கள்

### ஒரு வருட பசியின்மை

அமெரிக்காவில் உள்ள 12 வயது சிறுவன் டுயனெழெ துழநௌ என்ற சிறுவன் கடந்த ஒரு வருடங்களாக எந்தவித உணவும் சாப்பிடாமல் தண்ணீர் கூட குடிக்காமல் உள்ளான். அந்த சிறுவனுக்கு கடந்த அக்டோபர் மாதம் 14ஆம் தேதியில் இருந்து பசியே எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வித்தியாசமான நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் இந்த சிறுவனுக்கு அமெரிக்காவில் உள்ள டாப் 5 ஐந்து மருத்துவமனையில் சிகிச்சை கொடுக்கப்பட்டது. இருப்பினும் இந்த சிறுவனுக்கு பசியே எடுக்கவில்லை.



### டி.வீ பார்த்தமைக்கு மரணதண்டனை

தென் கொரிய நாட்டு டி.வி. சீரியல்களைப் பார்த்த வட கொரியாவை சேர்ந்த 50-க்கும் மேற்பட்டோர்களுக்கு மரண தண்டனை கொடுத்துள்ளதாக தென் கொரிய உளவுத்துறை அதிர்ச்சியான தகவல் ஒன்றை ஊடகங்களுக்கு வெளிப்படுத்தியுள்ளது. இதனால் இருநாடுகளிடையே பெரும் பதட்டம் ஏற்பட்டுள்ளது.

### இப்படியும் திருட்டா



ஜெர்மனியில் உள்ள னுயசஅளவயனவ என்ற பகுதியில் உள்ள ஒரு பார்மஸியில் கடந்த திங்கட்கிழமை மாலை 4.25 மணிக்கு வந்தார். அவர் தனக்கு மார்பகத்தில் இருந்து தாய்ப்பாலை எடுக்க உதவும் பம்ப் தேவை என்று கடைக்காரரிடம் கேட்க கடைக்காரரும் பம்ப்பை எடுத்து கொடுத்தார். உடனே அந்த இளம்பெண் தனது மேலாடையை நீக்கி மார்பகத்தில் பம்ப்பை வைத்து தாய்ப்பாலை அங்குள்ள கேஷியரின் முகத்தில் பீய்ச்சி அடித்தார். இந்த சமயத்தில் கேஷியரின் கவனம் திசைதிரும்பிய சில விநாடிகளில் கேஷ் பாக்ஸில் இருந்த பணத்தை எடுத்துவிட்டு மின்னலாக ஓடிவிட்டார். அவர் சென்ற பிறகு பணத்தை எண்ணிப்பார்த்தபோதுதான் பணம் கொள்ளையடிக்கப்பட்டது தெரியவந்தது.

### தாயின் தலையை எட்டி உதைத்த மகன்

அமெரிக்காவில் இளைஞர் ஒருவர் தனது தாயின் தலையை துண்டித்ததுடன் எட்டி உதைத்து விட்டு தானும் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து கொலை செய்த நபர் மனநிலை சரியில்லாதவரா என்ற கோணத்திலும் விசாரணை நடைபெற்று வருகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருட்டுக்கான தண்டனை

கிழக்கு சீனாவில் உள்ள 39 வயதான Mei Hsueh, என்பவர் ஒரு ஜவுளிக்கடை வைத்துள்ளார். இவரது கடையில் ஜவுளி வாங்க வந்த ஒரு இளம்பெண் கடைக்காரரை ஏமாற்றி ஒருசில துணிகளை திருடியதை கடை முதலாளி சிசிடிவி கேமரா மூலம் கண்டுபிடித்தார். உடனடியாக அந்த திருட்டு பெண்ணை பிடித்து கடைக்கு வெளியே இழுத்து வந்து வலுக்கட்டாயமாக அந்த இளம்பெண்ணை மேலாடைகளை கழட்டினார். அந்த இளம்பெண், கடை முதலாளியின் காலில் விழுந்து கதறி அழுது தன்னுடைய பிராவை மட்டுமாவது கொடுக்குமாறு கதறினார். ஆனால் கடை முதலாளி போலீஸார் வரும் வரை அந்த இளம்பெண்ணை அரைநிர்வாணமாக வைத்திருந்தார்.

### புதுவகை செல்லப்பிராணிகள்

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தை சேர்ந்த கார்ல் போவார்ட்(43), என்ற நபர் தனது ஒரு கண்ணின் பார்வையில் குறைபாடுள்ளவர். இவர் 6 புலிகள், 2 சிங்கம் மற்றும் சிறுத்தை ஒன்றுடன் தினமும் வாழ்ந்து வருகின்றார். மேலும் 2 கரடிகளையும், 2 முதலைகளையும் வளர்த்து வருகிறார். தினமும் விலங்குகளுடன் விளையாடி மகிழும் கார்ல், தன்னுடைய அனுபவம் பற்றி மக்கள் அறிந்து கொள்ள பேட்டி ஒன்றையும் அளித்துள்ளார்.



புது தில்லியில் "பாம்பாஷ்" என்ற படாடோபமான பெயர் கொண்ட நவ நாகரிகக் காலனி அது. தெருவை அடைத்துக்கொண்டு ஒவ்வொரு வீட்டு வாசலிலும் நிற்கும் கார்களும், வீட்டு ஜன்னல்களில் பொருத்தப்பட்டிருக்கும் ஏர்கண்டிஷனர்களும், பொருளாதாரத்தின் மேல் மட்டத்தில் உள்ளோர் குடியிருக்கும் காலனி அது என்பதைப் பறைசாற்றின.

காலை மணி எட்டு. கடும் கோடைக் காலம் அது. எம் பிளாக், எட்டாம் நம்பர் வீட்டில் குடியிருக்கும் கல்லூரி மாணவன் குமார், அப்பொழுதுதான் படுக்கையை விட்டு எழுந்திருந்து, பேப்பரும் கையுமாகச் சோம்பல் முறித்துக் கொண்டு சோபாவில் உட்கார்ந்திருந்தான். அந்தக் கோடையிலும் அவனால் குளிர் சாதனத்தின் உதவி கொண்டு எட்டு மணி வரையில் உறங்க முடிந்தது. அவனுடைய இப்பொழுதைய பிரச்னை இன்றையப் பொழுதை எப்படிக் கழிப்பது என்பதுதான்.

"ஹாய்! குமார்!" என்று ஆர்ப்பாட்டமாகக் கூவியவாறு உள்ளே நுழைந்தான், குமாரின் கல்லூரித் தோழன் விநோத்.

இருவரும் சாவகாசமாக உட்கார்ந்து கொண்டு, தங்களுடைய வழக்கமான அரட்டைக் கச்சேரியைத் தொடங்கினார்கள்.

"ஏதாவது அட்வென்சரஸாக நாம் இதுவரை செய்யாத காரியம் ஏதாவது செய்ய வேண்டும். யோசனை பண்ணுவோம!" என்று சொல்லிவிட்டுக் குமார் கையில் வைத்திருந்த செய்தித்தாளை மேலெழுந்தவாரியாக நோட்டம் விட்டான். திடீரென்று துள்ளிக் குதித்தான்.

"ஃபென்டாஸ்டிக் ஐடியா! சொல்றேன் கேள், இப்பொழுது பேப்பரில் அடிக்கடி வரும் செய்தி என்ன? இதோ பார். இன்றைய பேப்பரில் கூட வந்திருக்கே - ஸ்கூட்டரில் வந்து அதிக ஜனநடமாட்டம் இல்லாத தெருக்களில் நடந்து போய்க் கொண்டிருக்கும் பெண்களின் கழுத்துச் சங்கிலியைத் திருடுவது, "செயின் ஸ்நேட்சர்ஸ்." நாமும் இந்தத் திருட்டைச் செய்து பாத்தால் எப்படி இருக்கும்?" என்று உற்சாகமாகக் கேட்டான் குமார்.

"உனக்கு ஏண்டா இந்த திருட்டுப் புத்தி? உங்கப்பா உனக்குக் கொடுக்காத பாக்கெட் மணியா?"

"போடா, மடையா! பணத்துக்காகவா திருடப் போறோம. ஜஸ்ட் ஃபார் த்ரில். ஒரு அட்வென்சர்! அவ்வளவுதான்."

"வேண்டாம். மாட்டிக் கொண்டால் கம்பி எண்ண வேண்டி வரும். மானம் போய்விடும்!" என்று பயந்தான் விநோத்.

"சரியான தொடை நடுங்கியாக இருக்கிறாயே! பேசாமல் புடவையை எடுத்துச் சுற்றிக்கொள்" என்று குமார் ஓரேயடியாகக் கிண்டல் பண்ண ஆரம்பிக்கவே, விநோத் வேறு வழியின்றித் தன்னுடைய சம்மதத்தைத் தெரிவித்தான்.

மறுநாளே தாங்கள் நினைத்த காரியத்தை நிறைவேற்றிவிடலாம் என்று முடிவெடுத்தார்கள். அன்றைய பொழுதை அதற்கான திட்டம் வகுப்பதிலேயே செலவிட்டார்கள். இத்தகைய வேலைக்கு உகந்த நேரம் அதிகாலைதான் என்று தீர்மானம் செய்தார்கள்.

அடுத்த நாள் காலை நான்கு மணிக்கு அலாரம் வைத்துக் கொண்டு எழுந்தார்கள். காலை விமானத்தில் ஊருக்குப் போகும் நண்பன் ஒருவனை வழியனுப்பப் போவதாக வீட்டில் புளுகிவிட்டு ஸ்கூட்டரை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள்.

அந்த அதிகாலை வேளையில் அதிக ஜன நடமாட்டம் இல்லை. இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பணக் கொழுப்பினால் உடல் பருத்த சிலர் "வாக்" போய்க்கொண்டிருந்தார்கள். அந்தக் காலனியின் கடைசியில் இருக்கும் ஆர் பிளாக் வழியாக ஸ்கூட்டரை மெல்லச் செலுத்திக் கொண்டு போனார்கள். சாதாரணமாகப் பகல் நேரத்திலேயே அதிக ஜன நடமாட்டம் இல்லாத தெரு. அந்த அதிகாலை வேளையில் ஈ, காக்கை கூட இல்லை.

திடீரென்று நான்காவது வீட்டுப் பின் கதவைத் திறந்து கொண்டு, கையில் பால் தூக்குடன் ஒரு பெண்மணி கேட்டைத் திறந்துகொண்டு தெருவுக்கு வந்தாள். மணி சுமார் ஐந்து இருக்கும். அந்த மங்கலான வெளிச்சத்திலும் அவள் கழுத்தில் மின்னிய தங்கச் சங்கிலியைக் கவனித்து விட்டார்கள் குமாரும், விநோத்தும்.

# விளையாட்டு வினையாயிற்று

மெதுவாக ஸ்கூட்டரை ஓட்டிக்கொண்டு போய் அவள் அருகில் நிறுத்தினான் விநோத். பின் சீட்டில் உட்கார்ந்திருந்த குமார் "எச் பிளாக் எங்கே இருக்கிறது தெரியுமா?" என்று தந்திரமாகக் கேட்டுக் கொண்டு அவள் அருகில் சென்றான்.

விநோத் ஸ்கூட்டரின் இஞ்சினை அணைக்காமல் காத்திருந்தான் சடாரென்று குமார் மறைத்து வைத்திருந்த கத்தியைக் காண்பித்து, "கூச்சல் போட்டால் குத்திடுவேன். மரியாதையாகச் சங்கிலியைக் கழற்றிக் கொடுத்துவிடு" என்று முரட்டுக் குரலில் மிரட்டினான்.

தாங்கள் நினைத்த வேலை இவ்வளவு எளிதில் முடிந்துவிடும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அப்பெண்மணி உயிருக்குப் பயந்து, மறுபேச்சின்றி நடுங்கும் கரங்களினால் சங்கிலியைக் கழற்றிக் கொடுத்து விட்டாள். கண் மூடிக் கண் திறக்கும் நேரத்தில் ஸ்கூட்டர் சிட்டெனப் பறந்துவிட்டது. ஸ்கூட்டரின் பின் விளக்கு எரியாததால் அப்பெண்மணி ஸ்கூட்டரின் எண்ணைப் பார்த்திருக்க வாய்ப்பில்லை.

குமாரும் விநோத்தும் அன்று முழுவதும் ஆகாசத்தில் தான் பறந்து கொண்டிருந்தார்கள், தங்கள் வீர தீரச் சாதனையை நினைத்து! அவர்களுடைய ஒரே குறை தாங்கள் செய்த காரியத்தை நாலு பேரிடம் சொல்லிப் பெருமை அடித்துக் கொள்ள முடியவில்லையே என்பதுதான்.



மறுநாள் செய்தித் தாள்களில் எங்கோ ஒரு மூலையில், "செயின் ஸ்நேட்சர்ஸ்" என்ற தலைப்பில், நான்கு வரிகளில், ஒரு மாமூல் செய்தியாக இத்திருட்டைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. மற்றபடி போலீஸையோ பொதுமக்களையோ இந்நிகழ்ச்சி அதிகம் பாதித்ததாகத் தெரியவில்லை.

இந்நிகழ்ச்சி நடந்து சுமார் ஒரு மாதம் ஆகியிருக்கும். கோடை விடுமுறை முடிந்து கல்லூரிகள் எல்லாம் திறக்கப்பட்டுவிட்டன. குமாரும் விநோத்தும் புது மாணவர்களை ராகிங் செய்வதில் பொழுதை உல்லாசமாகக் கழித்துக் கொண்டிருந்தனர். ராகிங் உற்சாகத்திலும் பரபரப்பிலும் தாங்கள் ஒரு மாதத்துக்கு முன்பு செய்த திருட்டைப் பற்றி மறந்து கூடப் போய்விட்டார்கள் என்று சொல்லலாம்.

அன்று ஞாயிற்றுக் கிழமை காலை நேரம். கல்லூரிக்குப் புறப்பட வேண்டிய அவசரம் இல்லாததால், சோம்பல் முறித்துக்கொண்டு பேப்பரும் கையுமாக உட்கார்ந்திருந்தான் குமார். உள்ளூர்ச் செய்திகள் பிரசுரமாகும் பக்கத்தில் "வரதட்சணைக் கொடுமையினால் மற்றொரு பெண் தீக்கிரையானாள்" என்ற தலைப்பில் ஒரு செய்தியும், இறந்துபோன அப்பெண்ணின் படமும் வெளிவந்திருந்தன.

அப்பெண்மணியைத் தான் எங்கேயோ பார்த்திருக்கிறோம் என்று தோன்றியது குமாருக்கு. ஆனால் சட்டென்று நினைவு வரவில்லை. சிறிது நேரம் மூளையைக் குழப்பிக்கொண்ட பிறகு ஞாபகம் வந்து விட்டது. ஒரு மாதத்துக்கு முன்பு அதிகாலை வேளையில் ஒரு பெண்ணை மிரட்டிச் சங்கிலியை அபகரித்தோமே, அவளேதான் இப்பெண்மணி என்று புரிவதற்கு அதிக நேரமாகவில்லை. ஒருவித ஆவலினால் உந்தப்பட்டவனாக குமார் அச்செய்தியைப் படிக்க ஆரம்பித்தான்.

"பாம்பாஷ்" காலனியில் ஸர்வென்ட்ஸ் குவார்ட்டர்ஸ் ஒன்றில் குடியிருக்கும் டிரைவர் சதீஷின் பெண் நிர்மலை, அவள் மாமியாரும், நாத்தனார்களும் சதித்திட்டமிட்டு அவள் சமையல் அறையில் வேலை செய்து கொண்டிருந்தபொழுது அவள் மீது மண்ணெண்ணெயைக் கொட்டி, தீக்கு இரையாக்கி விட்டார்கள்.

"நிர்மலின் புக்ககத்தார், அவள் ஒவ்வொரு முறை பிறந்த வீட்டுக்குப் போய்விட்டு வரும்பொழுதும், சைக்கிள், தையல் மிஷின், பீரோ என்று சீர் கொண்டு வர வேண்டும் என்று துன்புறுத்துவார்களாம். இம்முறை பிறந்த வீட்டிலிருந்து திரும்பிய நிர்மல், கழுத்தில் அணிந்திருந்த சங்கிலி திருட்டுப் போய்விட்டது என்று சொன்னதை நம்பவில்லையாம் அவர்கள். மேற்கொண்டு சீர் கொண்டு வராமல், இருந்த சங்கிலியையும் பிறந்த வீட்டில் வைத்து விட்டு வந்துவிட்டாள் என்ற ஆத்திரத்தில் இந்தக் கொடூரமான செயலில் இறங்கி விட்டார்கள்.

"அக்கம் பக்கத்தில் உள்ளோரின் உதவியினால் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட நிர்மல், இறப்பதற்கு முன்பு கொடுத்த வாக்குமூலத்தில் இவ்விவரங்களைக் கூறனாள்."

செய்தியைப் படித்து முடித்த குமாருக்கு தலை சுற்றியது. திரில், அட்வென்சர் என்று நினைத்துத் தான் செய்த காரியம் ஓர் அப்பாவியின் உயிர் இவ்வுலகை விட்டுப் பிரிவதற்குக் காரணமாக இருந்துவிட்டது என்று நினைக்கையில் துக்கம் தாளவில்லை. வாழ்நாள் முழுவதும் மனசாட்சி உறுத்திக்கொண்டே இருக்குமே, தான் செய்த பாவத்துக்கு மன்னிப்பு ஏது என்று எண்ணி எண்ணி மறுகினான் குமார்.

- பார்வையை மீட்க -

# எரிமலை

ஓ இன்று கோகிலாவைப் பெண் பார்க்க வருகிறார்கள். அதுதான் கோகிலாவின் அண்ணி சுதா அவளை அலங்காரம் செய்து கொண்டிருந்தாள்.

கோகிலா அண்மையில்தான் கனடா வந்திருந்தாள். அவள் அண்ணன் ராகவனோ தன் தங்கை மீது உயிரையே வைத்திருந்தான். அவன் தனக்குத் தெரிந்த புரோக்கர் மூலமாக தன் ஆருயிர்த் தங்கைக்காக வரன் தேடிக்கொண்டிருந்தான். பெண் பார்க்க வருபவர்களோ மண்பார்த்துத் தலை கவிழ்ந்து சென்றனர். அவர்கள் எதனை எதிர்பார்க்கிறார்கள்? கை நிறையச் சீதனம் கொடுக்க அவள் அண்ணன் தயாராகவேயுள்ளான். அவள் குணத்திற்கு நிகர் அவளே தான்.

கோகிலா பிறந்த போது அன்று அமாவாசை போலும். அதனால் அவள் நிறமும் அப்படியே ஆகிவிட்டாற் போலிருந்தது. கோகிலா உண்மையிலேயே ஓர் கோகிலம் தான். அவள் வாய் திறந்து பாடினால் அனைவரும் அப்படியே மயங்கி தம்மை மறந்து ரசிப்பார்கள். இருந்தும் அவளைத் துணையாகக் கைப்பிடிக்க எந்தவொரு ஆண்மகனும் முன்வரவில்லையே. அவளைப் பெண்பார்த்தவர்கள் எத்தனைபேர். கோகிலாவிற்கு ஏன் இவர்கள் எனக்காக வரன் பார்த்து இவ்வளவு சிரமப்படுகிறார்கள் என்றிருந்தது. இருந்தாலும் நான் இவர்களுக்கு ஓர் சுமையாகி விடக்கூடாதே என்ற நினைப்பின் உந்தலாலேயே இன்றும் இந்த பெண் பார்க்கும் படலத்திற்கு ஒப்புக்கொண்டாள். ஒவ்வொரு முறையும் மாப்பிள்ளை வீட்டார் போனபின் அண்ணாவின் துடிப்பு அவள் மனதைக் கசக்கிப் பிழிவது போலிருக்கும். ஆண்டவன் மேல் கோபம் கோபமாக வரும் ஏன் என்னை இப்படிப் படைத்தாய் என்று கடவுளிடம் சண்டை செய்தாள்.

சுதா ஒரு பொம்மைக்கு அலங்காரம் செய்வது போலக் கோகிலாவை அலங்கரித்துக்கொண்டிருந்தாள். இருவரிடையேயும் மெளனம் நிலவியது. அந்த மெளனத்தைக் கலைத்தான் ராகவன். மாப்பிள்ளை வீட்டார் வந்தாகிவிட்டது என்று ஒருவித படபடப்புடன் வெளியே போனான் அவனைத் தொடர்ந்து சுதாவும் போய்விட்டாள். சிறிது நேரத்தின் பின் பெண்ணை அழைத்து வரும்படி மாப்பிள்ளையின் அம்மா கூறினாள்.

இவர்களுக்கு மட்டுமென்ன என்னைப் பிடிக்கவா போகிறது? எல்லோரும் என் தோலின் நிறத்தைத்தானே பார்க்கிறார்கள். இப்படியான பல சிந்தனைகளுடன் தேநீர்த்தட்டை ஏந்திய வண்ணம் மெல்ல நடந்து வந்தாள். அவள் கைகள் நடுங்கின. அவள் உள் மனமோ என்னை வேண்டாம் என்று சொல்லிவிட்டுப் போகப் போகிறவர்களுக்குத்தானே நான் தேநீர் கொண்டு போகின்றேன் என்று ஓலமிட்டது. வெள்ளைத் தோலிருந்தால் குணம் நடை பார்க்காமல் கட்டத் துடிக்கும் இளைஞர் கூட்டம் மலிந்த இந்தக் கனடாவில் யாருக்கு என்னை ஏற்க மனம் வரும்.

ஒவ்வொருவராக தேநீர்த்தட்டை நீட்டியபடியே போலியாக ஒரு புன்னகையை தன்னைப் பார்த்து சிரித்த அந்த அம்மாளிடம் வீசியபடியே தன் அறைக்குள் விர்ரென்று போய்விட்டாள். தான் நடந்து கொண்டவிதம் சிறிது அநாகரிகமாக அவளுக்குப்பட்டது. இருந்தும் அவளுக்கு அப்படிச் செய்தால்தான் அவள் மனம் சிறிது ஆறுதலடையும் போல்பட்டது. அவள் பள்ளித் தோழி நித்யா கூட அவர்களுடன் வந்திருந்தாளே. அவளுடனாவது நான் சிரித்திருக்கலாம் அட அவள்கூட என்னைப் பற்றி என்ன நினைத்திருப்பாள். இப்போ எட்டு வருடங்களின் பின் இன்று அவளைச் சந்திக்கின்றேன்.

அவள் மனம் எரிமலையாகக் கொதித்துக் கொண்டிருந்தது. அதை மற்றவர்களால் எப்படி உணரமுடியும். யன்னலினூடே வெளியே பார்த்தாள். வசந்த காலமாதலால் மரங்கள் துளிர்விட்டு எங்கும் பச்சை நிறம் படர்ந்திருந்தது. பறவைகள் கூட எவ்வளவு சந்தோசமாக இந்த வசந்தத்தை அனுபவிக்கின்றன. அது அவள் மனதிலே கொதித்துக் கொண்டிருந்த எரிமலையின் வெளிப்பாடாகவே இருந்தது. அந்த வெம்மையைத் தணிப்பது போல யன்னலினூடே மெல்லெனத் தவழ்ந்து வந்த தென்றல் அவள் வதனங்களை மெல்ல வருடி விளையாடியது. தன்னையே மறந்து சிந்தனையில் மூழ்கிவிட்டாள் கோகிலா.

ஊரிலே அம்மாவும் அப்பாவும் பார்க்காத வரன்களா? இங்கு கனடாவில் பக்கத்து வீட்டாரையே தெரியாத நிலையில் இருக்கும் போது இதுவெல்லாம் எப்படிச் சாத்தியமாகும்? அண்ணாவும் அண்ணியும் தங்கள் மாப்பிள்ளை தேடும் படலத்தில் சலிப்பதாகத் தெரியவில்லை. என் பயணத்தைத் தொடர எனக்கு ஒரு துணை தேவை. நான் ஒரு கூட்டுப் புழுவாக குறுகித் தவிப்பது யாருக்குப் புரியும்? நானும் பெண்தானே. எனக்கும் கல்யாண தேசம் போக ஆசை. ஆனால்... என்னை அங்கு அழைத்துச் செல்ல ஒரு மனிதர் அந்தத் துணை எங்கே? கன்ன ஓரத்தில் ஓர் மயிர் நரைகாண.... கண்ட கனவுகள் மெல்ல மெல்லக் கரைந்தோட.. மற்றோரை மகிழ்விக்க மரியாதைப் புன்னகைகள்.

தோளிலே ஒரு கை பட நினைவுகளினின்றும் மீண்டும் மெல்லத் திரும்பியவள் தன் தோழி நித்யா சிரித்தபடியே தன் கரங்களை அப்படியே இறுகப் பற்றிப் பிடிப்பதை உணர்ந்தாள். கோகிலா நீ எப்படி இருக்கிறாய்? எத்தனை வருடங்களின் பின் உன்னைப் பார்க்கிறேன் தெரியுமா? கொஞ்சம் மெலிந்த மாதிரிக்கூட இருக்கு. அதற்கு மேல் அவர்களுக்கு வார்த்தைகள் வர மறுத்தன. இருவரும் தம் கரங்களை இறுகப் பற்றிப் பிடித்தபடி ஒருவரை ஒருவர் பார்த்தபடி சிலையாக நின்றனர். வாசலிலே காலரவம் கேட்டு இருவரும் திரும்பிப் பார்த்தனர். அங்கே சிரித்தபடியே ராகவனும் அவனருகில் நித்தியாவின் அண்ணா முகுந்தனும் நின்றிருந்தனர். இனி உன் சம்மதத்தில்தான் எல்லாமே இருக்கு என்றபடி கண்களைச் சிமிட்டிய படியே அறையை விட்டுமெல்ல நழுவினாள் நித்யா.

முகுந்தனும் கோகிலாவும் தனிமையில் விடப்பட்டனர். கோகிலாவால் நம்பவே முடியாமலிருந்தது. என்ன யோசிக்கிறீங்க? என்னை உங்களுக்குப் பிடித்திருக்கா? கோகிலா உம்மைப் பற்றி எல்லாமே எனக்குத் தெரியும். இந்தக் கனடாவில் நான் பல பெண்களைப் பார்த்தேன். ஆனால் நான் தேடுகின்ற ஏதோ ஒன்று அவர்களிடம் இருப்பதாக எனக்குப் படவில்லை. ஆனால் நான் எதிர்பார்க்கின்ற எல்லாமே ஒன்றாக உம்மிடம் இருக்கிறதாக உணர்ந்தேன். நித்யா உம்மைப் பற்றி எல்லாமே சொல்லியிருக்கிறாள் என்று சொல்லிக்கொண்டேயிருந்தான் முகுந்தன். அவள் நெஞ்சு படபடத்தது. அவனது ஒவ்வொரு வார்த்தைகளும் அவளை ஊடுருவித் தன் உயிரில் கலப்பதாக உணர்ந்தாள். அவனது ஒவ்வொரு வார்த்தைகளும் அவளுக்கு இதமாகவும் நம்பிக்கையூட்டுவதாகவும் இருந்தது. அவள் இருதயம் பலமாக அடித்தது. அந்த ஓசை அவனுக்குக் கேட்டுவிடுமோவென அஞ்சினாள். அவள் கைகள் வியர்த்தன. என்ன நான் சொல்லிக்கொண்டேயிருக்கிறேன் நீங்கள் பேசாமலிருக்கிறீர்கள் என்றான். அவள் அவன் கண்களை நிமிர்ந்து அப்போதான் முதல் தடவையாகப் பார்த்தாள். அந்தக் கண்களிலே பொய்யில்லை. அந்தக் காந்தக் கண்களின் கவர்ச்சியிலே அப்படியே அவள் ஈர்க்கப்பட்டுவிட்டாள். அவள் நெஞ்சிலே பொங்கிநின்ற எரிமலை கூட அவன் பார்வையின் குளிர்ச்சி கண்டு தணிந்து போயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிமுரசு

## மானுடம் வெல்லும் . . .

விரிந்த மனங்களுடன்
சுருங்கிய உலகம் நோக்கி
சிறகுகளை விரிக்கின்றன-சில
மனிதப் பறவைகள்.

நான் உங்களைக் கண்டேன்

முன்னைய நாட்களில்
உணவின்றித் திரிந்த
என்னைப்போலவே
நீங்கள் இருந்தீர்கள்

முன்னைய நாட்களில்
அன்பு தேடியலைந்த
இவனைப் போலவே
நீங்கள் இருந்தீர்கள்

அன்றொரு நாளில்
அவனி மீது கொண்ட
நம்பிக்கையீனத்தின் பால்
மறுபிறப்பின்றிய மரணத்தைத்
தேடிய
மனிதனைப் போலவே
நீங்கள் இருந்தீர்கள்

எனினும் நான் உங்களை
இன்று கண்டேன்

இன்னும் மரணிக்காதிருக்கும்
மனிதர்களாய்க் கண்டேன்

நான்
உங்களை .. .. ..

எமது பரஸ்பரம்
ஏதும் மாற்றஞ்செய்யாதிருந்தது
உங்கள் உடைகளில்.. .. ..
உடல்களில்.. .. .. ..

ஏன் எங்களிடையேயான
உறவுகளிலும் தான்.. .. .

மாற்றம் மனத்தினுள்ளே நிகழ்ந்தது.
.. .. ..

நாங்கள்
அவணியின் அழகின் மீது
பற்றுக் கொண்டோம்.. .. ..
அனைவரையும் அன்பு செய்யும்
அறிவு கொண்டோம்.. .. ..
பசிக் களைப்புடன் தெருக்கோடியிற்
கிடக்கும் மனிதப் புழுவிற்கும்
விருந்தோம்பும்
மாற்றம்.. .. ..

எம் மனதிலே நிகழ்ந்தது.. .. ..

விரிந்த மனங்களைக் கொண்டு
சுருங்கிய உலகம் நோக்கி
சிறகுகளை விரிக்கின்றன - பல
மனிதப் பறவைகள்.

அறிவை ஆயுதமாய்க் கொண்டு
மனிதப் பறவைகள் பல
சிறகை விரிக்கும்

சில நாட்களின் பின்னே
சுருங்கிய உலகை நோக்கி.. .. ..

- - மாயன் - -



## வீண் நாட்களடா!

– தாமரைத்தீவான் –
[ஆ.ச்சந்தீவு, கிண்ணியா]


வந்ததும் போனதுமா - அல்லது
வாழவும் செய்தோமா?
எந்தத் தலைமுறைக்கோ - உயர
ஏற்றம் அளித்தோமா?

போய் - வரப்போவதில்லை - தெரிந்தும்
பொய்யால் மயக்காமல்,
ஆய் வுரை வள்ளுவன் போல் - நலமாய்
ஆருக்கு ஏது செய்தோம்?

தமிழுக்கென்ன செய்தோம் - தமிழர்
சந்ததிக் கென்ன செய்தோம்?
அமுதம் தந்துயர்ந்தார் - பாவாணர்,
ஆமாமாம் பாவேந்தர்!

ஒன்றுமே இல்லையெனில் - சிந்தனை
ஊற்றும் அடைபடட்டும்!
நன்றற்ற வாழ்க்கையடா - நமது
நாட்கள் வீண் நாட்களடா!





## கொடுமைகளை வெளிக் கொணர கூர்ப்பேனா முனைய வேண்டும்

ஊடக வியலாளன் பேனா
உண்மைகளை எழுத வேண்டும்
ஊரவர்கள் தேடலுக்கு
உணர்த்த வேண்டும் தகவல்களை!

நடு நிலமை தவறாமல் நிலை
நாட்ட வேண்டும் ஊடக தர்மமதை
கொடுமைகளை வெளிக்கொணர
கூர்ப் பேனா முனைய வேண்டும்!

வரலாற்றைச் சிதையாமல்
வடிவாக ஆராய்ந்து
முறையாக வாசகர்க்கு
பறைய வேண்டும் செய்திகளை!

அச்சுறுத்தல் எதிர்ப்பலைகள்
அடிக்கடி வருவதுண்டு
நெருக்கடி நிலைக்குள்ளும்
நிலை குலையாமல் எழுதுபவர்கள்!

சுதந்திரமாய் எழுதுபவன் என்றும்
சோரம் போக மாட்டான்
நிரந்தரமாய் அசன் பேனா நாட்டில்
நிகழ்பவற்றைத் தானெழுதும்!!

சேனையூரான்

## "உறவு"

ஆண்டவனின் படைப்பினிலே
அற்புதங்கள் பல கண்டேன்
அத்தனையும் உண்மையென்றும்
அறிந்துகொண்டேன்

கண்ணுக்குத் தெரியாத
காரியங்கள் பலநூறு
எண்ணத்தில் தோன்றாத
ஏராளம் பொருள் தருமே

உயிரினங்கள் அத்தனைக்கும்
உறவு எனும் நூல்வேலி
புனைந்து அதற்கு
புனிதமென வைத்துவிட்டான்

பக்தி எனும் உறவு
பாசம் எனும் உறவு
தித்திக்கும் செலவுறவு
தெவிட்டாது காலமெல்லாம்

ஏராளம் உறவுகள்
இருந்திடினும் ஒவ்வொன்றும்
வேறான உணர்வுகளே
விந்தை இதுவன்றோ.

நூல் : பொன்னாவுரை -
சேனையூர் இரத்தினா



# எல்லோரும் ஏகலைவர் தாமோ!!

**ஏகலைவன் தொன்மோடிக் கூத்துப் பிரதிக்கு வழங்கிய முன்னுரை.**

எனது சிறுபராயத்தில் ஏகலைவன் எனக்கு அறிமுகமாகின்றான். அந்த அறிமுகம் எனக்கு துயரத்தைத் தந்தது. அத்துடன் தர்மம், அதர்மம் பற்றிய வகுப்பறைக் கற்பித்தல்கள், கதாப் பிரசங்கிகளின் கதையாடல்கள், நியாயப்படுத்தல் கள் எல்லாவற்றிலும் சந்தேகம் இழையோடத் தொடங்கிவிட்டிருந்தது.

சத்திரியருக்குச் சேவகம் செய்யும் பார்ப்பனத் துரோணரிடம் வேடர் குலத்தவனான ஏகலைவன் ஏன் வந்தான்? கட்டை விரலை வெட்டிக் குருதட்சணையாகத் துரோணரிடம் கொடுத்த கதை ஏன் பாடப் புத்தகங்களுள் உள்ளடக்கப்பட்டது? குருபக்தியின் பெயரில் ஏகலைவன் ஏன் பெருமைப் படுத்தப்படுகிறான்? என்ற கேள்விகள் என்னுடன் வளரத்தொடங்கிற்று.

ஆயினும் ஏகலைவனின் குருபக்தி பற்றிய அதே கதைகள் எங்கும் எதிலும் சுற்றிச் சுற்றி வந்து கொண்டே இருக்கின்றன. ஆங்காங்கே இந்தப் போக்கிரித்தனம் பற்றிய கேள்விகளும், பார்வைகளும் எழுந்து கொண்டேதான் இருக்கின்றன. ஆனால் இவற்றில் எல்லாம் கடவுளும் கலந்திருப்பதால் பக்தியும், பயமும், சேர்ந்து இக்கேள்விகளை மழுங்கடித்து வருவதாகவும் இருக்கின்றது. பொதுப்புத்திக்கும் பயபக்திக்குமான போராட்டத்தில் பயபக்தியின் ஆதிக்கம் எதிர்கொள்ளப்பட வேண்டியது.

இந்த பயபக்திக்குள் நாங்கள் எவ்வாறு ஆட்படுத்தப்பட்டோம்? ஏனெனில் எங்களது உள்ளூர் சடங்கு வழிபாடுகள் கடவுளரை அம்மா, தாயே, நீ என நெருக்கமாகவும், உரிமையாகவும் அன்பாக வேண்டுவதாகவும், அதட்டுவதாகவும், இருக்கும். கட்டு, வாக்கு என்ற பெயர்களால் கடவுளருடன் நேரடியான உரையாடலிருக்கும். சொர்க்கம், நரகம் பற்றிய மகிழ்ச்சியோ அச்சமோ இங்கிருப்பதில்லை. இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்வது உள்ளூர் வழிபாட்டு முறைகளின் அடிப்படை.

கண்ணுக்குப் புலனாகா வகையில் எமக்கு காவலாக இருந்து வரும் எமது மூதாதையரின், சூழலில் எல்லா உயிர்களுடனும், சூழலுடனும் ஒத்திசைந்து வாழ்வது உள்ளூர் வழிபாட்டு முறையின் சாரம்சமாகும்.

இந்த இடத்தில் இரு விடயங்கள் பற்றிச் சிந்திக்க வேண்டியிருக்கிறது. 'வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்', 'நாரதர் கலகம் நன்மையில் முடியும்' என்ற எமது அன்றாட உரையாடல்களில் தொக்கி நிற்கும் அர்த்தங்கள் ஆழ்ந்த புரிதலுக்குரியவை. நாரதர் கலகம் யாருக்கு நன்மையில் முடிந்திருக்கிறது? தருப்பைப் புல்லைக் கையில் வைத்தே பார்ப்பனக் கருத்தாக் கத்துள் மூழ்கடித்துள்ள வல்லபங்கள் யாருடையவை?

இந்த பின்னணியில் தான் இளையோரு க்கான அரங்காக உருவாக்கப்பட்ட தமயந்தி யின் ஏகலைவன் தென்மோடிக் கூத்தைப் பார்க்கவேண்டிருக்கிறது.

கூத்துக்களில் பாரத, இராமாயணக் கதைகள் மட்டுமல்ல உள்ளூர்க் கதைகள், வரலாறுகள், கற்பனைக் கதைகள் என பல பனுவல்களை புலவர்கள் பாடி வைத்துள்ளனர். அண்ணாவிமார் அவற்றைக் கூத்தர் துணை கொண்டு ஆட வைத்துள்ளனர். இது இற்றைவரை வற்றாத பெருநதியாகப் பெருக்கெடுத்துப் பாய்ந்து வருகிறது. ஈழக்கூத்தரங்கு எனும் நதியின் ஓட்டம் பாரம்பரிய எல்லைகள் கடந்து இடம்பெயர் முகாம்கள், சிறைச்சாலைகள், புலம்பெயர் தேசங்கள் என பரந்து விரிந்து செல்கின்றது.

தமயந்தியின் ஏகலைவன்
வாழ வேண்டும் தர்மம் நீதி
வையம் உள்ள
காலம் மட்டும் ஆள வேண்டும் நாளை
உலகை
ஐயம் இல்லா நேயம்

என்ற அடிப்படை அரசியல் நோக்கமும் ஏக்கமும் கொண்டதாக இருக்கிறது.

ஆளவேண்டும் என்றும் உலகை ஐயம் இல்லா நேயம்

நீதியானதும் நியாயமானதுமான உலகம் இன்றைய தேவை. நீதியான நியாயமான உலகம் இன்றைய மனிதருக்கு உரித்தானது.

தமயந்தியின் ஏகலைவன் கூத்தின் கட்டியனைப் பார்த்துக் கூறுவது போல் 'சற்றுப் பொறுங்கள் கட்டியரே, இந்த ஏகலைவனையும் அறியட்டும் மக்கள்.

ஏகலைவன் பாடுகிறான்,' சங்கைக்குரிய என்
குருவே உம் எண்ணமும் - எந்தன்
சாக்காட்டில் போகும் வரை
ஈடேறா தறியுங்கள்
வித்தை நாம் கற்றிட
மறுத்திடல் நியாயமோ?
[illegible] வித்தையை



பறித்திடல் நீதியோ
கண்டு கொண்டேன்................"

இவன்தான் தமயந்தியின் ஏகலைவன்.

ஏகலைவன் உரை:- "குருவே கட்டை விரலென்ன, உயிரினையும் ஈயவும் சித்தமாயுள்ளேன். ஆனால் உங்கள் உள்ளெண்ணம் குரோதமானது. சதி நிறைந்தது. வரலாறு உங்கள் குரோத்தை இழித்துரைக்கும். என்னையும் மூடனென நகைத்துரைக்கும். நான் தரும் குரு காணிக்கையால் இந்த இரண்டு தவறும் நிகழவேண்டாம். நீங்கள் சென்று வருக"

தமயந்தியின் ஏகலைவன் தன்னையும் காப்பாற்றி அவன் குரு என அழைக்கும் துரோணரையும் காப்பாற்றி இருக்கின்றான்.

ஏகலைவன் பற்றிய பல்வேறு மீள்வாசிப்புக் களில், தமயந்தியின் மீள்வாசிப்பு கல்வி மறுப்புப் பற்றிய சமுதாயப் பிரச்சனையுடன் தொடர்புபட்டதாக இருக்கிறது.

இக்கூத்து குறுகிய நேர அளவில் நயக்கக் கூடியதும் சிந்திக்கத் தூண்டுவதுமான படைப்பாக, குறிப்பாக இளையோருக்குப் பொருத்தமான வகையில் படைக்கப் பட்டிருக்கிறது.

ஈழச்சூழலில் புரிந்து கொள்ளக் கூடியதும் கூத்துக் கலைக்கேயான மொழிப்பாவனை கொண்டதாக இருப்பது இதன்பலம். ஆயினும் புலம்பெயர் சூழலின் இளையோர் மத்தியில் இக்கூத்தின் மொழிப் பயன்பாடு எந்த அளவிற்குத் தொடர்புபடும் என்பது பரீட்சார்த்தத்திற்குறியது.

**தொடரும்.....**

**கலாநிதி சி.ஜெயசங்கர்**
நுண்கலைத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்
இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'என்னை அறிந்தால்' – தல



கௌதம் மேனன்-அஜீத் இணைந்திருக்கும் புதிய படத்திற்கு 'என்னை அறிந்தால்' என்று பெயர் வைத்திருக்கின்றனர். கௌதம் மேனன் இயக்கத்தில் அஜீத் நடித்து வரும் படம் கிட்டத்தட்ட 6 மாதங்களுக்கு மேலாக நடைபெற்று வருகிறது.

## ரெய்டில் கைது




ஐதராபாத் நகரில் ஒதுக்குபுற பகுதியில் உள்ள ஆடம்பரமான ரிசார்ட் ஒன்றில் தெலுங்கு முன்னணி நடிகைகள், சின்னத்திரை நடிகைகள் உள்பட பலர் கலந்து கொண்ட மதுவிருந்து ஒன்றில் திடீரென புகுந்து ரெய்டு செய்த போலீஸார் சுமார் 20க்கும் மேற்பட்ட நபர்களை கைது செய்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அனுஷ்கா காதலருடன் மருத்துவமனையில்



பிரபல பாலிவுட் நடிகை அனு'்கா 'ர்மா முன்னணி கிரிக்கெட் வீரர் விராத் கோஹ்லியுடன் மும்பை மருத்துவமனைக்கு ரகசியமாக வருகை தந்ததாகவும், அவர்கள் எதற்காக வந்தார்கள் என்பது புரியாத புதிராக இருப்பதாகவும் பாலிவுட் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அனு'்கா 'ர்மாவின் வருகையை அந்த மருத்துவமனையில் இருந்தவர்கள் உறுதிப்படுத்தியுள்ளதால் பாலிவுட் திரையுலகம் பெரும் பரபரப்பில் உள்ளது.

## உயிருடனிருக்கும் அம்மாவுக்கு கோவில்



இயக்குனரும், நடிகருமான ராகவா லாரன்ஸ் தீவிர ரஜினி ரசிகர். அதனால் ரஜினியின் குருவான ஸ்ரீராகவேந்திரருக்கு கோவில் கட்டி உள்ளார்.

இது தவிர ஆதரவற்ற, மாற்று திறனாளி குழந்தைகளுக்காக இல்லம் நடத்துகிறார். இப்போது தன் தாய் கண்மணிக்கு கோவில் கட்டுகிறார். இதற்காக பூந்தமல்லி அருகே உள்ள மேவலூர் குப்பம் என்ற ஊரில் இடம் தேர்வு செய்துள்ளார். ராஜஸ்தான் மாநிலத்தில் தாயின் சிலை செய்ய ஆர்டர் கொடுத்துள்ளார்.

## 10 பேரை ஒரே நேரத்தில் அடிப்பீங்களோ?



இதுவரை முழுநீள காமெடி படங்களில் மட்டுமே நடித்து வந்த சிவகார்த்திகேயன். திடீரென காக்கி சட்டை படத்தில் ஆக்ஷன் அவதாரம் எடுத்திருக்கிறார். துரை செந்தில்குமார் காக்கிசட்டை கதையை சொல்ல வந்தபோது ஒரு நேரத்தில் பத்து ஆளை பறக்க விடுற போலீசாக இல்லாம ரியல் போலீஸ். எங்க அப்பா மாதிரி போலீசாகணுங்ற என்னோட சின்ன வயசு கனவு நிறைவேறல அது சினிமால நடந்திருக்கு என்கிறார் சிவா.

## கொம்பன் வெள்ளத்தில்



அருவியின் அருகில் கார்த்தி சண்டை கலைஞர்களுடன் சண்டை காட்சியில் நடித்து வந்தார். அப்போது கடந்த நான்கு நாட்களாக பெய்து வந்த கனமழை காரணமாக அருவில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இரவு நேர படப்பிடிப்பு என்பதால் இதனை யாரும் கவனிக்கவில்லை. இடுப்பளவு தண்ணீரில் நின்று சண்டைபோட்ட கார்த்தியின் கழுத்தளவுக்கு தண்ணீர் வரவும்தான் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருப்பது தெரிந்தது. உடனடியாக வனத்துறையினர் அருவிக்கு அருகில் சென்று கார்த்தி உள்பட அங்கிருந்தவர்களை பாதுகாப்பாக மீட்டு வந்தனர்.

## நோ பிகினி – சமந்தா



"அஞ்சான்" படத்தில் பிகினி உடைதரித்து அதிரடியாக பிரவேசித்தார். அதற்கு பெரிதாக ரெஸ்பான்ஸ் கிடைக்கவில்லை. மாறாக, குடும்ப பாங்கான வேடங்களில் நடித்ததற்கு அவருக்கு பாராட்டு கிடைத்துள்ளது.

ரசிகர்கள் பலரும், "குடும்ப பாங்கான வேடங்களிலேயே நடியுங்கள்" என, அவரிடம் கூறி வருகின்றனராம். அதனால், "இனிமேல் தப்பித்தவறி கூட, பிகினி பக்கம் திரும்பமாட்டேன்.

## ஹன்சிகாவுடன் மோதும் நயன்

நயன்தாராவுக்கு, தற்போது ஆக் 'ன் கதை களத்தை கொண்ட படங்கள் தான் அதிகமாக கிடைக்கின்றன. ஆனால், அவரின் கவனமோ சரித்திர கதைகள் பக்கம் திரும்பியுள்ளது.

## சன்னிக்கு முத்தமில்லை

சன்னி லியோன் நடிக்கிறார் என்றால் அந்த படத்தில் நாயகனாக நடிக்க பணம் கூட வாங்க மாட்டார்கள். ஆனால் தற்போது ஒரு நடிகர் அவர் இருந்தால் நான் நடிக்க மாட்டேன் என்று கூறியுள்ளாராம் கிஸ்ஸிங் ஸ்டார் இம்ரான் ஹஸ்மி. இவர் எப்படி வேண்டாம் என்று சொன்னார் என்று பாலிவுட்டே குழப்பத்தில் உள்ளது. என்ன என்று விசாரித்தால், தற்போதெல்லாம் அவருக்கு அந்த மாதிரி காட்சிகள் பிடிக்க வில்லையாம்.




# சினிமுரசு

### திரை விமர்சனம்

### இயக்குனர் ஹரி இன்

# பூஜை

### விஷால், ஸ்ருதி நடிக்கும்



இயக்குனர் ஹரியின் வழக்கமான பார்முலாதான் இந்த படத்திலும். காதல் ,செண்டிமெண்ட், விறுவிறுப்பான திரைக்கதை இவற்றுடன் விஷாலின் ஆக்ரோஷமான நடிப்பு, ஸ்ருதிஹாசனின் கவர்ச்சி, ராதிகாவின் அழுத்தமான கதாபாத்திரம் ஆகியவை படத்தை நிமிர வைத்துள்ளது.

வழக்கமான தமிழ் சினிமா பார்முலாவின் படி நாயகன் விஷால், நாயகி ஸ்ருதிஹாசன் மோதல், பின்னர் ஸ்ருதியின் தோழி தன்னுடைய காதலனுடன் ஓடிப்போவதை விஷாலின் மூலம் தடுத்து நிறுத்துவதால் பின்னர் ஏற்படும் காதல் என விஷால் ஸ்ருதிஹாசனின் காதல் ஒருபக்கம் ஓடுகிறது. மற்றொரு பக்கத்தில் ராதிகா, ஜெயப்பிரகாஷ், தலைவாசல் விஜய் ஆகியோர்களுக்கு சொந்தமான நிலம் ஒன்றை பொள்ளாச்சியில் அறங்காவலராக இருக்கும் ஒருவர் அபகரிக்க முயற்சி செய்கிறார். இவருடைய திட்டத்தை தெரிந்து கொண்ட ராதிகா, நிலத்தை கோவிலுக்கு எழுதி வைப்பதுடன், அறங்காவலரின் வேலைக்கும் உலை வைத்து, அந்த வேலையை ஜெயப்பிரகாஷுக்கு வாங்கித் தருகிறார். இதனால் ஆத்திரமடைந்த அறங்காவலர் ஜெயப்பிரகாஷை ஊர்மக்கள் முன்னிலையில் அடித்து அவமானப்படுத்துகிறார். ஜெயப்பிரகாஷுக்கு ஏற்பட்ட அவமானத்தால் வெகுண்டு எழுந்த விஷால், தன்னுடைய தாய் ராதிகாவின் ஆணைப்படி அறங்காவலரை பதிலுக்கு பதில் அவமானப்படுத்துகிறார். அவமானம் தாங்காத அறங்காவலர் விஷால் குடும்பத்தை பழிவாங்க எடுக்க முயற்சிகளும், அதை விஷால் சாமர்த்தியமாக தடுப்பதும்தான் மீதிக்கதை.



விஷால் ஆக்ரோஷமான நடிப்பை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளார். ஸ்ருதிஹாசனுக்கு அதிகம் வேலை யில்லை என்றாலும், கவர்ச்சி, பாடல் என வந்து படத்தை குளிர்ச்சியூட்டியுள்ளார்.

படத்தின் விறுவிறுப்புக்கு ஹரியின் திரைக்கதையை போலவே யுவன்ஷங்கர் ராஜாவின் இசை மிகவும் உதவி செய்துள்ளது.

மொத்தத்தில் பூஜை, விஷாலின் மற்றுமொரு வெற்றிப்படம்.

## சினிமா கிசு கிசு



- சினிமா நடிகரை கல்யாணம் பண்ணிக்கொண்ட அந்த பாடகி. இப்போது தன் கணவருக்காக சான்ஸ் வேட்டையாடுகிறாராம். எவரையும் மதிக்காத அந்த பாடகி இப்போது எந்த இயக்குனர், தயாரிப்பாளரைக் கண்டாலும் தன் கணவருக்கு சான்ஸ் கேட்கிறாராம்.
- மாஸ் ஹீரோக்களுடன் காமெடியனாக ரெடி என்று அறிவித்திருக்கிறாராம் புயல்காமெடி. ஆனால் புயலுடன் நடிக்கத்தான் ஹீரோக்களுக்கு விருப்பம் இல்லை.
- மலையாள செம்மீன் பட ஹீரோயின் பெயரைக் கொண்ட இளம் நடிகை தெலுங்குபட அதிபர் ஒருவரை ரகசியமாக திருமணம் செய்து கொண்டு செட்டிலாகிவிட்டதாகவும் தெரியவருகிறது.
- டப்பிங் தியேட்டர் கட்டவும், கேமரா வாங்கவும் கில்லி நடிகர் சமீபத்தில் கால்கோடியை தூக்கி கொடுத்தார். ஆனால் தன்னோட நை.்ப் படத்துக்கு பிரச்சினை வந்தப்போ சங்கம் எதுவுமே செய்யலைங்ற கடுப்புல இருக்காறாம்.
- படத்தின் கதையில் நாடக கலைஞர்கள் தங்கள் நாடகத்தை விளம்பரப்படுத்த நாடகத்தில் போடும் வே'ங்களை கட்டி வாகனத்தில் ஊர் ஊராக செல்வார்கள். அதே பாணியில் பட ரிலீசின் போது சித்தார்த், பிருத்விராஜ், அனைகா, வேதிகா உள்ளிட்ட நடிகர் நடிகைகள் ஊர் ஊராக சென்று
- வன்மம் படத்தில் விஜய் சேதுபதிக்குக்கு ஜோடி இல்லை என்று சொன்னபோதும், சந்தோஷமாக இதில் நடிக்க முடிவு செய்தார். இப்படத்தின் படப்பிடிப்பை முழுக்க முழுக்க குமரி மாவட்டத்திலேயே தொடர்ந்து 60 நாட்களில் நடத்தி முடித்துள்ளனர்.
- லிங்கா ரஜினியின் போஸ்டரைப் பார்த்து அதிக சந்தோசத்தில் இருப்பதாக டுவிட்டரில் செய்தி வெளியிட்டுள்ளார் தனுஷ்.
- ஏற்கனவே இரண்டு திருமணங்கள் செய்து கொண்ட யுவனுக்கு அவ்விரண்டும் நீண்ட நாட்கள் நீடிக்காமையால் திடீர் மதமாற்றத்திற்கு அப்புறம் ஓர் முஸ்லீம் பெண்ணை திருமணம் செய்யவுள்ளார்.
- ஏகப்பட்ட எதிர்ப்புக்களை மீறி வெளியான கத்தி படம் முதல் நாளிலேயே 23.8 கோடியை வசூலித்துள்ளது. இப்படம் இந்தியாவில் மட்டும் 47.7 கோடியையும், வெளிநாடுகளில் 23.35 கோடியையும் வசூலித்துள்ளது. இன்னும் சில நாட்களில் 100 கோடியை இந்த வசூல் எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- பெண்ணிற்கு கொலை மிரட்டல் விடுத்தது மற்றும் பாலியல் தொல்லை கொடுத்தது தொடர்பான புகாரின் பேரில் நடிகை சானா கானும், அவரது காதலர் இஸ்மாயில் கானும் போலீசால் கைது செய்யப்பட்டனர்.
- தனது சொந்தத் தயாரிப்பில் தானே கதாநாயகனாக நடிக்கும் மூன்றாவது படத்தின் வேலைகளை தொடங்கியுள்ளார் சந்தானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Blackberry tablet இம்மாதம் வெளியீடு



உலகின் முதற்தர ஸ்மார்ட் கைப்பேசி உற்பத்தி நிறுவனங்களுள் ஒன்றாக விளங்கும் BlackBerry நிறுவனம் அண்மையில் BlackBerry Passport எனும் புதிய ஸ்மார்ட் கைப்பேசியினை அறிமுகம் செய்திருந்தது. இந்நிலையில் தற்போது புதிய டேப்லட் ஒன்றினை வடிவமைத்துவருவதாக அந்நிறுவனத்தின் தலைமை அதிகாரி John Chen அறிவித்துள்ளார்.

## ஸ்மார்ட் கடிகாரம் – சொனி



Sony நிறுவனம் தனது புத்தம் புதிய ஸ்மார்ட் கடிகாரமான Sony SmartWatch 3 இனை இம்மாதம் 31ம் திகதி வெள்ளிக்கிழமை பிரித்தானியாவில் அறிமுகம் செய்யவுள்ளது. வரிகள் உட்பட 180 பவுண்ட்ஸ் பெறுமதி உடையதாக இருக்கும் இக்கடிகாரம் 1.2GHz வேகத்தில் செயல்படக்கூடிய Quad Core Processor, பிரதான நினைவகமாக 512MB RAM என்பனவற்றுடன் 4GB சேமிப்பு நினைவகத்தினை உடையதாகவும் காணப்படுகின்றது.

## ஆன்ரொயிட் – Office



மைக்ரோசொப்ட் நிறுவனம் அன்ரோயிட் பாவனையாளர்களின் பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் Office அப்பிளிக்கேஷனை அடுத்த மாதம் வெளியிடவுள்ளது. பயனர்களுக்கு மிகவும் நெருக்கமான இடைமுகம் உட்பட தொடுதிரை தொழில்நுட்பத்துடன் கூடியதாக இப்பதிப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இதனை விண்டோஸ் மற்றும் iOS இயங்குதளங்களுக்கு அறிமுகப்படுத்தியது போன்று அல்லாமல் முற்றிலும் இலவசமாக அனைத்து வசதிகளும் உள்ளடங்கலாக பெற்றுக்கொள்ள முடியும்.

# விளையாட்டுப் பையன்

## இமை மூடி திறப்பதற்குள் 10000 திரைப்படங்கள்

டச்சு நாட்டை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் உலகின் மிக வேகமான இண்டர்நெட் இணைப்பை கண்டுபிடித்துள்ளனர். இந்த இண்டர்நெட் மூலம் டேட்டக்களை கண்மூடி திறப்பதற்குள் டிரான்ஸ்பர் செய்துவிடலாம். அதாவது புதியதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த இண்டர்நெட் 255 டெராபைட்ஸ் வேகம் கொண்டது.

இதுவரை நொடிக்கு 100 ஜிபி அளவு வேகமான இண்டர்நெட் தான் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.. ஆனால் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள இண்டர்நெட்டின் வேகம் இதைவிட 2550 மடங்கு அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த புதிய வகை கண்டுபிடிப்பின் மூலம் 1ஜிபி அளவுள்ள ஒரு முழு திரைப்படத்தை 0.03 மில்லி செகண்டில் டவுன்லோடு செய்துவிடலாம்.

## Windows - 10

மைக்ரோசொப்ட் நிறுவனம் அண்மையில் Windows 10 இயங்குதளத்திற்கான Technical Preview பதிப்பினை வெளியிட்டிருந்தது. இதில் Action Cente எனும் டெக்ஸ்டாப்பில் தென்படக்கூடிய Notification பகுதி உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் மின்னஞ்சல்கள், பேஸ்புக் போன்ற அப்பிளிக்கேஷன்களிற்கான Notification களை உடனுக்கு உடன் அறிந்துகொள்ளும் வசதி உருவாக்கப்பட்டுள்ளது. தேவைக்கு ஏற்றால் மூடும் (Close) வசதியைக் கொண்டுள்ளதுடன், டாக்ஸ் பாரிலிருந்து மீண்டும் செயற்படுத்தும் வசதியும் இந்த Notification பகுதியில் காணப்படுகின்றது.

# என் வாழ்க்கைப் புத்தகத்தின் கடைசி நாள்



**"உன்னுடைய கையையும், அப்பாவின் கையையும் நான் முத்தமிடும் வாய்ப்பை ஏன் நீ பயன்படுத்திக் கொள்ளவில்லை?"**

**தன்னை பலாத்காரம் செய்ய வந்த காவல்துறை அதிகாரியை கொலை செய்ததாக இந்த பெண் கூறியிருந்தார். அந்தக் குற்றத்திற்காக அவருக்கு மரண தண்டனை நிறைவேற்ற நீதிமன்றம் முடிவு செய்து, சனிக்கிழமையன்று நிறைவேற்றவும் செய்தது. அதற்கு முன் அவர் தன் அம்மாவிற்கு எழுதிய கடிதத்தின் மொழிபெயர்ப்பு.**

**அன்புள்ள ஷோலே,**

கிசாசை (இரானிய தண்டனைச் சட்டம்) நான் சந்திக்க வேண்டிய நாள் இது தான் என்று இப்போது தான் அறிந்து கொண்டேன். என் வாழ்க்கைப் புத்தகத்தின் கடைசி தாளை நான் அடைந்ததை நீயே என்னிடம் ஏன் சொல்லவில்லை என்று எனக்கு வேதனையாக இருக்கிறது. எனக்கு தெரிய வேண்டும் என்று உனக்கு தோன்றவில்லையா? நீ சோகமாக இருப்பது எனக்கு அவமானமாக இருக்கிறது தெரியுமா? உன்னுடைய கையையும், அப்பாவின் கையையும் நான் முத்தமிடும் வாய்ப்பை ஏன் நீ பயன்படுத்திக் கொள்ளவில்லை?

இந்த உலகம் என்னை 19 வருடம் வாழ அனுமதித் திருக்கிறது. அந்த துர்இரவில் நான் தான் கொல்லப் பட்டிருக்க வேண்டும். என் உடல் இந்த நகரத்தின் ஏதோ ஒரு மூலையில் எறியப்பட்டிருந்திருக்கும். சில நாட்கள் கழித்து என் உடலை அடையாளம் காண உன்னை கரோனரின் அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றிருப் பார்கள். அப்போது தான் நான் பலாத்காரம் செய்யப்பட்ட தையும் நீ அறிந்திருப்பாய். என்னைக் கொன்றவனை என்றைக்குமே கண்டுபிடித்திருக்க முடியாது. அவர்களிடம் உள்ளது போன்ற செல்வமும், அதிகாரமும் நமக்கில்லையே. அதன் பிறகு அவமானத்தோடும். வலியோடும் உன் வாழ்வை நீ தொடர்ந்திருப்பாய். அப்புறம் சில ஆண்டுகளில் இந்த வலியினால் நீ இறந்து போயிருந்திருப்பாய். அத்தோடு எல்லாம் முடிந்திருக்கும்.

ஆயினும், சபிக்கப்பட்ட அந்த தாக்குதலால் கதை மாறிப் போனது. என் உடல் சாலையில் தூக்கியெறியப்படவில்லை மாறாக, எவின் சிறைச்சாலையின் தனிமை அறைகளிலும் இப்போது ஷாஹ்ர்- ஈ- ரேயின் கல்லறை போன்ற சிறைச்சாலைகளிலும் எறியப்பட்டிருக்கிறது. ஆனால் விதிக்கு வழிவிட்டு, புலம்புவதை நிறுத்து. மரணம் வாழ்க்கையின் முடிவல்ல என்பதை நன்கு அறிந்தவள் நீ.

ஒவ்வொருவரும் இந்த உலகத்திற்கு ஒரு அனுபவத்தை சம்பாதிக்கவும், ஒரு பாடத்தை பயிலவும் வருகிறார்கள். ஒவ்வொரு பிறப்பிலும் அவர்களுக்கு ஒரு பொறுப்பு கொடுக்கப்படுகிறது என்று நீ தான் எனக்கு சொல்லிக் கொடுத்திருக்கிறாய். சில நேரங்களில் ஒருவர் போராடவும் வேண்டும் என நான் கற்றுக் கொண்டேன். தள்ளு வண்டி ஓட்டுபவர் தன்னை ஒருவன் அடிப்பதை தடுத்தார் என்றும், ஆனாலும் அடித்தவன் தள்ளு வண்டி ஓட்டுபவரின் முகத்திலும் தலையிலும் தொடர்ந்து அடித்ததால் அவர் இறந்ததையும் கூறினாய். இறந்து போவோமென்றாலும் ஒரு விழுமியத்தை உருவாக்க தொடர்ந்து போராட வேண்டும் என்று நீ சொல்லியிருக்கிறாய்.

பள்ளிக்கு செல்லும் போது ஏதேனும் சண்டைகளோ, புகார்களோ எழுந்தால் அதை கௌரவமாக கையாள வேண்டும் என்று நீ எங்களுக்கு சொல்லிக் கொடுத்திருக்கிறாய். நாங்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதில் நீ எவ்வளவு அழுத்தம் கொடுப்பாய் என நினைவிருக்கிறதா? உன்னுடைய அனுபவம் தவறானது நான் கற்றுக் கொண்டவை எவையும். இந்த நிகழ்வின் போது எனக்கு கை கொடுக்க வில்லை. நீதிமன்றத்தில் ஒரு கருணையற்ற கொலைகாரியாகவும், மனசாட்சியற்ற குற்றவாளியாகவும் தான் நான் தெரிந்தேன். நான் ஒரு சொட்டு கண்ணீர் கூட வடிக்கவில்லை. சட்டத்தை நம்பியதால் நான் அழுது புலம்பவில்லை.

ஆனால், குற்றம் புரிந்தவளானாலும் எதையும் கண்டுகொள்ளாதவள் போல காட்சியளித்ததாக என் மீது குற்றம் சுமத்தப்பட்டது. நான் கொசுவைக் கூட கொன்றது கிடையாது. கரப்பான்பூச்சிகளை அதன் உணர்நீட்சிகளை பிடித்து வெளியில் தூக்கியெறிவேன் என்பது உனக்குத் தெரியும். ஆனால், இப்போது நான் திட்டமிட்டு கொலை புரிந்தவள். நான் மற்ற உயிரினங்களிடம் காட்டிய பரிவு கூட ஒரு பையனைப் போல நான் நடந்து கொண்டதற்கான அடையாளமாக மாறிப்போனது. சம்பவம் நடந்த போது நான் நீளமான விரல் நகங்கள் கொண்டிருந்ததைக் கூட நீதிபதி கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை.

நீதிபதிகளிடமிருந்து நீதி கிடைக்கும் என்று எதிர்பார்த்தவர்களுக்குத் தான் எத்தனை நன்நம்பிக்கை. என்னுடைய கைகள் ஒரு விளையாட்டு வீராங்கனையின் கைகளை போன்றோ, குத்துச் சண்டை வீராங்கனையின் கைகளைப் போன்றோ இறுக்கமாக இல்லை என்பதைப் பற்றி அவர் எந்த கேள்வியும் எழுப்பவில்லை. எந்த நாட்டின் மீதான அன்பை நீ என்னுள் விதைத்தாயோ அந்த நாடு நான் தேவையென்று நினைக்கவில்லை. விசாரிப்பவர்களின் சித்திரவதைக்கு நான் அலறியபோதும், தகாத வார்த்தைகளை நான் செவியுற்ற போதும் யாரும் என்னை ஆதரிக்கவில்லை. என் அழகின் கடைசி கூறையும் நான் உதிர்த்த போது, என் தலைமுடியை மொட்டையடித்த போது, எனக்கு 11 நாட்கள் தனிச்சிறை வாசம் என்ற பரிசு கிடைத்தது.,

அன்புள்ள ஷோலே, இப்போது நீ கேட்பவையை முன்னிட்டு அழாதே. காவல்துறை அலுவலகத்தில் முதல் நாள் விசாரணையின் போது திருமணமாகாத விசாரணை அதிகாரி ஒருவர் கைகளில் நகங்கள் வைத்திருந்ததற்காக என்னை அடித்தார். இந்த காலத்தில் அழகு வரவேற்கப்படுவதில்லை என்பதை நான் புரிந்து கொண்டேன். தோற்றத்தின் அழகு, எண்ணங்களின் அழகு. ஆசைகளின் அழகு. அழகான கையெழுத்து, கண்களின், குறிக்கோளின் அழகு. குரலின் அழகு என எதுவும் இந்த காலத்தில் விரும்பப்படுவதில்லை.

என் அன்பு அம்மாவே, என் கருத்தாக்கம் மாறியிருக்கிறது. அதற்கு நீ பொறுப்பில்லை. என் வார்த்தைகள் முற்றுப்பெறாமல் நீண்டு கொண்டே இருக்கின்றன. அவற்றையெல்லாம் வேறொருவரிடம் கொடுத்துள்ளேன். உனக்குத் தெரியாமல், நீ அருகில் இல்லாமல் நான் கொல்லப்பட்ட பிறகு இவ்வார்த்தைகள் உன்னை வந்து சேரும். என் நினைவாக நிறைய கையெழுத்து பிரதிகளையும் உனக்காக விட்டுச் சென்றுள்ளேன்.

என்றாலும், என் இறப்புக்கு முன்னால் உன்னிடம் இருந்து எனக்கு உதவி தேவைப்படுகிறது. சொல்லப்போனால் உன்னிடமிருந்தும், இந்த நாட்டிடமிருந்தும், இந்த உலகத்திடமிருந்தும் நான் கேட்பது இது மட்டும் தான். இதைச் செய்து முடிக்க உனக்கு நேரம் தேவைப்படும் என்பதை நான் அறிவேன். அதனால் தான் என் உயிலின் ஒரு பாதியை உனக்கு முன்னமே சொல்கிறேன். தயவு செய்து அழாமல் கேள். என் சார்பாக நீதிமன்றத்தில் நீ இதைச் சொல்ல வேண்டும். சிறைச்சாலைக் குள்ளிருந்து இப்படி ஒரு கடிதத்தை எழுதி அதற்கு சம்மதம் பெற முடியாது. தலைமைக் காவல் அதிகாரி இதற்கு ஒப்புதலும் தர மாட்டார். அதனால், என்னை முன்னிட்டு நீ இன்னொரு முறை சிரமப்பட வேண்டும். என்னைத் தூக்கிலிருந்து காப்பாற்ற நீ யாரிடமும் கெஞ்சக் கூடாது [illegible] கேட்கப்போகும் இந்த விஷயத்திற்காக நீ யாரிடம் சென்று கெஞ்சினாலும் நான் எதுவும் சொல்லமாட்டேன்.

இரக்கம் நிறைந்த என் அம்மாவே, அன்பு ஷோலே, என் வாழ்க்கையை நேசிப்பது போல நான் நேசிக்கும் இன்னொரு உயிரே! மண்ணுக்குள் மக்கிப் போக எனக்கு விருப்பமில்லை. என் கண்களும், பிஞ்சு இதயமும் தூசியாகிப் போவதை நான் விரும்பவில்லை. என்னைத் தூக்கிலிட்ட அடுத்த கணமே என் இதயம், சிறுநீரகம், கண், எலும்புகள் என மாற்று அறுவை சிகிச்சைக்கு எதெல்லாம் பயன்படுமோ அவை அனைத்தையும் என் உடலில் இருந்து உடனடியாக எடுத்து தேவைப்படுபவருக்கு பரிசாக தந்து விட வேண்டும் என்று கெஞ்சிக் கேள். என் உடல் உறுப்புகளைப் பெறுபவர்களுக்கு என் பெயர் தெரிய வேண்டாம், எனக்காக அவர்கள் பூங்கொத்து வாங்கி வைக்க வேண்டாம், எனக்காக பிரார்தனை கூட செய்ய வேண்டாம். எனக்காக ஒரு கல்லறை அமைக்கபட்டு அதில் நீ வந்து அழுது புலம்ப வேண்டாம். எனக்காக நீ கருப்பு உடை அணிய வேண்டாம். என்னுடைய சிரமமான நாட்களை மறக்க முயற்சி செய். காற்றிடம் என்னைக் கொடுத்து எடுத்துப் போகச் சொல்.

இந்த உலகம் நம்மை விரும்பவில்லை. என் விதியை அது விரும்பவில்லை. அதற்கு அடிபணிந்து இன்று நான் மரணத்தை தழுவுகிறேன். ஏனென்றால் கடவுளின் முன்னிலையில் நான் இந்த காவல்துறை கண்காளிப்பாளர்களின் மீது, கண்காணிப்பாளர் ஷாம்லூ மீது, நீதிபதியின் மீது, நான் விழித்திருந்த போதே என்னை அடித்துத் துன்புறுத்திய, என் மீது கொடுமைகளை கட்டவிழ்த்த இந்த நாட்டின் உச்சநீதிமன்ற நீதிபதிகள் மீது, நம்மை படைத்தவனின் முன்னிலையில் நான் டாக்டர் ஃபார்வந்தியின் மீது குற்றம் சுமத்துவேன். காசீம் ஷபானி உட்பட, தங்கள் அறியாமையாலும், பொய்களாலும் எனக்கு தவறிழைத்த என் உரிமைகளை நசுக்கிய, உண்மை சில நேரங்களில் மாறுபடும் என்பதை கண்டுகொள்ளாமல் இருந்த அனைவரின் மீதும் குற்றம் சுமத்துவேன்.

மென்மையான இதயத்தைக் கொண்ட அன்பு ஷோலே, அந்த உலகத்தில் நாம் தான் குற்றம் சுமத்துபவர்கள். மற்றவர்கள் குற்றம் சுமத்தப்பட்டவர்கள். கடவுளுடைய சித்தம் என்னவென்று பார்ப்போம். நான் சாகும் நொடி வரை உன்னைக் கட்டிக் கொள்ள வேண்டும் என்று விரும்பினேன். உன்னை அதிகம் விரும்புகிறேன்.

ரேஹானே

**தமிழில் : ஜெனி டொலி**

**நன்றி – குளோபல்தமிழ்நியூஸ்**

(www.globaltamilnews.net)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியல் -25

## விவாகமும் பொறுப்புக்கூறலும்


(வி.என்.சந்திரகாந்தி)

நாம் என்னதான் விவாகம் என்ற சொல்லுக்கு பல வரையறைகளைக் கூறினாலும் எமது தமிழ் பண்பாட்டைப் பொறுத்தவரை விவாகம் என்பது ஒரு பெண்ணுக்கு பொருத்தமான ஆணை தெரிவு செய்து அவள் சார்ந்த நன்மை, தீமைகளை அவனுக்கு பொறுப்புக்கொடுத்து விடல் என்பதே பொருளாகும். அதையே இன்னும் சுருக்கமாக கூறுவதாயின் ஒரு பெண்ணை கரைசேர்ப்பது என்பதாகும்.

வளர்ந்த பெண்களை வீட்டில் வைத்திருக்கும் பெற்றோரின் மன ஆதங்கம் அனைத்துமே தமது பெண் பிள்ளைகளுக்கு நல்ல வரன் கிடைக்கவேண்டும் என்பதே! அவர்களது வாழ்க்கைப்பயணம் அந்த இலட்சியத்தை நோக்கமாக கொண்டதாகவே அமைந்திருக்கும். அதற்காக பெண்களை இயன்றவரை உயர்கல்வி கற்க வைப்பதுடன் உத்தியோக வாய்ப்பொன்றை பெறும் வகையிலும் அவர்களை ஊக்குவிப்பர். தமது சம்பாத்தியத்தை இயன்ற வரையில் சேமித்து அவர்களுக்கு சீதனம் வழங்க ஆயத்தமாவர். அதே சமயம் தமது பெண்களுக்கு நல்ல பழக்கவழக்கங்களையும் பண்பாட்டையும் நடத்தையையும் புகட்டுவர். அவர்களுக்கு நல்ல ஆடைகளையும் அணிகலன்களையும் பெற்று கொடுப்பர். மறுபக்கமாக பெற்றோரின் கட்டுப்பாட்டிலும் வழிகாட்டலிலும் வளரும் பெண்பிள்ளைகளும் தமது எதிர்கால சுபீட்சத்தை மனதில் நிறுத்தி கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பதுடன் தொழில் வாய்ப்பையும் எதிர்பார்த்து குறியாயிருப்பர்.

என்னதான் பெற்றோர் பெண்பிள்ளைகளை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முயற்சிகள் எடுத்தாலும் 'கம்பஸ்' வாழ்க்கை அவர்களுக்கு ஒரு ஆண் துணையை தேடி கொடுத்துவிடுகின்றது. அதே போன்று உத்தியோகம் பார்க்குமிடங்களிலும் பெண்கள் தமக்கான வரனை தேடிக்கொள்கிறார்கள்.

ஆண்பிள்ளைகளை வைத்திருக்கும் பெற்றோர்கள் தமது மகன்மாரின் வேலைபற்றி தம்பட்டமடிப்பதும் கல்யாணதரகர்கள் வாயிலாக மணமகளை தேடுவதும் சீதனம் கேட்பதும் என்று அவர்களது அட்டகாசம் சொல்லிமாளாது!

இனி ஆண்களை எடுத்தால் ஒன்றில் அவர்கள் சுதந்திரமாக காதலித்து தம் துணையை அமைத்துக் கொள்வார்கள். இல்லாவிட்டால் அவர்கள் விவாகம் புரிய முன்வரும் பெண்ணுக்கு இருக்க வேண்டிய அம்சங்கள் என்று இரண்டே இரண்டு விடயங்களில் மிக உறுதியாக இருப்பர். ஒன்று அப்பெண் தேவதை போன்று அழகாக இருத்தல் (நிறம் உள்ளடங்க) மற்றையது அவள் தொழில் புரிபவளாக இருத்தல்.

இன்னாட்களில் மாப்பிள்ளைமார் இரண்டு தரத்தினராக இருக்கின்றார்கள். ஒன்று உள்நாட்டில் தொழில் பார்ப்பவர். அடுத்து வெளிநாட்டில் தொழில் பார்ப்பவர். அதிலும் வெளிநாட்டில் எமது நாட்டு பெற்றோருக்கு பிறந்து அங்கு பிற மொழியில் கல்வி பயின்று நல்ல தொழில்புரியும் ஆணோ பெண்ணோ எமது நாட்டில் உள்ள ஆணையோ பெண்ணையோ கணக்கிலும் எடுக்கமாட்டார். ஆயினும் எமது நாட்டில் பிறந்து, கல்விகற்று அண்மையில் வெளிநாடு சென்ற இளைஞர்கள் தமக்கான துணையை இங்குதான் தேடுகின்றார்கள். மறுபக்கமாக அவர்கள் அந் நாட்டில் பிறந்து கல்விபயின்ற பெண்கள் பற்றி நல்ல அபிப்பிராயம் கொண்டவர்களாகவும் இல்லை!

உண்மையில் வெளிநாட்டில் ஆணோ, பெண்ணோ, பிள்ளைகள் அளவுக்கதிகமான சுதந்திரமும் செல்லமும் கொடுத்து வளர்க்கப்படுகின்றார்கள். பிள்ளைகள் பெற்றோரை பத்தாம் பசலிகள் என்று கருதும் ஒரு பரிதாப நிலை உள்ளது. படிக்கும் காலத்திலேயே எதிர்ப் பாலாருடன் விரும்பியபடி பழகவும், தமக்கு துணையை தெரிவு செய்யவும், அதனை மறுதலிக்கவும் அவர்களுக்கு உரிமையுண்டு. நிச்சயமாக விதி விலக்குகள் இருக்கவும் தான் செய்கின்றன. அங்கு பெற்றோரின் கண்டிப்பு சிறு வயது முதலே தொடர்சியாக மேலோங்கியிருக்கும்! அப்படியான பெற்றோர் தமக்கு தமிழச்சி ஒருத்தியே மருமகளாக வர வேண்டும் என்றும் தம்முடன் அன்பு பாசத்துடன் பழக வேண்டும் என்றும் தாம் கொஞ்சி விளையாடுவதற்கு அவள் பேரக்குழந்தைகளை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றும் விரும்புவர்.

பெற்றோரை புறக்கணித்துவிட்ட பிரஞ்சுப் பெண்ணையோ இத்தாலியப் பெண்ணையோ விவாகம் செய்யலாம். ஆனால் அவள் தனக்கு கணவனாக வந்தவனை தவிர அவனது தாய் தந்தையரையும் மற்றும் உறவினர்களையும் கறுப்பர்கள் என்று கருதி ஒரு மட்டத்துக்கு மேல் புறக்கணிக்கவே செய்வாள். தனது கணவன் வாயிலாக தனக்கு கறுப்பு இன குழந்தை பிறந்துவிடும் என்ற பயத்தில் தான் கருத்தரிப் பதிலிருந்து விலகி நடக்கவும் அவள் தயங்கமாட்டாள். தமது பெண் கறுப்பு இனத்தவன் ஒருவனை மணப்பதை எந்த வெள்ளை இன பெற்றோரும் விரும்ப மாட்டார். அப்படி ஒருவேளை நடந்துவிட்டால் கூட அவர்கள் தமது சமூகத்தில் அவனை ஏற்கமாட்டார். எமது நாட்டிலேயே பிறந்து பெற்றோரின் கட்டுப்பாட்டில் கற்பு நெறி பிறழாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் 'தேவதைகளை' விடுத்து யாரோ ஒரு அந்நிய சமூகத்து பெண்ணுக்கு வாழ்வு கொடுக்கும் எமது இளைஞர்களை எண்ணுகையில் கவலை பொறுக்கவில்லை!

இதைவிட வெளிநாட்டு மாப்பிள்ளை என்ற மோகத்தில் இருக்கும் பெற்றோரை வஞ்சித்து அவர்களது பெண்ணை மணப்பதாக கூறி, கோயில் முதல் ஹோட்டல் வரை கூட்டிச்சென்று இன்பம் அனுபவித்து விட்டு விலாசமோ தொ.இலக்கமோ கொடுக்காமல் மறைந்து விடுபவர்கள் பற்றி எண்ணுகையில் நெஞ்சமே பதறுகிறது.

எனது நண்பன் ஒருவனின் உடன் பிறந்த சகோதரனுக்கு அழகும் நிறமும் குணமும் உடைய மகள் ஒருத்தி கல்வி பயின்று கொண்டிருந்தாள். வீட்டில் நிதிக்கஷ்டம். வெளிநாட்டில் சகோதரர்கள் இருந்தும் எவரது உதவியும் கிட்டாத நிலையில் வெளி நாட்டில் இறுதி ஆண்டு பொறியியல் துறையில் கல்வி பயிலும் மகனுக்கு பெற்றோர் பெண் கேட்டு வந்தார்கள். அந்த வகையில் என்றாலும் வெளிநாட்டு தொடர்பு கிட்டட்டுமே என்ற அங்கலாய்ப்பில் எதையும் ஆராயாமல் விவாகத்துக்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டது. மகன் இன்னமும் 'ஸ்டுடன்ற்' விசாவில் இருப்பதாகவும் மூன்று மாதத்தில் இறுதி பரீட்சை நடக்க இருப்பதாகவும் இப்போ விடுமுறைக்கு அவரை வரவழைத்தால் விவாக பதிவை செய்து விடலாம் எனவும் சீதனம் எதுவும் தேவையில்லை ஆனால் அவரது பயணச் செலவுக்கு இரண்டு இலட்சம் அனுப்பினால் போதுமானது என்று ஆசைகாட்டப்பட்டது. அப்படியே நடந்தது. மாப்பிள்ளை இரண்டு மாதம் தங்கி பெண்ணில் உரிமைகொண்டாடியது மட்டுமல்லாமல் அவர் சென்று விட்ட பின் பெற்றோர் வீட்டை விற்று தரும்படி தொந்தரவு கொடுக்க தொடங்கினார்கள். ஏழைப்பெற்றோருக்கோ வீட்டை விற்றால் வேறு வக்கு இல்லை. இதனால் முறிவு ஏற்பட்டது. மாப்பிள்ளை பெற்றோர் பக்கம் நின்றதுடன் 'ஸ்கைப்' தொடர்பு உட்பட பெண்ணுடனான அனைத்து தொடர்புகளையும் துண்டித்துவிட்டார்.

விவாகம் என்பது பொறுப்புக்கூறலுடன் இணைந்திருக்காவிட்டால் எல்லாமே அப்படித்தான்!

# தேசிய SMS செய்திகள்

- **மண்சரிவு எச்சரிக்கை**

  பதுளை, நுவரெலியா, இரத்தினப்புரி, கண்டி, மாத்தளை மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களிலேயே மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

- **மரணதண்டனை விதிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் அப்பாவிகள்**

  மீனவர்கள் என்ற போர்வையில் இலங்கை - இந்தியாவிற்கு இடையில் போதைப் பொருள் கடத்தல் வர்த்தகத்தில் ஈடுபட்ட சம்பவத்தில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்ட 8 பேருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களின் உயிர்களை காக்க இந்திய பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் கோரிக்கை விடுத்துள்ளார்.

- **தங்கம் கடத்த முற்பட்டோர் கைது**

  இலங்கையிலிருந்து பெங்களூரிற்கு தங்கம் கடத்த முயற்சித்த இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

- **பாப்பரசரின் இலங்கை விஜயம் உறுதி**

  பாப்பரசர் பிரான்சிஸ் ஜனவரி 13 ஆம் திகதி இலங்கைக்கு வருகைதரவுள்ளார். அதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என பாப்பரசரின் இலங்கை விஜயம் தொடர்பான ஏற்பாட்டாளர் வணக்கத்துக்குரிய சிறில் காமினி தகவல் வெளியிட்டுள்ளார்.

- **இராணுவம் குறைக்கப்பட்டதா?**

  ஜப்பான் தூதுவர் நொபுகிடோ கோபு வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரனை அவரது வாசஸ்தலத்தில் சந்தித்துக் கலந்துரையாடிய போது, அரசாங்கம் இராணுவத்தினை குறைத்துள்ளதாக கூறுகின்றார்கள் குறைக்கப்பட்டுள்ளதா என கேள்வி எழுப்பியுள்ளார்.

  அதற்கு வடமாகாண முதலமைச்சர் பதிலளிக்கையில், அவ்வாறு பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன. இராணுவத்தினைக் குறைப்பது உண்மையாக இருந்தால், எதற்காக மேலும் மேலும் காணிகளை இராணுவ முகாம்களை அமைப்பதற்கு கேட்கின்றார்கள்.

- **மஹிந்த ராஜபக்ஷவுக்கே அனைவரும் வாக்களிக்க வேண்டும்**

  இலங்கையில் தமிழரோ முஸ்லிமோ ஜனாதிபதியாக வரமுயாது. ஜனாதிபதி தேர்தலில் வெற்றியடையப் போகும் ஜனாதிபதி மஹிந்தராஜபக்சவுக்கே சிறுபான்மை மக்கள் ஆதரவளிக்க வேண்டுமென மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

- **புலிகள் தலைதூக்க இனி இடமில்லை**

  ஐரோப்பிய யூனியன் எத்தகைய தீர்மானங்களை எடுத்தாலும் அரசாங்கமும் படையினரும் புலிகள் மீள தலைதூக்க இடமளிக்கப்போவதில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்' அவர்கள் தெரிவித்தார்.

- **பாரிய கற்பாறையொன்று சரிந்து விழும் அபாயம்**

  தலவாக்கலை - லிந்துலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஊவாக்கலை தோட்டப் பகுதியில் கற்பாறையொன்று சரிந்து விழும் அபாயம் காரணமாக அப் பகுதியிலிருந்து 80 குடும்பங்கள் அகற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

- **தனியார் பஸ் ஊழியர்கள் பணி பகிஷ்கரிப்பு**

  புத்தளம், குருநாகல் வீதியில் சேவையிலுள்ள தனியார் பஸ் ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

- **வரவின்மையால் புதிய தீர்மானம்**

  பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்கள் வருவதற்கு அக்கறையற்றிருந்தால் சபை அமர்வுகளை மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை நடத்தினால் போதுமென பிரதமர் டி.எம்.ஜயரட்ண தெரிவித்தார்.

- **2லட்சம் பெறுமதியான பூங்கன்றுகள் பறிமுதல்**

  தாய்லாந்திலிருந்து இலங்கைக்கு சட்டவிரோதமான முறையில் பூங்கன்றுகளை கொண்டு வந்த நபரை கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

# நிகழ்வுகள்

## வாழ்வின் எழுச்சி - மூதூர் நிருபர்

வாழ்வின் எழுச்சி தேசிய நிகழ்ச்சி திட்டத்தின்கீழ் கடந்த திங்கட்கிழமை திருகோணமலை சாம்பல்தீவு கமநல சேவை நிலையத்தின் விவசாய போதனாசிரியர் ஜனாப். M.S.றிபாஸ் அவர்களின் தலைமையில் தென்னங்கன்று நடும் நிகழ்வு சாம்பல்தீவு கமநல சேவை நிலையத்தில் இடம்பெற்றது.






## கருத்தரங்கு - க.பொ.த சா/த

க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் நலன் கருதி திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட துரித மீட்டல் முன்னோடிக் கருத்தரங்கானது பிரதான பாடங்களை உள்ளடக்கியதாக நடாத்தப்பட்டது. கருத்தரங்கு சாம்பல்த்தீவு தமிழ் மகா வித்தியாலயம், சல்லி அம்பாள் மகா வித்தியாலயம், ஆத்திமோட்டை வித்தியாலயம், பாரதி வித்தியாலயம், மாதுமை அம்பாள் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு சாம்பல்தீவு தமிழ் மகாவித்தியாலயத்திலும், செல்வநாயகபுரம் இந்து மகாவித்தியாலயம், கலைமகள் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயத்திலும் இம்மாதம் 25,26,27 ஆகிய தினங்களில் நடைபெற்றது. இதன் ஆரம்பவைபவம் 25.10.2014 அன்று காலை 8.30 மணிக்கு சாம்பல்த்தீவு தமிழ் மகாவித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதேச செயலாளர் திருமதி.சசிதேவி ஜலதீபன் அவர்கள் தலைமை தாங்கியதுடன் பிரதம விருந்தினராக திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.இ.விஜேந்திரன் அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தார். அத்துடன் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், மாதர் கிராம அபிவி ருத்திச் சங்கத் தினர் ஆகியோ ரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 04

01. கலகல, கமகம, சலசல
   1. இணைமொழி 2. அடுக்கு மொழி 3. இரட்டைக் கிளவி

02. வருவான், கடித்தது, விளையாடினார்கள்
   1. பெயர்ச்சொல் 2. வினைச்சொல் 3. அடைமொழி

03. இலங்கையில் அதிகளவு ஆதிவாசிகள் வாழ்ந்தமையால் அப்பிரதேசத்திற்கு வழங்கப்பட்ட பெயர் யாது?
   1. முலிந்த 2. ஊவா 3. சபர 4. சப்பிரகமுவா

04. கையில் ஒட்டியுள்ள பலாக்காய்ப்பாலை எளிதாக அகற்ற பயன்படுத்தத்தக்கது எது?
   1. சவர்க்காரம் 2. குளிர்நீர் 3. வெந்நீர் 4. மண்ணெய்

05. கீழ்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் ஒரு நிகழ்ச்சியைக் குறிக்கும் எழுத்துக்கூட்டத்தை தெரிவு செய்க.
   அ. பாடசாலை கொடி உயர்த்தப்பட்டு பாடசாலைக் கீதம் இசைத்தல்..
   ஆ. வரவேற்புரை நிகழ்த்துதல்.
   இ. முடிவுரை நிகழ்த்துதல்.
   ஈ. குத்துவிளக்கு ஏற்றுதல்.
   உ. நிகழ்ச்சிகள் இடம்பெறுதல்.
   1. அஆஇஈஉ 2. அஈஆஉஇ 3. ஈஅஆஉஇ

06. ராமன் தன் வயலில் அல்லும் பகலும் இடையறாது வேலை செய்ததனால் அதிக விளைச்சலை பெற்றான். இதனை சரியாக குறிப்பிடாதது?
   1. ஊக்கம் உயர்வைத் தரும்.
   2. முயற்சி திருவினையாக்கும்
   3. தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை

07. மங்காத சுக வாழ்வின் ஆதாரமாக அமைவது எது?
   1. சிறுவர்கள் 2. கற்றல் 3. ஞானமும் பண்பும்

08. களைப்படைந்த வேலையாட்கள் மர நிழலில் ஓய்வாக இருந்தனர்.
   1.சுறுசுறுப்பாக 2. அமைதியாக 3. இளைப்பாறுதல்

09. உலகத்திற்கு சூரியன் ஒளி கொடுக்கின்றான்
   1. அருள் 2. வெளிச்சம் 3. இருள்

10. வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
   பாட்டி கடைக்குச் சென்றார். மகன் அலுவலகத்துக்குச் சென்றார்.
   பாட்டி : மகன் எனின், கடைக்கு : ................................
   1. அலுவலகம் 2. அலுவலகத்துக்கு 3. கடைக்கு

11. பிராணிகளின் உடலில் ஒட்டி வாழும் பிராணி எது?
   1. ஈக்கள் 2. நுளம்பு 3. அட்டை 4. தெள்ளு

12. நிலத்துக்கு கீழேயுள்ள தண்டைக் கொண்ட தாவரம்?
   1. இஞ்சி 2. மரவள்ளி 3. பலா 4. தீக்குறிஞ்சா

13. மீனவர் சிறு மீன்களைப் பிடிப்பதற்கு பயன்படுத்தும் கூடை வடிவில் அமைந்த உபகரணத்திற்கு வழங்கப்படும் பெயர் எது?
   1. நாம்புவ 2. கரைவலை 3. மடி 4. அத்தாங்கு

14. பின்வருவனவற்றுள் மிக எளிதாக ஆவியாகக் கூடிய திரவம் எது?
   1. டீசல் 2. ஓடிக்கொலோன் 3. நீர்
   4. தேங்காயெண்ணெய்

15. 8கி.மீ நீளமான பாதையொன்றில் 250மீ இடைவெளிவிட்டு மின்கம்பங்கள் நடப்பட்டன. நடப்பட்ட மின் கம்பங்கள் எத்தனை?
   1. 33 2. 34 3. 32 4. 35

16. 5மீ 40செ.மீ நீளமான ஒரு நாடாவில் இருந்து 260செ.மீ துண்டு வெட்டி எடுக்கப்பட்ட பின் எஞ்சியுள்ள நீளம்?
   1. 280மீ 2. 2மீ 08செ.மீ 3. 2மீ 80 செ.மீ

17. உடையில் தீப்பிடித்தால் உடனடியாக செய்யக்கூடாதது?
   1. நிலத்தில் விழுந்து புரளுதல்
   2. நனைந்த சாக்கிகை வைத்தல்
   3. ஓடிச்செல்லுதல்

18. குன்றும் குழியும் என்பதை விளக்கும் இன்னுமொரு இணைமொழி எது?
   1. நிழலும் உண்மையும்
   2. முன்னேற்றமும் இறக்கமும்
   3. மேடு பள்ளம்

# சிறுவர் முரசு



## சிந்திக்க .. ..

ஒரு முறை வந்தால் அது கனவு:
இரு முறை வந்தால் அது ஆசை:
பல முறை வந்தால்
அது இலட்சியம் ஆகும்.

## சிறப்பெய்த கல்வி அவசியம் குட்டிக்கதை



அது ஒரு அழகிய கிராமம் அந்தக்கிராமத்தில் டிது எனும் சிறுவன் ஒருவன் வாழ்ந்து வந்தான் அவன் சற்று ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்தவன், ஆனால் பாடசாலையில் கல்வியில் சிறந்த கெட்டிக்காரன், சகல விளையாட்டுக்களிலும் தவறாது பங்குபற்றுவான், சகல ஆசிரியர்களும் அவன் மேல் நன்மதிப்பு வைத்திருந்தனர், நாளடைவில் அவனது மூத்த சகோதர, சகோதரிகளின் வகுப்புகள் உயர உயர வீட்டில் படிப்படியாக வறுமை நிலை அதிகரிக்கத் தொடங்கியது. திடீர் என ஒருநாள் அவனது தாயாருக்கு வருத்தம் ஏற்பட்டுவிட்டது, வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்குகூட பணம் இல்லை எனவே வீட்டில் வைத்து கைவைத்தியம் செய்தான், இவ்வாறு ஆண்டுகள் பல கடந்தன.


டிது தரம் 11ல் கல்வி கற்கின்ற வேளையில் அவனது அண்ணா, அக்கா இருவருக்கும் ஆசிரியர் பணி கிடைத்தது. இவர்களுடைய வருமானத்தில் குடும்ப வாழ்கையை கொண்டு செல்லக்கூடியதாக இருந்தது. இந்த காலப்பகுதியில் டிது தனது கவனம் முழுவதையும் கல்வியில் இருத்தி க.பொ.த(சா/த) பரீட்சைக்காக அல்லும் பகலும் அயராது ஆர்வத்தோடு படித்து பரீட்சை எழுதினான்.

அந்த ஒருநாள் வந்தது டிதுவிற்கு இன்ப அதிர்ச்சி தரும் நிகழ்வு நடந்தது. ஆம் டிது பரீட்சையில் தேசிய மட்டத்தில் முதலாவது இடம் பிடித்தான் டிதுவிற்கு மட்டற்ற மகிழ்ச்சி தனது தாயிடம் விரைந்து சென்று தனது எதிர்காலக் கனவினை கூறினான் 'அம்மா நான் மேற்படிப்பு படித்து நல்லதொரு உத்தியோகத்தில் இருந்து எமக்கென்று ஓர் காணி வாங்கி வீடு கட்டி, கார் வாங்கி அதில் இருந்து புகைப்படம் எடுப்பேன்'. உடனே அவனது தாயின் கண்ணில் இருந்து ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

நாளடைவில் டிது ஓர் இலட்சியத்துடன் படித்து பல தங்கப் பதக்கங்களைப் பெற்றான், பல்கலைக் கழகம் சென்று வைத்தியராவதற்காகப் படித்தான் அவனது மதிநுட்பமான அறிவைக் கொண்டு பல பரீட்சைகளை எழுதினான். இதனால் வெளிநாடு சென்று மருத்துவக்கல்வியைத் தொடர்வதற்கு புலமைப்பரிசில் கிடைத்தது. லண்டன் சென்று உயர்கல்வி கற்று பிரபல வைத்தியரானான். தன்னுடைய தாயிடம் கூறியது போல பெரியவீடு கட்டி காரும் வாங்கினான். பின்னர் அவனது தாயின் பெயரில் ஒரு வைத்தியசாலை கட்டி ஏழை மக்களுக்காக இலவசமாக வைத்தியம் செய்தான் இதன்மூலம் பல மக்களின் உயிரை காப்பாற்றி உத்தமனாய் வழ்ந்தான்

அற்புதராஜன் டனுர்ஷன்
தரம் - 07பீ, நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி

**- மாணவர்கள் வறுமையிலும் கல்வி பயில வேண்டும் -**



செல்வன்.சாருகேஷ்,
திருகோணமலை

## சேர்ந்திருக்குமோ?

வாழைக்குட்டியே - நீ
வளர வேண்டுமே!
நாளை எண்ணியே - நீர்
நன்றாய் ஊற்றுவேன்!

குமரி ஆகவாய் - பெரிய
குலையை ஈனுவாய்!
சுமக்கும் பொத்தியாம் - பூவைச்
சுண்டித்தின்னுவோம்!

சீப்புக் காட்டுவாய் - தலை
சீவத் தருவாயா?
சாப்பிடுங்காலம் - மஞ்சள்
பூசித் தருவையோ?

ஒன்றுடன் செல்வாய் - நாமும்
உன்னைப் பார்த்துமே,
சென்றிருப்பமேல் - கோடி
சேர்ந்திருக்குமோ?

[illegible]
([illegible])

# குறுக்கெழுத்து புதிர் 033

முடிவுத் திகதி : 06.11.2014

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 23 | | 4 | 24 | ம் |
| 5 | | | | ம் | ■ | 6 | | 25 |
| | 7 | ம் | | ■ | ■ | | | |
| 8 ட | | | | 26 பா | | 27 | 9 | |
| 10 | | 28 | 11 | | 12 | | | |
| ■ | ■ | | ■ | ■ | | 13 | | ■ |
| 14 | | | 15 | | 16 | | | 29 ம் |
| 17 | ம் | | | | 18 | | 30 | |
| 19 | | | | 20 | | 21 | 22 ர் | |

## இடமிருந்து வலமாக

1. இயற்கை அனர்த்தங்களில் இதுவம் ஒன்று.
2. இதை தென்றல், காற்று என பலவாறு அழைக்கலாம்.
3. குளிர்காலத்தில் இது தேவைப்படும். - குழம்பியுள்ளது
4. கத்தி இது சார்ந்த படமாகும்.
5. சிவனின் ஆக்ரோச நடனத்தை இப்படி அழைப்பர்.
6. இலங்கையிலுள்ள ஓர் குளிர் மாவட்டம் - குழம்பியுள்ளது.
7. வில்லிலிருந்து புறப்படுவது
8. தேவையை பூர்த்தி செய்ய இது நடாத்தப்படும். - ஓரெழுத்து குழம்பியுள்ளது
9. கிராமப் புறத்தை இவ்வாறும் அழைக்கலாம் - திரும்பியுள்ளது.
10. புவியி ஒத்த கருத்து - திரும்பியுள்ளது.
11. நிறைய இருத்தலை குறிக்கலாம்.
12. சீதாபிராட்டி இது தரித்தே கானகம் சென்றார்.
13. இந்தியாவில் இவரை மாமா என்றழைப்பர்.
14. நறுமணம் வீசும் மலர்
15. செய்தி அல்லது படங்களில் பப்ளிசிட்டி செய்ய முடியாததை இது செய்வர் - திரும்பியுள்ளது.
16. மாணவர்கள் சிரமப்படும் ஓர் பாடம்.
17. அமராபதியை காதலித்தவர்
18. மாப்பிள்ளை தோழனுக்கு அணிவிக்கப்படுவது - குழம்பியுள்ளது.
19. புது தொழிநுட்பத்தில் முதன்முறையாக அண்மையில் உருவான படம்
20. பிரபல இயக்குனரின் மகன் நடித்து தோற்றுப்போன அண்மையில் வெளியான படம்
21. கரு முகிலை இவ்வாறு கூறுவர்.
22. வீதிகளில் காணப்படுவது - திரும்பியுள்ளது.

## மேலிருந்து கீழாக

1. மகாபாரதம் உருவாக காரணமாயிருந்தது
2. கோவில் தேர் இதனால் இழுக்கப்படும்.
4. வீட்டிற்கே கொண்டு வந்து சேர்க்கப்படும் ஓர் சேவையூடாக இது சேர்ப்பிக்கப்படும்.
12. இலங்கையிள்ள மாதா ஆலயங்களில் பிரசித்தி பெற்றது எங்குள்ளது.
23. இதுவம் காற்றைத் தரும்
24. 29.10 அன்று நிகழ்ந்த கோர சம்பவம்
25. அரச அலுவலகம் ஒன்று
26. பெண்ணை இப்படி அழைக்கலாம்.
27. இது மாத்திரம் எமக்காய் ஒரு போதும் நிற்காது.
28. இந்திய கிராமிய விளையாட்டுக்களில் ஒன்று
29. தாய்க்குப்பின் இவளே ஓர் ஆணுக்குத் துணை - திரும்பியுள்ளது.
30. வெயில் நேரங்களில் பெரும்பாலும் இது பருகப்படும்.

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

*விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :*
*மலைமுரசு. இல - 159ஏ,*
*கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

## புதிர் 032 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | ந் | 23 த | ப் | 22 பு | 13 ர | ம் | ■ | 14 ஆ |
| ரி | 15 ர | வ | ■ | த் | வை | ■ | ■ | ட |
| 2 சி | ம | ம் | ம் | த | ■ | 16 ஆ | தா | ம் |
| ல | 3 பூ | சா | 17 ரி | க | 4 து | ந் | ரு | ப |
| ம் | ங் | ■ | ந | ங் | டு | 5 தை | 18 உ | ர |
| பு | 6 கா | 19 டு | ■ | 7 க | ட் | டு | ரை | ம் |
| ■ | ன | ட் | 8 க | ள் | வ | ன் | ■ | ■ |
| 9 தா | ம் | 20 பூ | ல | ம் | 10 செ | வ் | 21 வே | ல் |
| மு | 11 க | னை | க் | கு | ம் | 12 போ | ர் | ■ |

### பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:

*திருமதி. செல்வி சந்திரகாந்தி*
*572ஏ, ஏகாம்பரம் வீதி, திருகோணமலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

1. தீர்க்க $X^2 - X - 72 = 0$


2. $\log_3 18 + 3\log_3 X - \log_3 6 = 4$ சமன்பாட்டில் X ஐ காண்க.

3. சுருக்குக. $\frac{a^{-5} \times b^{-3} \times a^{3}}{b^{5} \times a^{-1} \times b^{0}}$

4. ஒரு குறித்த முதலின் 10வீத கூட்டுவட்டிக்கும், 10வீத எளிய வட்டிக்கும் 3 வருடங்களுக்கு கொடுக்கப்படுகின்றது. இரு வட்டிக்கும் இடையிலான வித்தியாசம் 620 ரூபா எனில் முதலைக் காண்க.

5. சதுரமுகி தாயக்கட்டை ஒன்றில் 1, 2, 2, 2, 3, 4 என இலக்கம் இடப்பட்டதும், சாதாரண நான்முகி தாயக்கட்டை ஒன்றும் ஒருமித்து உருட்டப்பட்டது. இதற்கான புள்ளி வரைபை வரைக.
   1. இரு தாயக்கட்டையிலும் ஒரே எண் தோன்றுவதற்கான நிகழ்தகவு
   2. இரு எண்களின் கூட்டுத்தொகை இரட்டை எண்ணாக இருப்பதற்கான நிகழ்தகவு
   3. இரு எண்களின் கூட்டுத்தொகை 4 ஆக இருப்பதற்கான நிகழ்தகவு

6. பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 100 பேர் ஆகும். சித்தியடைந்தவர் விபரம் பின்வருமாறு




T- தமிழ் M- கணிதம்
S-விஞ்ஞானம்

அ) வென்வரிப்படத்தைப் பிரதி செய்து பின்வருவனவற்றைக் காண்க.
   1. கணிதம், விஞ்ஞானம் மட்டும் சித்தியடைந்தவர்கள் 12 பேர்
   2. தமிழ் மட்டும் சித்தியடைந்தவர், கணிதம் மட்டும் சித்தியடைந்தவர்களின் மூன்று மடங்கு
   3. ஏதாவது இரு பாடங்களில் மட்டும் சித்தியடைந்தவர்கள் 34 பேர்.

ஆ) n[MuSuT]=90 ஆயின், x இன் பெறுமானம் யாது?

இ) n[M'n(SnT)] இன் பெறுமானம் யாது?

ஈ) இம் மூன்று பாடங்களும் சித்தியடைந்தவர்கள் எத்தனை பேர்?

7. கூட்டல் விருத்தி ஒன்றின் 5ம் உறுப்பு 25 ஆகம். மூன்றாம் உறுப்பினதும் எட்டாம் உறுப்பினதும் கூட்டுத்தொகை 55 ஆகம்.
   1. முதலாம் உறுப்பு, பொது வித்தியாசத்தைக் காண்க.
   2. 12ம் உறுப்பு யாது?
   3. 50 எத்தனையாம் உறுப்பு?
   4. 12 உறுப்புக்களின் கூட்டுத்தொகை யாது?
   5. எத்தனை உறுப்புக்களின் கூட்டுத்தொகை 390 ஆகம்.

8. ஒழுங்கான குவிவுப் பல்கோணி ஒன்றின் அகக்கோணம் ஒன்றின் பெறுமானம் ஆகம்.
   1. பக்கங்கள் ஒரே பக்கத்திற்கு நீட்டுவதன் உண்டாகும் புறக்கோணம் ஒன்றின் பெறுமானம் யாது?
   2. இப் பல்கோணியின் பக்கங்களின் எண்ணிக்கை யாது?

**திருமலையின் பிரபல ஆசிரியர் T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**

## பாடம் : விஞ்ஞானம்

01. ஒளித்தொகுப்புடன் தொடர்புபட்ட பின்வரும் கூற்றுக்களில் பிழையானது எது?
   1. நீர் ஒளித்தொகுப்புக்கு தேவையான ஒரு மூலப்பொருளாகும்.
   2. ஒளி இருக்கும் போது மாத்திரம் ஒளித்தொகுப்பு நடைபெறுகின்றது.
   3. ஒளித்தொகுப்புக்கு பச்சையம் அத்தியவசியமாகும்.
   4. ஒளித்தொகுப்பின் விளைபொருளாக காபனீரொட்சைட்டும் குளுக்கோசும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

02. மனித குரதிச் சுற்றோட்டத்திற்குரிய நாடிகளும், நாளங்களும் பற்றிய சரியான கூற்று யாது?
   1. நாடிகளின் சுவர்கள் தடிப்புக் கூடியனவாக இருக்கும் அதேவேளை நாளங்களின் சுவர்கள் தடிப்புக் குறைந்தனவாக இருக்கும்.
   2. இதயத்திலிருந்து வெளியே நாளங்களின் மூலம் குரதி கொண்டு செல்லப்படுகின்றன.
   3. எப்போதும் நாடிக்குள்ளே ஒட்சிசன் ஏற்றிய குரதி இருக்கும். அதேவேளை நாளங்களின் ஒட்சிசனகற்றிய குரதி இருக்கும்.
   4. நாடிக்குள்ளே வாழ்வுகள் இருக்கும் அதேவேளை நாளத்துக்குள்ளே வாழ்வுகள் இருப்பதில்லை.

03. வயலினிலிருந்து உண்டாகும் ஒலி பற்றிய பின்வரும் கூற்றுக்களை கருதுக.

அ. தந்தியின் இழுவை அதிகரிக்கும் போது ஒலியின் சுரதி அதிகரிக்கின்றது.
ஆ. வில்லினால் தந்திகளை தேய்க்கும் போது அத்தந்திகள் வழியே ஒலியலைகள் செல்லுகின்றன.
இ. ஒலியை கூடுதலான வளி மேற்பரப்புக்கு ஊடுகடத்தச் செய்தல் பெட்டியில் நடைபெறுகின்றன.

மேற்குறித்த கூற்றுக்களில் உண்மையானது உண்மையானவை.

1. அ மாத்திரம் 2. அ, ஆ மாத்திரம்
3. அ, இ மாத்திரம் 4. அ, ஆ, இ எல்லாம்.

04. மின்னோட்டம் பாயும் கடத்தி மீது காந்தப் புலத்தின் மூலம் உண்டாக்கப்படும் இசை பற்றிய பின்வரும் எக்கூற்று உண்மையானது?
   1. காந்தப்புலத்தின் திசையில் கடத்திய மின்னோட்டம் பாயும் போது கடத்திக்குச் செங்குத்தாக விசை தாக்குகின்றது.
   2. காந்தப்புலத்தின் திசைக்கு எதிராக கடத்தியில் மின்னோட்டம் பாயும் போது கடத்திக்குச் செங்குத்தாக விசை தாக்குகிறது.
   3. காந்தப் புலத்திற்கு செங்குத்தாக கடத்தியில் மின்னோட்டம் பாயும் போது கடத்திக்கு செங்குத்தாக விசை தாக்குகிறது.
   4. காந்தப்புலத்திற்கு செங்குத்தாக மின்னோட்டம் பாயும் போது காந்தப்புலம் கடத்தி ஆகிய இரண்டுக்கும் செங்குத்தாக விசை தாக்குகிறது.

05. ஒரு சோடியம் குளோரைட்டு கரைசலின் அமைப்பு $58.5gdm^{-3}$ ஆகம். அக்கரைசலின் அமைப்பை வேறு விதத்தில் சரியாக எடுத்துரைக்கும் விடை யாது?

1. $58.5moldm^{-3}$ 2. $5.85moldm^{-3}$ 3. $1moldm^{-3}$ 4. $0.1moldm^{-3}$

06. அண்மைக்காலத்தில் தலைநகரத்தை அண்டியுள்ள சில பிரதேசங்களை பல தடவை சடுதியாக வெள்ளம் ஏற்பட்டமைக்கு முக்கிய காரணமாகிய மனிதச் செயற்பாடு யாது?
   1. பொலித்தீனை பயன்படுத்தல்
   2. காடுகளை அழித்தல்
   3. ஒழுக்கற்ற நிர்மாணிப்புக்கள்
   4. ஒழுக்கற்றவாறு குப்பைகூலங்களை அகற்றுதவல்

## பாடம் : வரலாறு

1. நிகழ்காலத்தை விளங்கிக் கொள்வதற்கான திறவுகோலாக இறந்த காலத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் எனக் கூறியவர்?

1. E.H.கார் 2. ஜவகர்லால்நேரு
3. G.M.திரிவிலியஸ் 4. வின்சன்ட் சேர்ச்சில்

2. பின்வருவனவற்றுள் குகைக்கல்வெட்டு அல்லாதது

1. மிகிந்தலை 2. சிதுல்பவ்வ
3. வெஸ்ஸகிரிய 4. கல்பொத்த

3. ஐந்து அமைச்சுப் பரம்பரை பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு

1. பம்பரகல 2. குசேலன்கந்த
3. யடஹலென 4. கந்துறுவெவ

4. ஆரியரின் வருகை பற்றி அறிய உதவும் முதல் வேத நூல்

1. இருக்கு 2. யசூர்
3. சாமம் 4. அதர்வம்

5. ஆரியர் இந்தியாவுக்குள் வருகை தர பயன்படுத்திய கணவாய்

1. போலன் 2. கைபர்
3. ஸ்டெப்பீஸ் 4. மக்ரான்

6. கீழ்குறிப்பிடும் விடயங்களுடன் தொடர்புடைய சாதியினர்

- கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபடல்
- அரச குடும்பத்தின் கனவுகளுக்கு பலன் சொல்லல்
- அரச குடும்பத்துக்கு தேவையான சமையல் காரியங்களை முன்னெடுத்தல்

1. பிராமணர் 2. சத்திரியர்
3. வைஷிகர் 4. சூத்திரர்

7. கீழ் காணப்படும் விடயத்துடன் தொடர்புடைய அநுராதபுர ஆட்சியாளன்

- இலம்பகர்ண வம்சத்தை தோற்றுவித்தல்
- வல்லிபுர சாசனத்தை பொறித்தல்

1. தாதுசேனன் 2. துட்டகைமுனு
3. மகாசேனன் 4. வசபன்

8. இலங்கையில் பொலநறுவை இராசதானிக்கு ஜனநாபுரம் எனப் பெயர் சூட்டியோர்

1. சோழர் 2. சேரர்
3. பாண்டியர் 4. நாயக்கர்

9.

- புத்தராஜனின் உதவியுடன் உள்நாட்டு எதிரிகளை தோற்கடித்தல்
- கதிர்காமத்தை தலைமையாகக் கொண்டு ஆட்சியை ஏற்படுத்தல்
- முதன் முதலில் மகாதீத்த துறைமுகத்தில் காவலரண் அமைத்தல்

மேற்குறிப்பிட்ட விடயங்களுடன் தொடர்புடைய பொலநறுவை ஆட்சியாளர்?

1. 1ம் விஜயபாகு 2. 1ம் பராக்கிரமபாகு
3. நிஸ்ஸங்கமல்லன் 4. வீரபாகு

10. துலாபாரம் எனும் தானம் வழங்கும் முறையை ஏற்படுத்திய பொலநறுவை ஆட்சியாளன்

1. 1ம் பராக்கிரமபாகு 2. 2ம் விஜயபாகு
3. 6ம் மகிந்தன் 4. நிஸ்ஸங்கமல்லன்

11. இந்தியாவின் ஸ்ரீமாறஸ்ரீவல்லபன் இலங்கை மீது படையெடுத்து செல்வங்களை கொள்ளையிட்டுச் சென்ற போது இலங்கை ஆட்சியாளன்

1. மகாசேனன் 2. தாதுசேனன்
3. மித்தசேனன் 4. 1ம் சேனன்

**ஆசிரியர் : அகிலன்**

## Grammar

Ex 01: Complete the sentences.

have lunch, have a swim, have a nice time, have a chat, have a cigarette, have a rest, have a good flight, have a baby, have a shower, have a party, have a look

1. I don't eat much during the day. I never .................
2. David likes to keep fit, so he ......................... every day.
3. We ...................... last Saturday. It was great - we invited lots of people.
4. Excuse me, can I .................. at your newspaper, please?
5. 'Where's Jim?' 'He ......................... in his room. He's very tired'.
6. I met Ann in the supermarket yesterday. We stopped and .................................. .
7. I haven't seen you since you came back from holiday. ..............................?
8. Suzanne ......................... a few weeks ago. It's her second child.
9. I don't usually smoke but I was feeling very nervous, so I ............................ .
10. The phone rang but I couldn't answer it because I ................................ .
11. You meet Tom at the airport. He has just arrived. You say:
Hello, Tom ...........................................?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கில்...

ஆரம்பித்துள்ளனர்.

இத் தொழிற்சங்க நடவடிக்கையில் கடந்த 10ம் திகதி தொடக்கம் அலுவலகத்திற்குச் சமூகம் தரும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் களப் பணிகளுக்குச் செல்வதைத் தவிர்த்து வருகின்றனர்.

காத்தான்குடி பிரதேசத்திற்கு பொறுப்பான பொதுச்சுகாதாரப் பரிசோதகர் அப்பிரதேசத்தின் சுகாதாரப் பணிகளை முறையாக முன்னெடுத்த போது எழுந்திருந்த அழுத்தங்களால் உருவாக்கப்பட்ட இப் பிரச்சனையானது குறித்த அலுவலரை ஆரம்பத்தில் மட்டக்களப்பிற்கு மாற்றம் செய்யக் காரணமாகியுள்ளது. இதையடுத்து கிழக்கு மாகாண சுகாதார சேவைப் பணிமனையால் மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்க விசாரணைகளின் பின்னர் குறித்த அலுவலரை குற்றம் கண்டுள்ளதாகவும் அதனடிப்படையில் அவரை கல்முனைக்கு தண்டனை இடமாற்றம் செய்வதாகவும் மாகாண சுகாதார சேவைப் பணிமனை நிர்வாகம் அறிவித்துள்ளது. எனினும் இவ்விசாரணையானது முறையாக மேற்கொள்ளப்படவில்லை என்றும், பூர்வாங்க விசாரணைகளின் பின்னர் நிர்வாகக் கோவையின் படி குற்றச்சாட்டுப் பத்திரம் வழங்கப்படவோ, குறித்த அலுவலரிடமிருந்து அக்குற்றச்சாட்டுக்களுக்காக பதில் பெறப்படவோ இல்லை என்பதுடன் அதன் தொடர்ச்சியாக அவ்வலுவலருக்கு எதிரான அலுவலக விசாரணை மேற்கொள்ளப்படவில்லை என்பதையும் குறித்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் தேசிய சங்கமானது அறிவித்ததை அடுத்து மேல் நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப் படாமையால் கிழக்கு மாகாண பொ.சு.அலுவலர்கள் களப் பணிகளுக்குச் செல்வதைத் தவிர்த்து வருகின்றனர்.

எதிர்வரும் வாரத்தில் இவ்விடயம் தொடர்பாகக் கவனயீர்ப்புப் போராட்டமொன்று கிழக்கு மாகாணச் சுகாதார சேவைகள் அமைச்சிற்கு முன்புறமாக முன்னெடுக்கப்படவுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. கடந்த 29ம் திகதி நடைபெறவிருந்த இப்போராட்டமானது சனாதிபதியின் வருகையை ஒட்டிப் பின்போடப்பட்டிருந்தது.

## பாதீடு- வடக்குகிழக்கு....

நிலைப்பாட்டை தெளிவாக கூறியுள்ள போதிலும் பாராளுமன்றத்திலும், அதற்கு வெளியிலும் அரசாங்கம் எமது யோசனைகளுக்கு பொறுப்புடன் பதில் வழங்குவதில்லை.வாக்குகளை இலக்கு வைத்தே இந்த வரவு செலவுத் திட்டம் சமர்பிக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். இம்முறை வரவு செலவுத்திட்டத்தில் ஒரு சில தரப்பினருக்கு நன்மைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

மக்களின் நலனைக் கருத்திற் கொள்ளாது தேர்தலை இலக்கு வைத்து சமர்பிக்கப்படும் வரவு செலவுத்திட்டத்தில் எமக்கு உடன்பாடில்லை.

நல்லாட்சியை இன்று நாட்டில் காண முடியவில்லை. நீதிமன்றின் சுயாதீனத்தன்மை குறித்து சந்தேகம் எழுந்துள்ளது.

வடக்கு கிழக்கு மக்கள் தொடர்பில் வரவு செலவுத்திட்டத்தில் உரிய கவனம் செலுத்தப்படவில்லை.

வெளிநாட்டு உதவியுடன் சில அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எனினும், அரசாங்கம் சொந்த நிதியில் வட, கிழக்கு மக்களுக்கு எவ்வித அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுக்கவில்லை.

மீன்பிடித்துறை மற்றும் தொழில்நுட்பத்துறை தொடர்பிலான நிதி ஒதுக்கீடுகள் குறித்து திருப்தி அடைய முடியாது.

போரில் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களது வாழ்க்கையை கட்டியெழுப்ப அரசாங்கத்தின் உதவி அவசியமாகின்றது. எனினும், போதியளவு உதவிகள் கிடைக்கப்பெறுவதில்லை.

மீள்குடியேற்றம் என்பது மிகவும் பாரிய செயன்முறையாகும். அதனை உரிய முறையில் மேற்கொள்ள வேண்டும். மீள்குடியேற்ற நடவடிக்கைகளில் பலவேறு குறைபாடுகள் காணப்படுகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு போதியளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை.

அரசாங்கம் குறுகிய அரசியல் லாபத்தை அடிப்படையாகக் கொண்டே செயற்படுகின்றது.

எமது மக்கள் அழிவை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டவர்கள் அல்ல.

எங்களுக்கு போர் செய்ய வேண்டும் என்ற அவசியம் கிடையாது.

தேசிய பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்பட்டிருந்தால் பாரிய அழிவுகளை ஏற்படுத்திய போர் இடம்பெற்றிருக்காது.

வடக்கு கிழக்கு தமிழ் மக்களை அரசாங்கம் இரண்டாம் தரப் பிரஜைகளாகவே நோக்குகின்றது. இது வேதனைக்குரியது.

ஐக்கிய பிளவுபடாத இலங்கைக்குள் தீர்வுத் திட்டமொன்றை எட்ட வேண்டும் என்பதே எமது நோக்கமாக அமைந்துள்ளது. தமிழ் மக்களுக்கு சமவுரிமை வழங்கப்பட வேண்டும்.

எமது நாட்டுப் பிரச்சினைக்கு நாமாகவே தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க வேண்டுமென சம்பந்தன் கடந்த 30ம் திகதி நாடாளுமன்றில் குறிப்பிட்டுள்ளார்.

## மக்கள் குறைகேள்....

சட்டவிரோத மற்றும் மக்கள் விரோத நடவடிக்கைகளையும் அறியத்தரலாம் எனவும் அதற்கான நடவடிக்கைகளை உரிய அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து அலுவலக நடைமுறைகளின் ஊடாக தீர்க்கும் முயற்சியை மக்கள் குறைகேள் அலுவலகம் மேற்கொள்ளும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அறியத் தருபவர்களின் விபரங்கள் மிக இரகசியமாகப் பேணப்படும் எனத் தெரிவித்த மலைமுரசின் ஆசிரியர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கத் தயங்கும் பட்சத்தில் சட்ட நடவடிக்கையை முன்னெடுக்கும் முகமாக இலங்கைச் சட்ட உதவி ஆணைக்குழு மற்றும் மனித உரிமை ஆணைக்குழு ஆகியவற்றின் கவனத்திற்குக் கொண்டு வரவும் அவ்விரு ஆணைக்குழுக்களின் ஊடாக நடவடிக்கையை முன்னெடுக்க முயற்சிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மக்கள் குறைகேள் அலுவலகத்திற்குத் தொடர்பினை ஏற்படுத்த 0262227677 என்ற இலக்கத்தையோ அல்லது 075 4252042 என்ற இலக்கத்தையோ பயன்படுத்த முடியும். கடிதங்கள் " மக்கள் குறைகேள் அலுவலகம், மலைமுரசு, இலக்கம் 159 ஏ, கடல் முகவீதி, திருகோணமலை. என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படலாம் என்பதுடன் இலத்திரனியல் அஞ்சல்கள் mkotco11@yahoo.com என்ற முகவரிக்கோ அனுப்பி வைக்கப்படலாம் என மக்கள் குறைகேள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

## திருமலை....

அவர்கள் திருமலை வளாகத்தில் கடந்த 29ம் திகதி தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

முன்னாள் முதல்வர் மருத்துவர் வர்ணகுலேந்திரனுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை அடுத்து அவர் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டு விசாரணைகளுக்கு முகம் கொடுத்துள்ள வேளையில் அவரை மீண்டும் முதல்வராக நியமிக்க வேண்டும் என வளாக மாணவர்கள் வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

விசாரணைகளின் முடிவில் குற்றமற்றவராயின் முன்னாள் முதல்வருக்கு பணி நியமனம் வழங்கப்படும் என மாணவர்களுக்கு தகுதி வாய்ந்த அதிகாரிகளால் உறுதியளிக்கப்பட்டிருந்த போதும் அதனை ஏற்க மாணவர்கள் முன்வரவில்லை. தற்போது தகுதி வாய்ந்த அதிகாரியின் நியமனத்தை அடுத்து மாணவர்கள் வகுப்புக்களுக்குத் திரும்பியுள்ளதாகத் தெரிகின்றது

## கங்குவேலி...

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் மேற்கு பாலையடிவேட்டை, கருணான்சுவை ஆகிய பகுதிகளில் 251 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

அவர்களுக்கு காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. 1976 ஆம் ஆண்டு தொடக்கம் அவர்கள் அக் காணிகளில் பயிர்ச் செய்கை மேற்கொண்டு வந்துள்ளனர்.

அவர்களுள் பெரும்பாலானோர் முஸ்லிம்களாவர். 1996 தொடக்கம் 2011 வரையிலான ஒரு குறுகிய இடைவெளியைத் தவிர, ஏனைய காலம் முழுதும் அவர்கள் அங்கு தொடர்ச்சியாக பயிர்ச்செய்கை மேற்கொண்டு வந்துள்ளனர். தற்போது அவர்கள் தடுக்கப்படுகின்றனர்.

அரசாங்க உத்தியோகத்தர்களினால் அவர்கள் தடுக்கப்படுகின்றனர். அரசாங்க அதிபரிடமிருந்தும் லவுகல பிரதேச செயலாளரிடமிருந்தும் ஒரு கடிதம் வந்துள்ளது. அவர்கள் அக் காணிகளில் பயிர்ச்செய்ய முடியாதென்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, அந்தக் காணிகளைப் பயன்படுத்தவிடாது அவர்கள் பலவந்தமாகத் தடுக்கப்பட்டுள்ளனர்.

ஏன் இவ்வாறு நடைபெறுகின்றது? ஏன் தென்னன்மரவடியில் இவ்வாறு நடைபெறுகிறது? கங்குவெளியில் ஏன் இவ்வாறு நடைபெறுகிறது என சுமந்திரன் நாடாளுமன்றில் கேள்வி எழுப்பியுள்ளார்.

## இருளில் மூழ்குமா?...

மண்டல புயல் வீசுமெனவும் அதனால் ஏற்படுகின்ற மாற்றத்தால் தூசி, துகள்கள் நிரம்ப போவதால் சூரிய ஒளி பூமிக்கு வருவது தடைப்படும் என்றும் அவர் கூறுகின்றார்.

நாசாவின் தலைவர் சார்ஸ் போல்டன் மேலும் தெரிவிக்கையில்,

இந்த சூரிய மண்டலப் புயலால் பூமி இருளில் மூழ்கினாலும் எந்தவித பாதிப்பும் பூமிக்கு ஏற்படாது. இதற்கு யாரும் அஞ்ச வேண்டியது இல்லை. இது 250 வருடங்களில் ஏற்படப்போகின்ற மிகப்பெரிய சூரிய மண்டல புயலாகும்.

216 மணித்தியாலங்கள் தொடர்ந்து இருள் நீடிப்பதால் ஆறு நாட்கள் பூமியில் மின் விளக்குகளுடனேயே செயலாற்ற வேண்டி வரும் என்று குறிப்பிட்டுள்ளாராம்.

## அஸ்திரம் கணித மாதிரி வினாவிடை வெளியீடு




தரம் 11 மாணவர்களுக்கான கணித மாதிரி வினா விடைகளின் தொகுப்பொன்று கட்டைப்பரிச்சான் ஏ.எம் றைட்வே இன்டியுட்டினால் வெளியிடப்பட்டுள்ளது.

"அஸ்திரம்" எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த





மாதிரி வினாவிடைத் தொகுப்பினை ஆசிரியர் என் பரமானந்தன் எழுதியுள்ளார். இவ்வெளியீட்டு விழா கடந்த 20.10.2014 அன்று மாலை 4 மணியளவில் சம்பூர் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நம்பிக்கை



## நபித்தோழர்கள் நம்பிக்கை கொண்டது போல் நம்பிக்கை கொள்வதே சிறந்த முறையாகும்

"அல்லாஹ்வையும், எங்களுக்கு இறக்கப்பட்டதையும், இப்றாஹீம், இஸ்மாஈல், இஸ்ஹாக், ய:கூப் ஆகியவர்களுக்கும் (இவரது) சந்ததிகளுக்கும் இறக்கப்பட்டவற்றையும், மூஸாவுக்கும், ஈஸாவுக்கும் (மற்றும் ஏனைய) நபிமார்களுக்கும் அவர்களது இரட்சகனிடமிருந்து வழங்கப்பட்டவற்றையும் நம்பிக்கை கொண்டோம். அவர்களில் எவருக்கிடையிலும் நாம் வேற்றுமை பாராட்ட மாட்டோம், நாங்கள் அவனுக்கே முற்றிலும் கட்டுப்பட்டவர்கள் என்று நீங்களும் கூறுங்கள்." (2:136)

இதே கருத்து பின்வரும் வசனங்களிலும் கூறப்படுகின்றன.

"இத்தூதர் தனது இரட்சகனிடமிருந்து தனக்கு இறக்கப்பட்டதை நம்பிக்கை கொண்டுள்ளார். மு:மின்களும் (நம்பிக்கை கொண்டுள்ளனர். அவர்கள்) அனைவரும் அல்லாஹ்வையும், அவனது வானவர்களையும், அவனது வேதங்களையும், அவனது தூதர்களையும் நம்பிக்கை கொண்டுள்ளனர். "அவனது தூதர்களில் எவருக்குமிடையில் வேறுபாடு காட்டமாட்டோம். நாம் செவியேற்றோம்ளூா கட்டுப்பட்டோம்ளூா எங்கள் இரட்சகனே! உனது மன்னிப்பைக் கோருகிறோம். உன்னிடமே மீளுதல் உள்ளது" என்றும் கூறுகின்றனர்." (2:285)

"(நபியே!) நாங்கள் அல்லாஹ்வையும், எங்கள் மீது இறக்கப்பட்டதையும், இப்றாஹீம், இஸ்மாஈல், இஸ்ஹாக், ய:கூப் ஆகியோர் மீதும் (இவருடைய) சந்ததிகள் மீதும் இறக்கப்பட்டவற்றையும், மூஸாவுக்கும், ஈஸாவுக்கும் மற்றும் ஏனைய நபிமார்களுக்கும் அவர்களது இரட்சகனிடமிருந்து வழங்கப் பட்டவற்றையும் நம்பிக்கை கொண்டோம். அவர்களில் எவருக்கிடையிலும் நாம் வேற்றுமை காட்டமாட்டோம். நாங்கள் அவனுக்கே முற்றிலும் கட்டுப்பட்டவர்கள் என்றும் கூறுவீராக!" (3:84). முஸ்லிம்கள் நபி(ச) அவர்களைப் பின்பற்றுகின்ற காரணத்தினால் அவருக்கு முன்னர் அனுப்பப்பட்ட ஈஸா (இயேசு), மூஸா (மோஸஸ்) போன்ற எந்தவொரு இறைத் தூதர்களையும் நிராகரிக்கவோ அல்லது குறைத்து மதிப்பிடவோ கூடாது. எல்லா இறைத்தூதர்களையும் ஒன்று போல் ஏற்று அவர்களுக்குரிய மரியாதையினை வழங்குவதோடு அவர்கள் மீது சுமத்தப்படும் களங்கங்களைக் களைவதும் முஸ்லிம்களின் கடமையாகும்.

தொடரும் -- --



# வாரமொரு ஜோக்

– அருணன் –

வயிற்றில் அறுவை சிகிச்சை செய்து அப்போதுதான் கட்டிலிலிருந்து மயக்கம் தெளிந்து எழுந்த நோயாளி இறைவனே! உனது கிருபையினால் நல்லபடியாக அறுவைசிகிச்சை முடிந்தது. நன்றி என கூறினான்.

இதை கேட்ட அடுத்த கட்டிலில் படுத்திருந்த நோயாளி அதற்குள் அவசரப்படாதே, இங்குள்ள வைத்தியர்களெல்லாம் சரியான ஞாபகமறதிக்காரர்கள், இப்படித்தான் சில நாட்களுக்கு முன் எனக்கும் வயிற்றில் அறுவை சிகிச்சை செய்து பஞ்சு பக்கற் ஒன்றை உள்ளே வைத்து தைத்து விட்டார்கள். அதை எடுப்பதற்காக திரும்பவும் அறுவை சிகிச்சை செய்யப்போகின்றார்கள் என்றான்.

அப்போது மறுகட்டிலில் படுத்திருந்த மற்றுமொரு நோயாளி, இதென்ன பிரமாதம்..! எனது வயிற்றில் ஒரு பெரிய கத்திரிக்கோலையே வைத்து தைத்துள்ளார்கள். அதனால் மீண்டும் அதை எடுப்பதற்கு அறுவை சிகிச்சை செய்யப் போகின்றார்கள் என கூற நமது நோயாளிக்கு அடி வயிற்றை கலக்கத் தொடங்கியது.

அந்த நேரம்பார்த்து அறுவைசெய்த தலைமை வைத்தியர் அங்கு பதட்டத்துடன் ஓடி வந்து ஐயோ! எனது ஐ போனை யாராவது கண்டீர்களா என்றார்.

கட்டிலில் எழுந்திருந்த நமது நோயாளியார் மீண்டும் மயக்கமடைந்து விழுந்து விட்டார்.

**ஹா! ஹா! ஹா!**

சுந்தர் : குரைக்கிற நாய் கடிக்காது. ஏன் தெரியுமா ?.

ஜெயா : ஏன் ? தெரியலையே ?.

சுந்தர் : ஏன்னா, ஒரே நேரத்திலே, அதால இரண்டு வேலைகளை செய்யமுடியாதுல்ல அதுனாலதான் !.

**ஹா! ஹா! ஹா!**

என்னதான் கிளி "கீ கீ" ன்னு கத்தினாலும், அதால ஒரு பூட்டையும் திறக்க முடியாது !.

**ஹா! ஹா! ஹா!**

கதிரேசன் : நான் அடிச்சா தாங்கமாட்ட நாலு மாசம் தூங்கமாட்ட.....

மக்கள்: டாய், நீ அடிச்சா கூட தாங்கிக்கலாம், ஆனா நீ நடிச்சா தான்டா தாங்க முடியல்ல !.



# கண் இமை கருகருவென அடர்த்தியாயிருக்க

புருவங்களில் உள்ள முடி வளர்ச்சிக்கு விளக்கெண்ணெய் மிக முக்கியம். அத்துடன் சம அளவு பாதாம் எண்ணெயும், ஆலிவ் எண்ணெயும் கலந்து சில துளிகள் அரோமா எண்ணெய் ஏதேனும் கலந்து மசாஜ் செய்யலாம். அதனால் அவ்விடங்களில் இரத்த ஓட்டம் அதிகரித்து, ரோம வளர்ச்சியும் அதிகரிக்கும். எண்ணெய் தடவி மசாஜ் செய்வதற்கு முன்பாக, புருவங்களை இரண்டு விரல்களால் மெதுவாகக் கிள்ளி விட வேண்டும். எண்ணெய் மசாஜ் புருவத்தில் முடி வளர உதவுவதோடு, அது அடர்த்தியாகவும் கருமையாகவும் வளரவும் வழி செய்கிறது.

- தினசரி குளிப்பதற்கு முன்பாகப் புருவங்களின் மேல் கொஞ்சம் தேங்காய் எண்ணெயைத் தடவி மசாஜ் செய்து விட்டு, ஊறியதும் குளிக்கலாம். இதுவும் புருவங்கள் அழகாக உதவும்.
- புருவங்களை எப்போதும் திரெடிங் முறையில் அகற்றுவதே நல்லது. சிலர் வாக்சிங் முறையிலும் அகற்றுவதுண்டு. வாக்சிங் செய்வதால் அந்த இடத்துத் தசைகள் சுருங்கித் தொய்ந்து போகக் கூடும்.
- பிளேடு உபயோகித்துப் புருவங்களை ஷேப் செய்வதும் சிலரது பழக்கம். அவசரத்திற்கு அவர்கள் அப்படிச் செய்வதுண்டு. இந்த முறை மிகமிக ஆபத்தானது. அப்படி அகற்றும் போது அந்த இடத்து முடிகள் மறுபடி வளரும் போது ரொம்பவும் திக்காக கன்னாபின்னாவென வளரும்.
- புருவங்கள் நரைத்திருந்தால் மஸ்காராவை உபயோகித்து கருப்பாக்கிக் கொள்ளலாம். மஸ்காரா பிரஷ்ஷை லேசாகக் காய வைத்து நரையை மறைக்கத் தடவலாம். ஐ ப்ரோ பென்சில் உபயோகிப்பதை விட இப்படிச் செய்வது அழகாக, இயற்கையாக இருக்கும்.
- கண்களுக்கு அடிக்கடி ஐ பேட் உபயோகிக்கலாம். கண்கள் குளிர்ச்சியாவதுடன், புருவங்களின் சீரான வளர்ச்சிக்கும் உதவும்.
- புருவங்களின் வளர்ச்சிக்கு லாவண்டர், ரோஸ்மெரி, யிலாங் யிலாங் மாதிரியான அரோமா எண்ணெய்கள் மிகச் சிறந்தவை. அவற்றை சூடு படுத்தாமல் அப்படியே மசாஜ் செய்ய உபயோகிக்கலாம்.

**தேவையான பொருட்கள்**

சால்ட் பிரட் பெரிய சைஸ் - 6, உருளை கிழங்கு வேகவைத்து உதிர்த்தது - 3 கப், கேரட், பீட்ருட் துருவியது - 2 கப், மஞ்சள் பொடி, காரட் பொடி, கரம் மசாலா, உப்பு - தேவையான அளவு, தயிர் (புளிப்பில்லாதது) - 3 கப், சர்க்கரை - 2 தே.க, கொத்துமல்லி பொடியாக நறுக்கியது - 1/2 கப், சீரகப்பொடி – 1கரண்டி, பொரிப்பதற்கு தேவையான அளவு எண்ணெய்



# பிரட் கட்லட்

**செய்முறை**

முதலில் தாச்சியில் 2 தே.க எண்ணெய் விட்டு கடுகு, சிரகம் தாளிக்கவும். நறுக்கிய வெங்காயத்தை நன்றாக வ்தக்கவும். பட்டாணி, கேரட், பீட்ருட் துருவல் சேர்த்து மிதமான தீயில் வதக்கி சிறிது நேரம் மூடிவைக்கவும். பின்பு கரம் மசாலா, காரப்பொடி, மஞ்சள் பொடி, உப்பு இவைகளை சேர்த்து நன்றாக வதக்கியவுடன் உதிர்த்து வைத்திருக்கும் உருளைக்கிழங்கைச் சேர்த்து நன்கு சுருள வதக்கவும். பிரட்டை தண்ணீரில் நனைத்து இரண்டு கைகளுக்குகிடையே வைத்து நன்றாக பிழியவும். இரண்டு பிரட்டிற்கு இடையிலோ அல்லது ஸ்லைஸின் நடுவிலோ காய்கறிகளை வைத்து நன்கு மூடி வைக்கவும் தேவைக்கேற்ற வடிவத்தில் (உருண்டையாகவோ, தட்டையாகவே செய்து, எண்ணெயில் சிவக்கும் பதத்தில் பொரித்தெடுக்கவும்).

தயிரில் சர்க்கரைச் சேர்த்து நன்றாகக் கடைந்து பொரித்து வைத்திருக்கும் கட்லெட் மீது இரண்டு தே.கரண்டி தடவி, அதன் மேல் சீரகப் பொடி கொத்துமல்லி தூவி பரிமாறவும்.




# பாலால் ஆபத்தா!?



சுவீடனில் உள்ள உப்சலா பல்கலைகழக பேராசிரியர் கார்ல் மைக்கேல்சன் தலைமையிலான குழுவினரே, ஆய்வு மேற்கொண்டு முடிவினை வெளியிட்டுள்ளனர்.

இதுகுறித்து கார்ல் மைக்கேல்சன் கூறுகையில், பால் குடிப்பதால் ஏற்படும் நன்மைகள், தீமைகள் குறித்து கடந்த 20 ஆண்டுகளாக ஆய்வு நடத்தினோம்.

61 ஆயிரம் பெண்கள், 45 ஆயிரம் ஆண்களிடம் ஆய்வு நடத்தப்பட்டது. ஆய்வின் முடிவில், தினமும் இரண்டு டம்ளருக்கும் அதிகமாக, அதாவது அரை லிட்டர் அல்லது அதற்கு அதிகமாக பால் குடிப்பவர்களுக்கு பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டு சீக்கிரமே உயிரிழப்பது தெரியவந்தது. பாலில் கலந்திருக்கும் "லக்டோஸ் மற்றும் கிளாக்டோஸ்" என்ற பொருட்கள் (சர்க்கரை தன்மை) காரணமாக, பல்வேறு உடல்நல பாதிப்பு ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்படுவதாகவும் தெரியவந்துள்ளது.

குறைவாக பால் குடிப்பவர்களை விட அதிகமாக பால் குடிப்பவர்கள் விரைவாக உயிரிழப்பதையும் உறுதி செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

# சூன்ய முத்ரா – தியானம்



இக்காலத்தில் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் தலைசுற்றல் பிரச்னை ஏற்படுகிறது. உடலில் ஏதேனும் குறைபாடு இருந்தால் முதலில் தலைசுற்றலில் தான் ஆரம்பிக்கும். இரத்தசோகை உள்ளவர்களுக்கும் இந்த பிரச்சனை ஏற்படும். இக்காலகட்டத்தில் 80 சதவீத பெண்கள் இரத்தசோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் தலைசுற்றல், மனச்சோர்வு ஆகிய பிரச்சினைகள் ஏற்படுகிறது. சூன்ய முத்ரா பயிற்சி செய்வதன் மூலம் தலைசுற்றல் பிரச்னையை சரிசெய்யலாம்.



நடுவிரலை மடக்கி கட்டை விரலை அதன் மீது பதிய வையுங்கள். மற்ற மூன்று விரல்களையும் நேராக நிமிர்த்தி வைத்தல் இதுவே சூன்ய முத்திரை ஆகும். இந்த பயிற்சி தினமும் 45 நிமிடம் செய்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும். இந்த முத்திரை பயிற்சியை செய்வதன் மூலம் காதுவலி, காதில் சீழ் வடிதல், சரியான முறையில் காது கேளாமை போன்ற குறைபாடுகளை இந்த முத்ரா சரி செய்யும்.

அதுமட்டுமில்லாமல் பயண நேரங்களில் வரும் களைப்பு, தலைசுற்றல் ஆகிய பிரச்னைகளுக்கு தீர்வாக இந்த முத்ரா அமைகிறது.



# இவ்வார ராசிபலன்கள்

**மேஷம் :** பணியாளர் கூடுதல் அக்கறையுடன் பணிபுரிய வேண்டும்.

**ரிஷபம் :** தொழில், வியாபாரம் செழித்து, பணவரவு கூடும்.

**மிதுனம் :** குடும்பத்தின் தேவையை, தாராள பணச்செலவில் வாங்கித் தருவீர்கள்.

**கடகம் :** இல்லறத்துணை உங்களின் செல்வாக்கு சமூகத்தில் பெருக உதவுவார்.

**சிம்மம் :** பணவரவு அதிகம் பெற, புதிய வாய்ப்பு கிடைக்கும். நண்பருடன், வாகன பயணத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது.

**கன்னி :** உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். தொழிலில் இடையூறு சரிசெய்வதால், உற்பத்தி, விற்பனை சீராகும்.

**துலாம் :** பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். இல்லறத்துணை கருத்து ஒற்றுமையுடன் நடந்துகொள்வார். பணியாளர் கூடுதல் வேலை வாய்ப்பை ஏற்பர்.

**விருச்சிகம் :** பிணி தொந்தரவு விலகி, உடல்நலம் ஆரோக்கியம் பெறும்.

**தனுசு :** புதிய வீடு, வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. புத்திரரின் செயல் வருத்தம் தரும். எதிர்ப்பான சூழ்நிலையை பூர்வ புண்ணிய பலன் எளிதாக மாற்றி விடும்.

**மகரம் :** வாழ்வில் கிடைக்கிற வசதிகளை அளவுடன் பயன்படுத்துவீர்கள். பூர்வ சொத்து பராமரிப்பில், நம்பகமானவர்களை பணியமர்த்துவது நல்லது.

**கும்பம் :** பணியாளர்களுக்கு சலுகைப் பயன் வந்து சேரும்.

**மீனம் :** அக்கம் பக்கத்தவரிடம் சுமுகநட்பு ஏற்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# விளையாட்டு முரசு

## சிரிக்கட் சுற்றுப் போட்டி

பெரிய கல்லாறு புனித ஜோண்டி பிறிட்டோ கழகத்தின் 40வது ஆண்டு சிறப்பு கிரிக்கற் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி பெரியகல்லாறு பொது விளையாட்டு மைதானத்தில் 26.10.2014 ஞாயிறு அன்று ஜஸ்ரின் ஜீவராஜ் தலைமையில் நடைபெற்றது. 10 உள்ளூர் விளையாட்டுக் கழகங்கள் கடந்த இரு வாரங்களாக லீக் முறையில் மோதி இறுதிப் போட்டிக்கு ஸ்ரார் விளையாட்டுக் கழகமும், நியூ வளர்மதி விளையாட்டுக் கழகமும் மோதின. இவ் இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரார் கழகம் 10 ஓவரில் 8 விக்கட்டுக்களை இழந்து 66 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூ வளர்மதி கழகம் சகல விக்கட்டுக்களையும் இழந்து 65 ஓட்டங்களை மட்டுமே பெற்று 1 ஓட்டத்தினால் தோல்வியைத் தழுவிக் கொண்டது.





## வெற்றி கடினமாயிருக்கும்



இந்தியா போன்ற சிறப்பானதொரு அணியுடன் விளையாடுவதற்கு பூரண பயிற்சி தேவை அதனை மேற்கொள்வதற்கான கால அவகாசம் வழக்கப்படாமையால் இந்தத் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியுமா என்பது சந்தேகமே என இலங்கை அணியின் தலைவர் அஞ்சலோ மெத்யூஸ் தெரிவித்தார்.

ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்பதற்காக நேற்று முன்தினம் இந்தியா சென்றபோதே நிருபர்கள் மத்தியில் அஞ்சலோ மெத்யூஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## கிளிநொச்சியில் உதைப்பந்தாட்ட பேரவை

வட மாகாணத்தில் உதைபந்தாட்டத்தை அபிவிருத்தி செய்யும் முகமாக வட மாகாண உதைபந்தாட்ட அபிவிருத்திப் பேரவை கிளிநொச்சியில் அங்குரார்ப்ணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இவ் வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி கூட்டுறவுச் சபை மண்டபத்தில் வட மாகாணத்திற்கு உட்பட்ட உதைபந்தாட்ட லீக்குகள் இனைந்து இந்த பேரவையை அங்குரார்ப்பணம் செய்து வைத்தன.

## மயங்கிய வீரர் மரணம்



உதைபந்தாட்ட போட்டியொன்றில் பங்கு கொண்டு திடீரென மயங்கி விழுந்த நபரொருவர் பதுளைப் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் போது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். ஹாலி-எல பிரதேச சபை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டியொன்றின் போது இவர் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஹாலி-எல உணுகொல்ல தோட்டத்தைச் சேர்ந்த சிவனேஸ்வரன் என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.



## 16 ஆண்டுகளுக்குப் பிறகு தோல்வி

டபிள்யு.டி.ஏ. பைனல்ஸ் டென்னிஸ் தொடரில் குவித்தோவா அசத்தலாக ஆடி 'ரபோவாவை வீழ்த்தினார். இதன் மூலம் அவர் அரை இறுதிக்கு தகுதி பெறும் வாய்ப்பை இழந்துள்ளார். உலகின் டாப், 8 வீராங்கனைகள் பங்கேற்கும் டபிள்யுடிஏ பைனல்ஸ் டென்னிஸ் தொடர் சிங்கப்பூரில் நடக்கிறது.

## முதல் முறையாக பட்டம்

சிங்கப்பூரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த உலக பெண்கள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டியின் இரட்டையர் பிரிவில் இந்திய வீராங்கனை சானியா மிர்சா, சிம்பாப்வேயின் காரா பிளாக்குடன் இணைந்து பட்டத்தை வென்று சாதனை படைத்தார். 42 ஆண்டு கால பெண்கள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி வரலாற்றில் இந்திய வீராங்கனை ஒருவர் இப்பட்டத்தை ருசித்தது இதுவே முதல் முறையாகும்.

## முன்னாள் காதலியை அடித்ததாக புகார்



மரடோனாவின் முன்னாள் காதலி ரோசியோ ஆலிவா. கடந்த மார்ச் மாதம் துபாயில் தன்னிடம் இருந்த நகைகள் மற்றும் விலை உயர்ந்த பொருட்களை காதலி ஆலிவர் திருடி சென்றுவிட்டதாக மரடோனா குற்றச்சாட்டி இருந்தார். அதோடு பொலிசிலும் புகார் கொடுத்தார். இதற்கிடையே ஆலிவரை மரடோனா அடித்து உதைத்ததாக புகார் எழுந்து உள்ளது. முன்னாள் காதலியை அவர் கையால் அடிப்பது போன்ற வீடியோ அர்ஜென்டினா தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சர்வதேசச் செய்திகள்

### • ஒபாமா முகமூடி அணிந்து கொள்ளை

அமெரிக்காவில் மசாச்சுசெட்ஸ் மாகாணத்தில் சலேம் என்ற நகரில் ஒரு துரித உணவு ஓட்டலில் வியாபாரம் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. அப்போது அமெரிக்க அதிபர் ஒபாமா முகமூடி அணிந்த வாலிபர் ஒருவர் சாப்பிட வந்தார். திடீரென அவர் துப்பாக்கியை காட்டி மிரட்டியுள்ளார். இதனால் அங்கு பதட்டமும் பரபரப்பும்

### • பெண்ணின் மார்பகங்களை ரகசியமாய் போட்டோ எடுத்த கூகுள்



கனடாவின் மொன்றியல் நகரில் உள்ள மரியா பியா கிரில்லோ என்ற பெண் தனது வீட்டின் முன்பு மார்பகங்கள் தெரிவது போல் குறைந்த ஆடைகளை மட்டும் அணிந்து அமர்ந்திருந்தார். இதனை கூகுள் மேப் ஸ்ட்ரீட் வியூ கமெரா ரகசியமாய் படம் பிடித்துக் காட்டி ஒளிபரப்பயுள்ளது. இதை பார்த்து அதிர்ச்சியடைந்த அப்பெண், கூகுள் நிறுவனத்தால் தனது மானம் போய் விட்டதாகவும், தான் மனவுளைச்சலுக்கு ஆளானதாகவும் கூறி, தனக்கு மான நஷ்டமாக 45,000 டொலர்கள் வழங்குமாறு மொன்றியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

ஆனால் வழக்கை விசாரித்த நீதிமன்றம், கூகுள் நிறுவனத்தின் செயல் தவறு என்பதை ஒப்புக்கொண்டாலும், மரியா மனவுளைச்சலுக்கு ஆளாகினார் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என கூறியுள்ளது. எனவே அவருக்கு 2250 டொலர்களை வழங்குமாறு கூகுள் நிறுவனத்திற்கு அந்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

### • உண்மையை ஒத்துக்கொள்கிறார்

ஆப்பிள் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி தான் ஒரு ஓரினச்சேர்க்கையாளர் என்பதை பகிரங்கமாய் பெருமையுடன் ஒப்புக் கொண்டுள்ளார். அமெரிக்காவின் பிரபல நாளிதழ் ஒன்றில் ஆப்பிள் நிறுவன தலைமை அதிகாரி டிம் குக் தனது கருத்துகளை தெரிவித்து கட்டுரை ஒன்றையும் எழுதியுள்ளார்.

### • கட்டாய மதமாற்றமா??

நைஜீரிய நாட்டின் வடகிழக்கு மாகாணத்திலிருந்து 25 பெண்கள் போகோ ஹராம் குழுவினரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. போகோ ஹராம் குழுவினரால் கடந்த ஏப்ரல் மாதம் 200 பெண்கள் கடத்திச் செல்லப்பட்டதுடன் கட்டாய மதமாற்றத்துக்கும் உள்ளாக்கப் பட்டனர்.

### • அடுத்த அமெரிக்க அதிபர் போட்டி ஆரம்பம்

எதிர்வரும் 2016ஆம் ஆண்டுடன் அமெரிக்க அதிபர் ஒபாமாவின் பதவிக்காலம் முடிவடைவதால் அங்கு நடைபெற இருக்கும் அதிபர் தேர்தலில் போட்டியிட தற்போதே தலைவர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்த தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளராக முன்னாள் அதிபர் பில் கிளிண்டனின் மனைவி ஹிலாரி கிளிண்டன் போட்டியிடுவார் என பரவலாக செய்தி வந்துகொண்டிருக்கின்றது.

### • பிறந்து இரண்டே நாளில் கைமாற்றம்

பிறந்து இரண்டே நாட்களான குழந்தை இணையத்தளத்தின் மூலம் 102 அமெரிக்க டொலர்களுக்கு விற்கப்பட்ட சம்பவமொன்று சிலியில் நடைபெற்றுள்ளதாக அந்நாட்டு பொலிஸார் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### • வயிற்றுக்குள் 70 ஆயிரம் டொலர்கள்

ஆப்ரிக்காவில் வயிற்றுக்குள் வைத்து 70 ஆயிரம் அமெரிக்க டொலரை கடத்திய பெண்ணை பொலிசார் கைது செய்துள்ளனர். ஆப்ரிக்காவின் டொமினிகன் குடியரசு நாட்டில் போதை பொருள் கடத்தலை தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. அதன்படி விமான நிலையங்களில் போதை பொருள் தடுப்பு படையினர் தீவிர சோதனைகள் நடத்தி வருகின்றனர்.

### • புதினுக்கு புற்று நோய்

அமெரிக்காவில் இருந்து வெளிவரும் பிரபல பத்திரிகை ஒன்றில் ரீய அதிபர் விளாடிமிர் புதினுக்கு கணைய புற்று நோய் இருப்பதாக செய்தி வெளியிடப்பட்டிருந்தால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இந்த செய்தி ஆதாரமில்லாதது என்றும் இதற்கு கடும் தெரிவிப்பதாகவும் ர்'ய அரசு அறிவித்துள்ளது.

### • பாலஸ்தீனம் தனிநாடாக அறிவிப்பு

இஸ்ரேலின் கடும் எதிர்ப்புகளையும் மீறி பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரித்துள்ளது. இதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பை வெளியிட்டு, சுவீடன் வெளியுறவுத் துறை அமைச்சர் மார்கட் வால்ஸ்டிரம் கூறுகையில், பாலஸ்தீன நாட்டுக்கு அங்கீகாரம் வழங்க அரசு முடிவு எடுத்துள்ளது என்றார்.

### • வீதியில் பாரிய குழி

இரஷ்யாவில் உள்ள பரபரப்பான வீதியொன்றில் திடீரென ஏற்பட்ட பள்ளம் ஒன்றில்வாகனம் ஒன்று சிக்கியதால் ஏற்பட்ட விபத்தில் அதன் சாரதி படுகாயத்துடன் உயிர் பிழைத்தார்.

### • பாம்புகடி – மரக்கட்டை



இங்கிலாந்தில் உள்ள 13 வயது சிறுமி ஒருவரை விஷ பாம்பு ஒன்று அவருடைய காலில் கடித்ததால் பாம்பின் விஷத்தால் அந்த சிறுமியின் கால் கருப்பாக மரக்கட்டை போல மாறிவிட்டது. தற்போது அந்த சிறுமியின் உயிருக்கே அது ஆபத்தாக மாறியுள்ளது.

### • என்னை பெண்கள் கற்பழித்தார்கள்

கமதுரை தெற்குமாசி வீதி மஞ்சனக்காரத் வீதிச் சேர்ந் தவர் அபுதாகிர். தகரப் பட்டறை கூலித்தொழிலாளி. இவரது மகன் ஷேக்முகமது (18). பொறியியல் கல்லூரியில் 2ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பம் படித்து வந்தார். சக மாணவர்களிடமும், வீட்டருகே உள்ளவர்களிடம் நெருங்கிப் பழகும் குணமுடைய இவர், தீபாவளியன்று அதிகாலை 2.10 மணிக்கு தனது பேஸ்புக் பகத்த்தி 'ஸ்வீட் எடு.. கொண்டாடு.' என குறிப்பிட்டு நண்பர்களுக்கு தீபாவளி வாழ்த்து அனுப்பியுள்ளார்.

இந்நிலையில், தீபாவளியன்று ஷேக்முகமது தந்தை அபுதாகிர், தாய் ஷகிலா பேகம், 8ஆம் வகுப்பு படிக்கும் தங்கை ஹாஜிராபானு ஆகியோர் உறவினர் வீட்டுக்குச் சென்றுவிட்டனர். அன்றைய பொழுதை நண்பர்களுடன் கழித்த ஷேக்முகமது இரவு வீட்டில் தனியாக இருந்துள்ளார். இதன்போது, ரத்தக் கறைகளுடன் கூடிய ஒரு இளைஞர் 'மன்னிக்கவும். நான் சாக விரும்புகிறேன்' என்ற சுவரில் ரத்தத்தால் எழுதிக் கொண்டிருப்பது போன்ற புகைப்படத்தை தனது பேஸ்புக் சுயவிபர படமாக இரவு 10.12 மணிக்கு பதிவேற்றம் செய்துள்ளார். மேலும் தன்னுடைய பெயருக்கு கீழே அதிர்ஷடமில்லாத நபர் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இதை நண்பர்கள் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. 28 பேர் கேலிக்கையாக 'லைக்' கொடுத்துள்ளனர். அதன்பின் மறுநாள் காலை நீண்ட நேரமாகியும் ஷேக்முகமது வீட்டைவிட்டு வெளியே வரவில்லை. கையடக்கத் தொலைபேசி அழைப்புக்கும் பதில் அளிக்கவில்லை. சந்தேகமடைந்த நண்பர்கள் வீட்டுக்குச் சென்று பார்த்தபோது, சேலையால் தூக்கிட்ட நிலையில் ஷேக்முகமது தற்கொலை செய்துகொண்டது தெரியவந்தது.

### • எந்த முரண்பாடும் இல்லை

வாடிகன் சிட்டி: இந்த அண்டம் எப்படி உருவானது என்பதை விளக்கும் பிக் பாங் தியரிக்கும், கிறிஸ்தவ மதத்திற்கும் எந்தவிதமான முரண்பாடும் இல்லை என்று போப்பாண்டவர் முதலாம் பிரான்சிஸ் கூறியுள்ளார்.

சூப்பர் பவர் ஒன்றின் மூலமாக அண்டம் உருவாகியிருக்கலாம் என்றுதான் அது சொல்கிறது. அந்த சூப்பர் பவர் என்பது கடவுள் என்பதை யாரும் மறுக்க முடியாது என்றும் பிரான்சிஸ் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை வளாகத்திற்குத் தகுதி வாய்ந்த அதிகாரி நியமனம்



கிழக்குப் பல்கலைக்கழகத்தில் திருகோணமலை வளாகத்திற்குத்திற்கு வளாக முதல்வருக்குப் பதிலாகத் தகுதி வாய்ந்த அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த பல நாட்களாக வகுப்புக்களைப் புறக்கணித்துவரும் மாணவர்களை வழிப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்ட கிழக்குப் பல்கலைக்கழகம் அவற்றில் தோல்வி- யடைந்திருந்தது.

இதேவேளை தற்காலிக முதல்வராகப் பணிநியமனம் பெற்றிருந்த கலாநிதி ரகுராம் அவர்கள் அப் பணிணியிலிருந்து சுயவிருப்புடன் விலக விரும்புவதாகவும் தகுதிவாய்ந்த அதிகாரியொருவரை பல்கலைக்கழகத்திற்கு நியமனம் செய்ய வேண்டும் என்றும் கோரியதை அடுத்தே இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

புதிய தகுதி வாய்ந்த அதிகாரியாக பேராசிரியர் ரஞ்சித் பிறேம்லால் தி சில்வா

13

# பாதீடு – வடக்குகிழக்கு மக்களைப் புறக்கணித்து விட்டது

## சபையில் சம்பந்தன் குற்றச்சாட்டு



2015ம் ஆண்டுக்கான பாதீடு வாக்குகளைக் குறிவைத்து வரையப்பட்ட பாதீடு அப்பாதீட்டில் வடக்குகிழக்கு மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என பாதீட்டு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் திரு.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

"இணக்கப்பாட்டின் ஊடாக தேசிய பிரச்சினைக்கு இறுதித் தீர்வை பெற்றுக் கொள்வதற்கு நாம் அர்பணிப்புடன் செயற்படுகின்றோம். ஒன்றிணைந்த மற்றும் பிளவுபடாத இலங்கை என்ற வரையறையில் அரசியல் தீர்வை பெற்றுக் கொள்ள நாம் தொடர்ந்தும் அர்ப்பணிப்பு செய்கின்றோம். அது கௌரமான மற்றும் நியாயமான தீர்வாக இருக்க வேண்டும். அத்துடன் செயற்படுத்த முடியுமான தீர்வாகவும் அது அமைய வேண்டும். எனினும் நாம் இந்த வேளையில் கவலையுடன் ஒரு விடயத்தைக் கூற வேண்டும். நாம் எமது

13



# திருகோணமலையில் சனாதிபதி தமிழில் உரையாற்றினார்

கடந்த 29ம் திகதி திருகோணமலைக்கு வருகை தந்திருந்த இலங்கையின் சனாதிபதி மஹிந்த இராசபக்ச அவர்கள் அலுவலர்களுக்கு எந்திர உருளிகளை வழங்கும் விழாவின் போது தமிழில் உரையாற்றியிருந்தார். "அன்பர்களே நண்பர்களே உங்களை சந்திப்பதில் சந்தோசம். உங்கள் சேவை மக்களுக்குத் தேவை. முடிந்த வரை உங்களை நாடி வரும் மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கவேண்டும். அதுதான் உங்கள் வேலை, உங்கள் கடமை, உங்கள் பொறுப்பு, இந்த நாட்டில் ஒரே ஒரு அரசுதான் உள்ளது அதன்படி நீங்கள் சேவை செய்ய வேண்டும். இனபேதம், மதபேதம் இருக்க வேண்டாம். அரசியல் வேறு - அபிவிருத்தி வேறு, இதனை எல்லோரும் கவனத்தில் கொள்ள வேண்டும் எல்லோருக்கும் ஒரேமாதிரியான வசதிகளும் இருக்க வேண்டும். வேறுபாடு இருக்க முடியாது. இந்த வருடம் எல்லா கிராம சேவகர் பிரிலும் நனசல ஆரம்பிக்கப் படவுள்ளன. எல்லாக்கிராம பிள்ளைகளும் தொழில் நுட்ப வசதிகளைப் பெறவேண்டும். ஆகவே நீங்கள் எல்லோரும் மக்களுக்கான சேவையை சிறப்பாக செய்யவேண்டும் நான் உங்களை நிற்சயமாக பாதுகாப்பேன். என்று அவர் தமிழில் தெரிவித்தார். (அச்சுதன்)

# அந்நூரியாவில் சனாதிபதி




திருகோணமலை மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி அவர்கள் குச்சவெளி பிரதேச செயலகத்தை திறந்து வைப்பதற்காக 29ம் திகதி வருகை தந்திருந்தபோது குச்சவெளி அந்நூரியா கனிட்ட பாடசாலை மாணவர்களையும் சந்தித்து உரையாடினார். மாணவர்கள் தங்கள் பாடசாலையின் பல்வேறு வளப்பற்றாக்குறைகளை சுட்டிக்காட்டி ஜனாதிபதியின் கரத்தில் மகஜரென்றையும் கையளித்தனர். இதன்போது கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.ஐ.மன்சூர் பிரசன்ன-மாகியிருந்தார். (றபாய்தீன்பாபு)

## தொலைத்தவர் தொடர்புகொள்ளவும்

மட்டக்களப்பைச் சேர்ந்த பாஸ்கரன் மஞ்சுளா என்பவருக்குச் சொந்தமான ஆவணங்கள் சில எ.சிங்காரவேல் என்பவரிடம் உள்ளதால், அவரைத் தெரிந்தவர்களோ அல்லது மஞ்சுளாவோ கீழ் குறிப்பிடப்படும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். எஸ்.சிங்கரவேல் - 0756182967

# புலமைப் பரிசிலில் வென்ற தி-ஷாஹிரா மாணவர்கள்

புலமைப் பரிசில் பரீட்சையில் தி-ஸாகிரா கல்லூரி மாணவர்கள் நால்வர் சிறப்பாக சித்தி பெற்றனர். எச்.அப்ழல் அஹமத் (165) ஏ.அப்ராஸ் (163) என்.ஷஹாமா (175) பி.ரேஷ்மா (168) இவர்களுடன் கற்பித்த ஆசிரியர்களான திருமதி எம்..ஜெயக்குமரன், திருமதி எம்.ஜவ்பீக் அதிபர் எஸ்.முகமத் அலி ஆரம்பப் பிரிவு பகுதி தலைவர் ஏ.ஜெ.எம்.சாலி ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர். (அச்சுதன்)



அச்சு எந்திர மைண்டருக்கு வேலைவாய்ப்புண்டு
தொடர்பு 0777555738

மலைமுரசு
MALAIMURASU

மலைமுரசு வாராந்தப் பத்திரிகை ஶ்ரீராம் பிரதர்ஸ் (குனி) நிறுவனத்தால் 159 A, கடல்முக வீதி, திருகோணமலையில் இருந்து 25.10.2014ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது

உங்கள் கையடக்கத் தொலைபேசியை மீள் நிரப்ப வேண்டுமா? செய்திகளை எமக்குச் சொல்லுங்கள் நாங்கள் மீள் நிரப்புகின்றோம் 0777 555 738

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org